பெரிய எழுத்து

மயில்ராவணன் கதை

[ஜதீகப் படங்களுடன்]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 APR 1955

கிடைக்குமிடம்:

சரஸ்வதி புத்தகசாலை

நெ. 175, செட்டியார் தெரு, கொழும்பு

[இதன் விலை ரூபா 1]

O-,8M,M
N55
112186

சரஸ்வதி புத்தகசாலை

175, செட்டியார் தெரு, கொழும்பு.

மலர்மகள் புத்தக விளம்பரம்

ஸ்ரீ பகவத்கீதை வசனம்

ஸகல லோகரக்ஷகனை திருமால்தானே கிருஷ்ணனாக திருவவதாரஞ் செய்த காலத்தில் "தர்ம ஸம்ஸ்தாப நார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே" என்று சொல்லுகிறபடி அருச்சுனனை வியாஜமாகக் கொண்டு இம்மாநிலத்து மாந்தர்கள் அனைவரும் மகிழ்ந்து உய்யுமாறு வேதாந்தத்தின் ஸாரமாகிய இக் கீதாசாத்திரத்தை பரம கிருபையால் உபதேசித்திருக்கிறார்.

இக்கீதா சாஸ்திரத்திற்கு வடமொழியில் அநேகம் இருக்கிறது என்று யாவரும் அறிந்த விஷயமே. வடமொழியில் இருப்பதைச் சுத்தமாகத் தமிழ் வசனநடையில் ஸ்ரீசங்கரபாஷியத்தைத் தழுவி சென்னை கிறித்தவ கலாசாலை மாஜி தமிழ்ப் பண்டிதர் T. C. பார்த்தசாரதி அய்யங்கார் அவர்களால் எழுதப்பட்டு அழகிய இரண்டு படங்களும் சேர்த்து கடைசியில் தத்வ நாமங்களும் ஆங்கில விளக்கமும் சேர்த்துள்ளன. ஆகையால் ஒவ்வொருவரும் மலர்மகள் விலாச அச்சுக்கூடத்தில் அச்சிட்டதா என்று பார்த்து வாங்கக்கோருகிறேன். சொற்ப பிரதிகளே இருப்பதால் வேண்டுவோர் முந்திக்கொள்ளுங்கள். விலை ரூபா 4 0 0

அஷ்டாஷ்ட மூர்த்தங்களாகிய

சிவபராக்கிரமம்

ஒப்புஒதி முதலீறில்லாத சிவபெருமான் தம் அடியார்க்கு அநுக்கிரகஞ்செய்யும் வண்ணஞ் சகளீகரித்த அறுபத்துநான்கு மூர்த்தங்களே சிவபராக்கிரமம் எனப்படும். இவ்வரிய நூலைச் சிறந்த செந்தமிழ் நடையில் செய்வினை பயின்று பன்னூல்களை உரை எழுதியும், சில நூல்கள் மொழிபெயர்த்தும் விளங்கும் சென்னை கிறிஸ்டியன் காலேஜ் மாஜி தமிழ்ப்பண்டிதரும் சைவப் பிரசாரணருமாகிய ஈக்காடு. இரத்தினவேலு முதலியார் அவர்களால் தமிழ் வசன நடையில் இயற்றி அவ்வவ்வற்புதங்களை நேரிற் கண்டனபோல் விளக்கத்தக்க திவ்ய திருவுருவப்படங்கள் சிற்பநூல் விதி வழுவாது எழுதியமைத்து, முக்கியமான இடங்களில் வேதம், உபநிஷதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய பல வடநூல் மேற்கோள்களும் தமிழ்நூல் மேற்கோள்களும் காட்டி அச்சிட்டு அழகாகப் பயிண்டு செய்துள்ள இந்நூல் இன்றியமையாதது. இதிலுள்ள திருவுருவங்கள் பூசிக்கத்தக்கன. விலை ரூபா 4 0 0

பட்டினத்தடிகள் திருப்பாடற்றிரட்டு பத்திரகிரியார் திருப்புலம்பல்

(விருத்தியுரையுடன்)

எல்லா நிலைகளிலும் உயர்ந்தநிலை துறவறநிலை யென்று நம் முன்னோர் அறிவுறுத்தியிருப்பது எவரும் அறிந்ததொன்றே. அத்தகைய நிலைக்குச் சிறந்த இலக்கியமாக விளங்குபவர் பட்டினத் தடிகள் என்பதை விரித்துரைக்க வேண்டுவதில்லை. பட்டினத்தடிகள் துறவு நிலையைத் தாயுமானருள்ளிட்ட பல சான்றோர் போற்றியிருக்கின்றனர். துறந்தவருள் தலைசிறந்து விளங்கும் பட்டினத் தடிகள் திருவாய்மலர்ந்தருளிய பாடல்களின் மாண்பை அறியாதாரில்லை. அப்பாடல்களை ஓதுவோர் உலகப்பற்றில் வெறுப்பும், கடவுள் பற்றில் விருப்பங்கொள்வர் என்பது உறுதி. அத்துணைச் சிறப்புவாய்ந்த அவர் திருப்பாடல்களை ஓதி உய்யவேண்டுவது ஒவ்வோர் அறிஞர்கடனும். பட்டினத்தார் திருப்பாடல்களைப் பொருளுணராது ஓதுவதனால் பெரும்பயன் விளைதல் அரிது. அக் காரணம்பற்றிக் கற்றவர்க்கும் மற்றவர்க்கும் பயன்படவேண்டிப் பட்டினத்தார் திருப்பாடற்றிரட்டுக்கும், பத்திரிகிரியார் திருப்புலம்பலுக்கும், ஸ்ரீமான். திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களைக்கொண்டு எளிய நடையில் பல மேற்கோள்களடங்கச் சிறந்த விருத்தியுரை எழுதுவித்து அவை யடங்கிய நூலை நாம் வெளியிட்டுள்ளோம்.

அந்நூல் உயர்ந்த காகிதத்தில் பிழையறச் சுத்தமாக அச்சிடப்பட்டிருக்கிறது. ஸ்ரீமான் முதலியார் தமிழ்நாட்டுக்கு நன்கு தெரிந்தவராதலால் அவர் எழுதிய உரையைப்பற்றி நாமொன்றும் இங்கே விரித்துக் கூறவேண்டுவதில்லை. புத்தகத்தை வாங்கி வாசித்தால் அதன் நிலையும் தன்மையும் செவ்வனே விளங்கும். பட்டினத்தடிகள் திருவுருவப்படத்துடன் ஆங்காங்கு ஐதீகப்படி அரும்படங்கள் சேர்த்து உயர்ந்த காலிகோ பயிண்டு செய்தது. இதன் விலை ரூ. 4.

அனுபோகசாதக ரகசியம்

மனிதர்களுக்கு எல்லா விஷயத்திலும் உதவியாக இருப்பது சாதகமே தவிர வேறொன்றும் கிடையாது. வேதத்தின் ஆறு அங்கங்களின் ஒன்றான ஜோதிஷ சாஸ்திரத்தின் உதவியில்லாவிடில் நம்முடைய நித்திய கர்மானுஷ்டானங்களை சரிவர நடத்த இயலாது. இந்த சாஸ்திரத்தை 18-மஹரிஷிகள் செய்திருக்கின்றனர். ஸப்த ரிஷிகள் திருவாய்மலர்ந்தருளிய "அநுபோக ஜாதக ரகசியம்" என்னும் இந்நூலை செஞ்சி. எகாம்பர முதலியார் அவர்கள் ஏற்கெனவே எழுதியதை காவேரிப்பாக்கம். தெய்வசிகாமணி சோதிடரால் பரிசோதித்து சில அவசியமான அம்சங்களைச் சேர்த்தும் நூதன முறையில் எல்லோருக்கும் பயன்படுமாறு அச்சிடப்பட்டிருக்கிறது.

விலை ரூபா 2 8 0

முருகன் புகழ்மணி மாலை

இதில் முருகப்பிரானுடைய விஷயங்களை அறிந்து பாராயணம் செய்வோர்க்கு, திருமுருகாற்றுப்படை, கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி, கந்தர் சஷ்டி கவசம், கந்தர் கலிவெண்பா முதலிய அநேக நூல்கள் சேர்த்து அழகிய 2-கலரில் டைடல்பேஜ் அச்சிட்டிருக்கிறது. விலை அணா 12.

பெரிய வருஷாதி நூல்

இருக்கு வேதத்தின் சாரமான சோதிட சாஸ்திரத்தை யாவரும் எளிதில் உணருவதற்குச் சுலபமான அறிகுறிபோன்ற பெரிய வருஷாதி நூல் என்னும் இந்நூலை விருதுபட்டி பாலய்யாவென்றும் இராமலிங்க சுவாமிகளென்றும் வழங்குகின்ற ஸ்ரீமான் இராமலிங்கக் குருக்கள் அவர்களால் அச்சிட்ட பிரதிக்கிணங்க சுத்தமாக அச்சிட்டு வெளியிட்டுள்ளது. இப்புஸ்தகம் ஒவ்வொரு சோதிடர்களிடத்திலும் முக்கியமாய் இருக்கவேண்டிய புஸ்தகம்.

விலை ரூபா 3 0 0

அகஸ்தியர் பஞ்சபக்ஷி சாஸ்திரம் மூலமும்-விருத்தியுரையும்

ஆதியில் அருந்தமிழ் ஓதிவைத்த அகஸ்தியமகாமுனிவர் அருளிச்செய்த பஞ்சபக்ஷி சாஸ்திரமாகிய இவ்வரிய நூல் இதுவரையில் மூலமாக இருந்ததை பண்டிதசாஸ்திர வல்லவராகிய காவேரிப்பாக்கம். மார்க்கலிங்க சோதிடர் குமாரர் தெய்வசிகாமணி சோதிடரால் நூதன விருத்தியுரை எழுதிவைத்தும், அதனுடன் விடுபட்டுப்போன பஞ்சபக்ஷி படங்கள் கணித ஆரூடசக்கரம் காலசக்கரம் பூர்வபக்ஷம் வாரம் 1-க்கு 10-நாழிகைக்கு உரிய பக்ஷிகள் வருமுறை சக்கரம் நக்ஷத்திரம் அமைத்து சுத்தமாக அச்சிட்டிருக்கிறது. இதில் யோகசாதனம் அடைபவர்களுக்கு உபயோகமாக சங்கரனர் உமையவளுக்கு உபதேசித்த ஞானசாநூல் மூலமும்-உரையும் சேர்த்துள்ளன. விலை ரூபா 2 8 0

32 - கட்டளைத்திரட்டு

வைதிக ஞானசாஸ்திரங்களில் பழகுவோர்கட்கு உபயோகமாகச் சாத்திர பாரங்கதராயுள்ள நற்சிலர்கள் பற்பலர் அவ்வக்காலங்களில் எளிய நடையில் சாத்திர சோபான நூல்களாக இயற்றிவைத்த சிறு நூல்களின் திரட்சியே இக் கட்டளைத்திரட்டு. இதுகாறும் வெளிவராத சில அருமையான கட்டளைகளை சித்தாந்த சரபம் அஷ்டாவதானம் பூவை-கலியாணசுந்தர முதலியார் அவர்களால் சேர்க்கப்பட்டு அச்சிட்டிருக்கிறது. விலை ரூபா 2 8 0

அறுசீரடி யாசிரிய விருத்தம்

நாடிய பொருள் கைகூடும் ஞானமும் புகழு முண்டாம்
வீடியல் வழிய தாக்கும் வேரியங் கமலை நோக்கும்
நீடிய வரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலையி ராமன் றோள்வலி கூறு வோர்க்கே.

கட்டளைக்கலித்துறை

வடகலை தென்கலை வடுகு கன்னட
மிடமுள் பாஷை யாதொன்றி னாயினும்
திடமுள ரகுகுலத் திராமன் றன்கதை
அடைவுடன் கேட்பவ ரமர ராவரே.

இதுவுமது

நன்மையுஞ் செல்வமு நாளு நல்குமே
தின்மையும் பாவமுஞ் சிதைந்து தேயுமே
சென்மமு மரணமு மின்றித் தீருமே
இம்மையே ராமவென் றிரண்டெ ழுத்தினால்.

கதையின் வரலாறு

இந்த மயிலிராவணன் என்கிற இராட்சதனுடைய சரித்திரத்தைச் சிற்றறிவீனனாகிய யான் கதை சொல்லப் போகிறேனென்று நாரதமகாமுனிவர் கௌதமரிஷிக்குத் தமிழில் மொழிபெயர்க்கத் தொடங்கினார். கேளும் ஐயா கௌதமரிஷியே! ஆதிகாலத்தில் ஸ்ரீராமரானவர், தென்னிலங்கை என்கிற பட்டணத்துக்கு அரசனாகிய இராவணனைச் சம்மாரஞ் செய்யும் பொருட்டாக எழுபதுவெள்ளஞ் சேனையுடனே தண்டு திரள்களோடு சுவாமியானவர் சமுத்திரக்கரையிலே போய் இறங்கிச் சேதுவை அணைகட்டி தென்னிலங்கைக் கரையிற் சென்று, இராவணனுடனே போர் புரிந்துக்கொண் டிருக்குங்காலத்தில், * அதிகாயன்

* அதிகாயன் இராவணனுடைய மக்களிலொருவன், கிகும்பன் கும்பகர்ணன் மகன்.

மலர்மகள் பதிப்பு

ஸ்ரீராமஜெயம்

மயிலிராவணன் கதை

6-,8M,N
N55

காப்பு விநாயகர் தோத்திரம்

கலிவிருத்தம்

அயிலும் வில்லு வில்லாகு மந்திரமும்
பயிலு மாபலம் பாரிற் படைத்தவன்
மயிலி ராவணன் மாகதை வழுத்திட
கயிலை மேவுங் கணபதி காப்பதாம்.

பன்னிருசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

கொங்கணங்கன்னட மீழமராடங் குருதங்கலிங்கம்
குருநாடக்கையு ரோமைசலகமிடு குச்சரிமச்சரியம்
வங்கம்மாளவக வாரணமாகதமகரங்காய்ப்பீலி [கோவை
மலையாளங்கோவைத் துரைடில்லி வழங்குப்பைங்
சிங்களவெங்குந் துதிசெய்யும் ஸ்ரீராமன்கதையை
ஜெகதலமதில்வாழ் மானிடசெல்லாஞ் சிந்தைகளித்தன்பாய்
சங்கப்புலவோர் கூறியவாறே தமிழிற்கதைசெய்தேன்
தனிமாபாரத மெழுதியவேங்கடராயன்ருள்சரணே.

பெரிய எழுத்து

ஜதீகப்படங்கள் அடங்கிய

மயிலிராவணன் கதை

அமரம்பேடு. இராஜாரத்தின முதலியார்

மலர்மகள் விலாச அச்சுக்கூடம்

1955

இதன் விலை ரூபா 1

முகவுரை

கடல் புடைசூழ்ந்த நெடிய வுலகத்திலே இராமாயணம் என்று கூறத்தக்க இந்த வசனகாவியமானது மானிடருக்குச் சித்தி - முத்தி - பக்தி - வைராக்கியங்களைத் தருதலானும், ஆணவம் - மாயை - காமியம் என்னும் மும்மலங்களை நீக்கலானும், மெய் - வாய் - கண் - மூக்கு - செவி என்னும் ஐம்புலன்களைப் பரிசுத்த மாக்கலானும், சுவை - ஒளி - ஊறு - ஓசை - நாற்றம் என்னும் ஐம்பொருள்களைக் கொடுக்கலானும், பிறவிப் பிணிகள் தீர்க்கலானும், அதிக சிறப்பு உடையதாய் நீடு புகழ் ஓங்கி நின்றது.

மகாமாயன் நிகும்பன் அகம்பன் கும்பகர்னன் சம்பு மாலி இந்திரஜித்து முதலான பற்பல அரக்கர் சேனை களும் இரணக்களத்திலே கால்வேறு கைவேறு மெய்வேறு துடைவேறு இடைவேறு முழங்கால் வேறு கணுக்கால்வேறு இப்படி நாலுவிதமாக வீராதிவீரனாகிய இராவணனுடைய பிள்ளைகளும் இராட்சதசேனைகளும் பலவாறாகச் சிதைந்து மாண்டு போனார்கள்.

இந்த விசேஷமெல்லாம் இராவணன் கேட்டு கையிலிருந்த ஆயுதங்களைக் கீழேபோட்டு திடீரென்று சிங்காதனத்தின்மீதி லிருந்தபடியே பூமியில் விழுந்து அதிக விசாரத்தோடு மூர்ச்சை யடைந்தான். சற்று நேரம் சென்றபின் மறுபடியும் இராவணன் மூர்ச்சை தெளிந்து எழுந்து அழுது, கடவுளைத்தொழுது மனமென்கிற வில்லைக் குழைத்து, மந்திரிமார்களை யழைத்து, வாருங்கள் மந்திரிமார்களே! இராமலட்சு மணனென்கிற இரண்டு மனிதரும் அநேக வானர சேனையோடுகூடி ஓடிவந்து யுத்தங்களானவிடத்திலே அதிகாயன் மகாமாயன் நிகும்பன் அகம்பன் கும்ப கர்னன் சம்புமாலி இந்திரஜித்து மயேந்திரஜித்து முதலிய தம்பிமாரும், அநேக புத்திரர்களும் இரதகஜ துரக பதாதிகளும், யானையும் சேனையும் இழந்தது மாத்திரம் என்ன புதுமையுடையது? இந்தப் பொல் லாத காயமானது நில்லாமலும், ஒருத்தரோடு சொல் லாமலும் போகுமென்று எல்லாரும் அறிவது போல் நாமும் அறிந்திருந்தும் தம்பிமார்களை யிழந்து தனியாயிருந்து அரசாட்சி செய்வதெப்படி? என்று விசனப்படுகிறபோது, மந்திரிகள் ராவணேஸ்வரனைப் பார்த்து, ஓகோ வாருமையா சுவாமி! நீரே இப்படி விசனப்பட்டால் அடியேங்கள் எப்படி பிழைப்போம்? இனிமேலாகிறதென்ன? இப்போது லங்கையிலுண் டான யானை சேனை ஒட்டகமுதல் படைகளையுங்கூட்டி இந்த இராமலட்சுமணனுக்கு எதிராகக் காட்டி, நம் முடைய சௌரியங்களைக் காட்டி, வானரசேனைகளை வாட்டி, மிதமாக எண்ணி அதைப்பண்ணி வருவோம். அஞ்சாதே சுவாமியென்று தைரியங் கூறினர். இது

கமலமாமுனிவர் அருளிச்செய்த

அ ஸ் த ரே ரை க சா ஸ் தி ர ம்

மூலமும் - விருத்தியுரையும்

(ப ட ங் க ளு ட ன்)

இவ்வுலகின்கண் சகல ஜீவராசிகளிலும் மேலான ஜென்மத்தைப்பெற்ற நாம், பயன்படும்படி கீர்த்திவாய்ந்த பதினெண் சித்தர்கள் நம்மீது கிருபைவைத்து சரியை கிரியை யோகம் ஞானம் மணிமந்திரம் வைத்தியம் சோதிடம் என வகுத்து தேகத்திலுள்ள ரேகைகளைப் பார்த்து பலாபலன் சொல்லக்கூடிய சாஸ்திரங்கள் ஏராளமாய் எழுதிவைத்து இருக்கின்றார் எனினும் அதில் சொல்லும் பலாபலன்களை அறிய சிலருக்கு இருளாக இருந்ததை உத்தேசித்து சாமுத்திரிகா லக்ஷணத்தை எடுத்து ஓதுவதற்கு வேண்டி காவேரிப்பாக்கம் தெய்வசிகாமணி சோதிடரால் செந்தமிழ் நடையில் விருத்தியுரை எழுதி தங்கள் தங்கள் பலாபலன்களை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிந்துக்கொள்ளும்படி ரேகை படங்களுடன் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை ரூபா 4 0 0

திருப்புகழ் விருத்தியுரை

'திருப்புகழ்' முத்தமிழ்ப் புலமையும் வித்தகக்கவியும் வல்லவரும், மெய்ஞ்ஞானனுபூதிச் செல்வருமாகிய அருணகிரிநாதரால் அருளிச் செய்யப்பட்ட மிகச் சிறந்த நூலென்பது யாவருமறிந்ததொன்று. அது செந்தமிழ் இலக்கியச் செறிவும் இலக்கணவமைதியும் சாத்திரப்பொருள் அடக்கமும் பெற்றிருத்தலோடு வடமொழிக் கலப்பும் பெரிதும் உடையதாய் உளது. அன்றியும் சந்தப்பாட்டாதலின் அதன் இன்பம் நோக்கிச் சொற்கள் திரித்தும் பெய்துரைக்கப் பட்டுள்ளன. அல்லதூஉம் பாட்டுக்கள் பல பாடபேதங்களோடும் ஆங்காங்குச் சிதைந்து பொருள் புலப்படாநிலையிற் காணப்படுகின்றன. அதனால் திருப்புகழுக்கு உரை வகுப்பது ஒரு கடினவேலையென்பது எல்லாருக்கும் இனிது விளங்கும். அத்தகைய நூலை ஒருவாறு உரையெழுதி அச்சிடவேண்டுமென்று எண்ணி முதல் 100-பாடல்களுக்கு சென்னை பச்சையப்பன்காலேஜ் தமிழாசிரியரும் 'செந்தமிழ்ச் செல்வி' பத்திராசிரியரும், 'பாவலராற்றுப்படை - புலவர்கதை - இராஜராஜன்' முதலியவற்றின் நூலாசிரியருமாகிய திருவாளர் மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்களால் பலவிடங்களில் தக்க மேற்கோள்களை எடுத்துக் காட்டியும், சொல்நயம், பொருணயங்களை விளக்கியும், பொருளை ஒழுங்குபடுத்தித் தூய்மை செய்து எழுதப்பெற்று சுத்தப்பிரதியாய் வெளியிடப்பட்டிருக்கிறது. விலை ரூபாய் 3 8 0

மூலமந்திர சக்கரங்கள் அடங்கிய

மலையாள மாந்திரீக ஹரிச்சுவடி

[வேலாயுதசுவாமிகள் எழுதியது]

இந்நூல் மலையாள சுவாமிகள் மாணாக்கரால் எழுதப்பட்டது. இதில் விநாயகர், சுப்பிரமணியர் பூஜை, சகலதோஷம் குளிதோஷம் தேள் சுளுக்கு முடிகயிறு முதலியவசியமும், அதற்குத் தகுந்த சக்கரங்களும், நவக்கிரகங்கள்வசியமும், வாலை பஞ்சாக்ஷரி வயிரவர் மோகினி அஷ்டலக்ஷ்மி, அனுமார், காட்டேரி, நரசிம்மசுவாமி, அக்னிமாடன், முச்சந்திதோஷநிவர்த்தி, அஷ்டதிக்கு பந்தனம், வீரபத்திரசுவாமி, மயானருத்திரன், மதுரைவீரன், சத்திவசிகரம், அந்திதோஷம், உச்சிதோஷம், பேய் பிசாசுகளைக்கட்ட, கழிப்பு, முனிகளை ஓட்ட மந்திரங்களும் இன்னும் தங்கள் பரம்பரையார் கையாண்டுவந்த வர்த்தகம், உத்தியோகம், விரோதி வசிய சக்கரங்களும் சேர்த்து வெளியிட்டுள்ளது. இந்நூல் ஒவ்வொருவரும் மிக எளிதாகக் கற்றுக்கொள்ளுவதற்கு அருமையான நூல்.

இதன் விலை அணா 6.

புலிப்பாணி வைத்தியம்-500

போகர் மாணாக்கராகிய புலிப்பாணி முனிவர் பாடியவைத்தியம்-500 என்னும் புத்தகத்தை தக்க வைத்தியர்களைக்கொண்டு சுத்தமாகப் பிழையின்றி அச்சிடப்பட்டிருக்கிறது. ஆகையால், ஒவ்வொருவரும் "மலர்மகள் விலாச அச்சுக்கூடத்தில்" பதிப்பித்தது என்று பார்த்து வாங்கக் கோருகிறேன். விலை ரூபா 1.

ஸ்தோத்திரத் திரட்டு

இதில் ஆலய தரிசனவிதி, சைவசமயம் சைவசமயி அநாசாரம், திருக்கோவிலில் செய்யத்தகாத குற்றங்கள், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம், திருமந்திரம், திருப்புகழ் முதலியவைகளைச் சேர்த்து எட்டுஅழகிய கலர் ஆப்டோன் படங்களுடன் சிறந்த முறையில் அச்சிட்டிருக்கிறது.

விலை ரூபா 2 0 0

சோதிட ஹரிச்சுவடி 4-பாகம் அடங்கியது

இந்நூல் ஒவ்வொரு சோதிடர்களும் உபயோகப்படுத்தும்படியான முறையில் 1-வது பாகம், 2-வது பாகமும், கே. எஸ். மூர்த்தி அவர்களால் எழுதப்பட்டு டி. எஸ். பார்த்தசாரதி முதலியார் பி.ஏ. அவர்களால் பரிசோதித்ததும், 3-ம் பாகமும், 4-ம் பாகமும், காவேரிப்பாக்கம். கே. எம். தெய்வசிகாமணி சோதிடரால் எழுதப்பட்டு ஒன்றா சேர்த்து பயிண்டு செய்யப்பட்டுள்ளது.

விலை ரூபா 2 8 0

S.M.M

புஸ்தக விளம்பரம்

ஔவைக்குறள் மூலமும் - விருத்தியுரையும்

இந்நூல் வரகவிகளில் சிறந்த ஔவையாரருளிய ஆன்மஞான நூல். இது திருக்குறளைப்போல பண்டிதர்களும் பாவலர்களும் உரையெழுதக்கூடியதன்று. இது ஆன்மஞான சாதனைகளைப் புகட்டும் நூல். ஆன்மஞான இன்பத்தை அவாவி அம்மெய்ச்சுகத்தில் ஈடுபடும் மெய்யன்பர்களுக்கே இது பெரிதும் பயன் அளிக்கும். இத்தகைச் சிறப்புவாய்ந்த நூலுக்கு சென்னை பிரம்ம வித்தியாசங்கஸ்தாபகரும், அச்சங்கத்தின் குருவுமான ஸ்ரீலஸ்ரீ ஈ. சுந்தரமாணிக்க யோகீஸ்வரர் அவர்கள் தாம் 50-ஆண்டுகளாய் உழைத்துப்பெற்ற சிறந்த ஆன்மஞான அநுபவத்தைக்கொண்டு உரை எழுதியது. இதில் வியோமசக்கரம் அல்லது குண்டலி என்னும் படமும் விநாயக சொரூபபடமும் ஆகிய இரண்டு படங்களுடன் உரையாசிரியர் படமும் சேர்த்து சுத்தப்பிரதியாய் அச்சிடப்பட்டிருக்கிறது. இதன் விலை ரூபா 2 0 0

மாட்டுவாகடம்

உலகத்தில் மனிதர்கள் சுகஜீவிகளாய் வாழ்வதற்காக மாடுகளையும் பசுக்களையும் கடவுள் சிருஷ்டித்துள்ளார். மாடுகள் பசுக்கள் இவைகளின் குணகுணம், பாதுகாக்கத்தக்க முறை, வியாதிவந்தால் அவற்றிற்கு செய்யவேண்டிய சிகிச்சை முதலிய பலவற்றையும் உணருமாறு 'காலி பரிபாலன சிகிச்சாதீபம்' என்கிற மாட்டுவாகடம் என்னும் இந்நூல் யந்திரங்களுடன் அச்சிட்டு தயாராயிருக்கிறது. மாடுகளைப்பற்றிய சாஸ்திரம் இந்துக்களுக்கிருந்தும் அப்பியசிக்கப்படாம லிருப்பதால், இக்குறையை நிவர்த்திக்குமாறு சர்வ ஜனங்களும் எளிதில் வாசித்து உய்யும்பொருட்டு திருநெல்வேலி தா. நெல்லையப்பபிள்ளை அவர்கள் இயற்றியதுடன், மதுரை க. குப்புசாமிநாயுடு அவர்களால் பற்பலஏடுப் பிரதிகளைக்கொண்டு யாவரும் எளிதில் அறிந்துகொள்ளும்பொருட்டு பிழையறச் சீர்திருத்தி சுத்தமாக அச்சிட்டு இருக்கிறது. ஆகையால் ஒவ்வொருவரும் '...களபதிப்பா' என்று பார்த்து வாங்கக் கோருகிறேன்.

மாட்டுவாகடம் விலை ரூபா 2 8 0

அசுவசாஸ்திரம் விலை ரூபா 2 8 0

...ண்டும் சேர்ந்தது கலிகோ பயிண்டு 5 0 0

...ADU ARCHIVES LIBRARY
112186

கிடைக்குமிடம்:

சரஸ்வதி புத்தகசாலை

175, செட்டியார் தெரு, கொழும்பு.

மயிலிராவணனை அழைத்து எவ்விதத்திலிலேயும் இராமலட்சுமணரை ஜெயிக்கவேண்டும் என்று பிரகஸ்தன் என்கிற மந்திரிகூற, இராவணன் செவியிலே மாமரத்தில் வயிர ஆணி கடாவினாற்போலும் ஏறிற்று.

இராவணன் இது மெய்தான்; நல்ல யோசனை செய்தீர் என்று பிரகஸ்தனுக்கும் வேண்டிய வெகுமதி கொடுத்து கனகாபிஷேகஞ்செய்து, பின்பு இராவணன் சீக்கிரத்திலே மயிலிராவணன் வரத்தக்கதாக மனதில் நினைத்தான். அப்போது பாதாள இலங்கையிலே தேவேந்திரன்போல் கொலுவிருக்கிற மயிலிராவணன் யோசனைசெய்து நம்முடைய தமையனாகிய இலங்காபுரியை யாள்கின்ற இராவணேஸ்வரனுக்கு என்ன ஆபத்து வந்ததோ தெரியாது; அவன் வெகுநாளாக நம்மை நினைத்ததில்லை. ஆதலால் என்ன வேலையிருந்தபோதிலும் இப்போதே போய் உதவிசெய்ய வேண்டும் என்று மனதில் எண்ணி யோசனை செய்து மந்திரிகளை யழைத்து, அப்பா! நான் இலங்கைக்குப் போய் வருகிறேன்; நான் வருமளவும் நீங்கள் சாவதானமாகப் பார்த்திருங்கள் என்று சொல்லிவிட்டு மயிலிராவணன் இலங்காபுரி பட்டணத்துக்கு வந்து விட்டான். அந்த இலங்கையின் அதிசயமெல்லாம் பார்த்தான். எல்லாம் பாழாயிருப்பதைப் பார்த்துக் கொண்டு அந்தப்புரம் போனான். இராவணன் ஒருவனாய் இருக்கிறதைக் கண்டு, மயிலிராவணன் தமையனாகிய இராவணேஸ்வரனுக்குச் சாஷ்டாங்க தெண்டனிட்டு ஒருவார்த்தை சொல்லுகிறான். வாரும் ஐயா சுவாமி! உமது பட்டணமெல்லாம் பாழாயிருப்பது என்ன? இதுவெல்லாம் உண்மையாகச் சொல்லவேண்டும் என்று அஞ்சலிசெய்து கேட்க, இராவணன் சொல்லுகிறான்.

வாரும் பிள்ளாய் தம்பி! முன்னாலே தசரதமகாராஜாவினுடைய பிள்ளையாகிய இராமலட்சுமணரிருவரும் தண்டகாரணிய வனத்திலே வந்திருந்தார்கள். அப்போது நமது தங்கை சூர்ப்பநகையைப் பங்கம் செய்தார்கள். அவள் இங்கேவந்து முறையிட்டாள்.

அப்போது நான்போய் அந்த இராமனிட தேவியான சீதையை எடுத்துக்கொண்டு வந்தேன். அன்றுமுதல் இலங்கையிலே அனர்த்தம் வந்தது. பின்னர் அனுமார் என்ற குரங்கு சீதையைப் பார்க்கவந்தவிடத்திலே பட்டணமெல்லாஞ் சுட்டுக் கோட்டையைப் பாப்பி அட்சயகுமாரனையும் கொன்று அநேக இராட்சதரை யுங் கொன்றுவிட்டுப் போயிற்று. பின்பு இராமசுவாமி அவர் தம்பி இலட்சுமணன் இன்னுஞ் சுக்ரீவன் அங்கதன் நீலன் குமுதன் சாம்புவன் அனுமார் முதலிய எழுபதுவெள்ளஞ் சேனையையுங் கூட்டி சேதுவை அணைகட்டி இலங்கையிலே வந்து யுத்தங்கள் செய்து அவர்களால் நமது அதிகாயன் மகாமாயன் இந்திரஜித்து கும்பகர்னன் இன்னு மநேக இராட்சதர்களும் மாண்டுபோனார்கள் என்று சொன்னமாத்திரத்திலே, இந்த வசனங்களை மயிலிராவணன் கேட்டு மிகவும் துயரப்பட்டு சகோர பட்சியால் கிளைகள் இலைகள் பழங்களுடனே இருக்கப்பட்ட விருட்சமானது அடியோடே அறுந்துவிட்டால் எவ்வாறு விழுமோ அவ்வாறுபோலக் கீழேவிழுந்து கடவுளைத்தொழுது அடிபணிந்து கோரந்தணிந்து ஒருவாறு மனந்துணிந்து சொல்லுகிருன்.

வாரும் சுவாமி! நீர் சகலரையுங் கொன்று வென்று சுவர்க்கத்துக்கு அனுப்பினபின்பு என்னையழைத்தீர். முன்னதாகவே எனக்கு இவ்விதமென்று தெரியாமற்போயிற்றே. இப்போது நான் செய்யவேண்டியது என்ன? என்றுகேட்க, இராவணன் கூறுகிருன். கேளும் பிள்ளாய் தம்பி! இராமலட்சுமணுள் இரண்டு பேரும மகா பராக்கிரமசாலிகள். அவர்கள் வானர சேனைகளுடனே நம்முடைய தம்பி விபீஷணனையும் அழைத்துக்கொண்டு இலங்கை யெல்லாஞ் சுட்டு அனர்த்தஞ் செய்துவிட்டார்கள். அந்த இராம லட்சுமணுளை ஒருவராலேயும் ஜெயிக்க முடியாது. அநேகமான யுத்தங்கள்செய்து இராமபாணத்தின் முன்பாக நிற்கக்கூடாமல் முறிந்தோடி வந்தேன். அவர்கள் மனித ரூபமாய் இருக்கவில்லை, அவர்களைச் சம்மாரஞ்

செய்ய எவ்வித உபாயமுண்டோ அவ்வித வுபாயஞ் செய்யும் பிள்ளாய் என்று இராவணன் சொல்ல, மயிலிராவணன் சொல்லுகிருன். கேளும் ஐயா சுவாமி! அந்த எழுபதுவெள்ளஞ் சேனையையும் இராம லட்சுமணுள் இரண்டுபேரையும் ஆகாயமார்க்கமாய் அதிவிநோதத்துடன் கொண்டுபோய் பாதாளலங்கையிலே என்னுடைய காளிகாதேவிக்குப் பலிகொடுக்கிறேன் என்று சொல்லி உறுதிசெய்துக்கொண்டு தன் அரண்மனைவந்துசேர்ந்து, மந்திரிகளோடு தான் இலங்கைக்குப் போனதுவும், அவ்விடத்தில் நடந்த விபரமும், தான் இராவணனுக்குச் சபதஞ்செய்துவந்ததும், இதுகளெல்லாம் சவிஸ்தாரமாகச் சொல்லி இனிமேல் எப்படி ஜெயிப்போம் என்று மந்திரிமார்களோடு ஆலோசனை செய்துக்கொண்டிருந்தான்.

இங்கே இப்படி யிருக்கும்போது சீதாதேவியம்மன் அருகில் காத்துக்கொண்டிருக்கிற விபீஷணனுடைய பெண் திரிசடையம்மன் மனதிற் கவலை கொண்டு மயிலிராவணன் வந்து இராவணனுடனே பிரதிக்ஞை செய்துக்கொண்டு போன விசேஷமெல்லாங் கேட்டு, இனி என்ன செய்யப்போகிருே மென்று எண்ணி, நம்முடைய பிதாவாகிய விபீஷணரும் சுவாமியை சரணுகதி என்று அடைந்திருக்கிருரே. அவருடன் இந்த விசேஷமெல்லாம் யார் அறிவிக்கப் போகிருர்களென்று மனங்கசிந்து நசிந்து, அதிக துக்கத்துடனே அழுதுக்கொண்டே, அவன் மாயாவிநோதி, கபடநாடக சூஸ்திராவதாரி என்று யோசனை செய்துக்கொண்டிருக்கிறபோது வாயுபகவானவர் அவ்விடத்திற்கு வந்தார். அப்போது திரிசடையானவள் பார்த்து, வாருமையா சுவாமி வாயு பகவானே! நான் ஒரு விசேஷஞ் சொல்லுகிறேன். அதைக்குறித்துச் சாவதானமாகக் கேளும். அது என்னவெனில், இந்த அதிசயமான விசேஷத்தை யாதாமொருவரும் அறியக்கூடாது. ஆகையால் நீர் இராமசுவாமிக்கு உயிர்த்துணைவர். ஆகையால் நான் உம்முடனே சொல்லுகிறேன். நீர் தவிர மற்ருெருவ

ரும் அறியக்கூடாது. அது விபீஷணருக்கு மாத்திரம் தெரியும். ஆகையால் இந்த மயிலிராவணன் இராவண னுடன் பிரதிக்கினை செய்துக்கொண்டுபோன விஷய மென்னவென்றால், இன்றைய இரவில் பதினைந்து நாழிகைக்குமேல் அந்த இராமலட்சுமணர் இருவரை யுங் கொண்டுபோய் பாதாளலங்கையிலிருக்கும் தன்னு டைய காளிகாதேவிக்குப் பலியிடுகிறேனென்று பிரதிக் கினை செய்துக்கொண்டு போனான். அவன் மாயா விநோதி, ஒருவராலேயும் ஜெயிக்கக் கூடாதவன். அவன் எந்த ரூபமெடுத்து மோசம் பண்ணுவானோ தெரியாது. அவனுடைய கபடமெல்லாம் விபீஷண ருக்குத்தெரியவரும். இதெல்லாம் அவருக்குச்சொல்லி எவ்வித ஜாக்கிரதையா யிருக்கவேண்டுமோ அவ்வித மாக யிருக்கச்சொல்லி வரவேண்டுமென்று சொன்ன மாத்திரத்தில், வாயுபகவானும் அப்படியே சம்மதித் துப் போய்வருகிறேன் என்று திரிசடையாளிடத்தில் விடைபெற்றுக்கொண்டு வாயுபகவான் விபீஷணரிடம் போயினர். விபீஷணர் வாயுபகவானைப் பார்த்துச் சொல்லுகிறார்.

வாருமையா சுவாமி வாயுபகவானே! நீர் எங்கே வந்தீர்? நான் உம்மைக்கண்டு வெகுநாளாயிற்று; நீர் வந்த சங்கதியைத் தெரியப் படுத்துவீர் என்று கேட்க, வாயுபகவானனவர் சொல்லுகிறார். கேளும் விபீஷணரே! மயிலிராவணனை யழைப்பித்து தன் னுடைய துயரங்களை யெல்லாஞ் சொன்னபோது மயிலிராவணன் சொல்லிய தென்னவென்றால், யுத்தஞ் செய்வதற்கு முன்னே சொல்லாமல் இப்போது காரிய முடிந்தபிறகு என்னை யழைப்பித்தீர். ஆகிலும் பெரி தல்ல. உன்பிள்ளையாகிய அட்சயகுமாரன் அதிகாயன் மகாமாயன் இந்திரஜித்து கும்பகர்னன் இவர்கள் முத லான சேனைப்படைத்தலைவர்களைக் கொன்றவர்கள் இராமலட்சுமணர்தானோ? அப்படிப்பட்ட பராக்கிரம சாலிகளான அவ்விருவரையும் இன்றையதினம் இர வில் பதினைந்து நாழிகைக்குள் எனது பாதாள இலங் கைக்குக் கொண்டுபோய் என்னுடைய காளிகாதேவிக்

குப் பலிகொடுக்கிறேன் என்று கோபதீப்தனுகி சபதங் கூறி தனக்கு வேண்டிய திரவியங்களும் பெற்றுக் கொண்டு போனுனுய். இந்தச் சமாசாரங்களை உனது குமாரத்தி திரிசடை கேட்டுக்கொண்டிருந்து இந்த விடத்தில் ஒருவருமில்லையே யென்று தாயரப்பட்டுக் கொண்டிருக்கிற சமயத்தில், நான் அவ்விடத்திற்குப் போனேன். அப்போது திரிசடையானவள் என்னை அருகினில் அழைத்து, சுவாமி! உம்மாலே ஒரு காரிய மாக வேண்டுமென்று இந்த விசேஷங்களை உமக்குச் சொல்லி இராமசுவாமிக்கு அறிக்கை செய்யும்படி சொன்னுளென்று சொல்லிவிட்டு வாயுபகவான் தனது இருப்பிடத்திற்குப் போய்விட்டார்.

வாயுபகவான் போனபின்பு விபீஷணர் அநேக விசாரத்தை யடைந்து இதற்கென்ன செய்வோமென்று மனமிடிந்து, அந்த மயிலிராவணன் கபட நாடக சூஸ்திராவதாரி, நானுவித ரூபாதிகாரி, என்னைப்போலும் ரூபமெடுத்து மோசம் பண்ணுவான் என்று மிகவும் எண்ணி யோசனைபண்ணி, சுவாமி சபையிலே எவ் வாறு சொல்வோம் எனக் கருத்தி லிருத்தியிருந்தனர். சுக்ரீவன் அங்கதன் சாம்புவன் நீலன் நளன் அனு மார் இவ்விதமான எழுபதுவெள்ளஞ் சேனைகளு டனே கொலுவாயிருக்கிற சமயத்தில் ஸ்ரீராமர் விபீ ஷணரைப் பார்த்து, விபீஷணரே! உம்முடைய முக மானது பூரணசந்திரன்போலும் மலர்ந்த தாமரைப் போலு மிருக்கப்படா நின்ற முகமானது இன்றைக்கு யாது காரணத்தால் கறுகறுத்து அகம் வெறுத்துக் கருகி மனமுருகி துயரம்பெருகி அதிக விசாரமடைந் திருப்பது என்? என்று இராமசுவாமி கேட்டபோது, விபீஷணன பயந்து, திடீரென்று எழுந்து கைகட்டி வாய்புதைத்து சரீரம் பதைத்து மெள்ள மெள்ள கிட்டச்சென்று சுவாமியைப் பார்த்து, நடந்த விசே ஷங்கள் யாவும் ஒளியாமல் சொன்னுர். அவைகள் யாவும் இராமசுவாமி கேட்டு ஆலோசனை செய்து, ஜாம்புவந்தர் முதலாகிய சகலரையும் அழைப்பித்து விபீஷணன் கூறிய விசேஷமெல்லாஞ் சொல்லி,

இன்று இராத்திரி பதினைந்து நாழிகையளவில் மயிலிராவணன் என்கிறவன் நம்மை யாவரையும் மோசம் பண்ணி, அவனது பாதாள இலங்கைக்குக் கொண்டு போகிறேனென்று கூறிப்போனானும். அதற்கு என்ன வுபாயமுண்டோ அவ்வித உபாயஞ்செய்யுங்களென்ன, அவ்விசேஷத்தைக் கேட்ட சுக்ரீவன் விபீஷணரைப் பார்த்துச் சொல்லுகிறான். வாரும் விபீஷணரே! அந்த மயிலிராவணனென்பவன் யாவன்? அவன் இருப்பிடம் எங்கே? அவனது பூர்வோத்திரம் என்ன? அவன் இராவணனுக்கு எவ்விதமான பாத்தியஞ் சொல்லும் என்று கூற, அதற்கு விபீஷணர் சொல்லுகிறார்.

கேளும் சுக்ரீப சற்பாத்திரனே! அந்த மயிலிராவணனென்பவன் பாதாள லங்கையிலே யிருக்கிறவன், ராவணனுக்குத் தாயாதிவர்க்கத்தில் தம்பியாக வேண்டும். அவனோ மாயாவிநோதி, கபடநாடக சூஸ்திராவதாரி, நானாவித ரூபாதிகாரி, அவனை ஒருவராலுஞ் செயிக்கப் போகாதென்று விபீஷணர் சுக்ரீபனுக்குச் சொல்ல, அவ்விசேஷமெல்லாம் கேட்டுக்கொண்டிருந்து யோசனைசெய்து இதற்கு வுபாயம் அனுமாராலே யாகவேண்டும் என்று நிச்சயம்பண்ணி, சுவாமி அருகில்போய் சுக்ரீபன் அங்கதன் விபீஷணர் சாம்புவர் இந்த நாலுபேரும் சுவாமியுடனே என்ன சொல்லுகிறார்களென்றால், ஓ அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகராய் விளங்கும் இராமசுவாமி பெருமானே! இந்தக் காரியமெல்லாம் அனுமார் ஒருவராலேயே யாகவேண்டுமே யொழிய மற்றொருவராலே யாகாது என்று சொன்னார்கள். இந்த விசேஷமெல்லாம் அனுமார் கேட்டு ஒன்றும் அறியாதவர்போல் தலையைக் குனிந்துக்கொண்டிருந்தார்.

அப்போது சுவாமியானவர், வாரும் அனுமாரே! விபீஷணர் கூறிய விசேஷத்துக்கு என்ன வுபாயமுண்டோ அந்த வுபாயங்களைச் செய்யும்? என்று மறுமொழி கொடுக்க, அனுமார் கேட்டு அச்சமென்



பதை மண்ணிற்போட்டு ஆரவாரித்து மனதுபூரித்து சந்தோஷக்கடலில் புகுந்து சிங்கம்போலத் துள்ளி இலங்கை ராவணனைத் தள்ளி, அந்த மயிலிராவணன் சிரசைக்கிள்ளி அவன் உதிரத்தைக் கையினால் அள்ளி தாகந்தீர்ந்து நான் மகிழ்ச்சி கூர்ந்து வருகிறேன் என்று சபதங்கூறிப் பகைமீறி சுவாமியைப் பணிந்து குனிந்து வந்தனையோடு சிந்தனைசெய்து கந்தபுஷ்பங் கள் காலிற்பெய்து அஞ்சலிசெய்து வணங்கியொதுங்கி பதுங்கி ஆடி பாட்டுகள்பாடி பூமலர்சூடி கடவுளை நாடி அவர் திருவருள்தேடி அன்போடு ஓடிவந்து நின்றார்.

அப்போது விபீஷணர் சுக்ரீபர் சாம்புவர் இந்த மூன்றுபேரும் அனுமாரைப் பார்த்து ஒரு விசேஷஞ் சொல்லுகிறார்கள். நீர் மகா பராக்கிரமசாலியல்லவோ உமக்கு ஈடு ஒருவரும் இல்லை. நீர் ஆகாயம் பூமி பாதாளத்திற்கும் ஒன்றாய் சரீரம் எடுக்கவேண்டுமென் றாலும் எடுப்பீர்; நீர் மகா பராக்கிரமசாலி, புருஷசிங் கம்; நாங்கள் என்ன சொல்லப்போகிறோம். இன்று இராத்திரிக்குமாத்திரம் உம்முடைய வாலினாலே இந்த எழுபதுவெள்ளஞ் சேனைகளுக்கும் கோட்டை யிட்டுக் கொண்டிருந்து மகா ஜாக்கிரதையாகக் காக்கவேண்டு மென்று அவர் சொன்னமாத்திரத்தில், அந்த அனு மாரானவர் கேட்டு மகிழ்ந்து புகழ்ந்து அப்படியே யாகட்டுமென்று சொன்னார். அப்படி யிருக்கிற சமயத் தில் சூரியன் அஸ்தமனமாயினார்.

உடனே அனுமாரானவர் எழுபது வெள்ளஞ் சேனைகளையும் ஒன்றாகச்சேர்த்து தம்முடையவாலினால் கோட்டை யிட்டார். அக்கோட்டையானது எப்படி யிருந்ததென்றால், ஆகாயம் பூமி பாதாளத்துக்கும் ஊடுருவத்தக்கதா யிருந்தது. அக்கோட்டை வாசல் எங்கேயென்றால், அனுமானுடைய வாயிலே புகுந்து செவியிலேபுறப்படவேண்டும். மற்றபடி வாசலுமில்லை, வழியுமில்லை. ஈ எறும்பு நுழையப்போகாது. அப்படி நுழையவேண்டுமென்றாலும் இடமில்லை. வாலுடனே வால்நெருக்கமாகக்கோட்டையிட்டுக்கொண்டு உள்ளே இராமலட்சுமணாள் இரண்டுபேரும் ஓர்பர்னகசாலையில்

சயனித்துக்கொண்டு இருந்தார்கள். அத்தருணத்தில் விபீஷணரும் சுக்ரீவரும் யோசனைசெய்து இன்று இரவில் நாலுஜாமம் மகா ஜாக்கிரதையாக யிருக்க வேண்டுமென்று சொல்லி, அங்கதனை யழைத்து, அவனோடுகூட இலட்சுமணரையுங் கூட்டி விருது மணிகளையாட்டி சந்தடிகளைக் காட்டி சிங்கநாதங்களை மீட்டி நித்திரை என்பதையோட்டி பற்பல வாத்தியங்கள் முழங்கவும் தர்மதானம் வழங்கவும் வேசியர்கள் ஆடவும் வித்துவான்கள் பாடவும் இப்படி நானுவித வேடிக்கையோடு மகாஜாக்கிரதையாய் விழித்திருக்கும் படியாகக் கட்டளையிட்டு, இந்தக்காரியத்தில் யாராவது அசட்டையாக யிருந்தால் நம்முடைய ஆக்கினை தெரியுமே என்று சொல்லிக் கட்டுதிட்டஞ் செய்து நளனை யழைத்து அவனுக்கும் அவ்வாறே கட்டளையிட்டருளி, சுக்ரீவன் நீலன் இவர்களையும் அழைப்பித்து தண்டம் வில் வேல் வாள் யானை குதிரை ஒட்டகம் முதலிய பலவித ஆயுதங்களையும் கொடுத்து இன்றிரவில் தென்றிசைப் புறத்தில் பதனமாகக் காருங்களென்று கட்டளையிட்டருளி, வீரனான குமுதனை யழைத்து அவனுக்குத் துணைக்கருவியாக இரண்டுலட்சம் வானர சேனைகளைக் கூட்டி சிறிது வாத்தியங்களைக் கொடுத்து, அப்பா! நீ மேற்குதிசைப் புறத்திலே இரவில் நாலுசாமமும் ஜாக்கிரதையாகக் காருங்களென்று ஆக்கினையோடு தாக்கீது செய்து, சாம்புவந்தனை யழைத்து, அப்பா! நீ வடக்குத்திசைப் புறத்தில் பதனமாகக் காருமென்று சட்டமோடு திட்டஞ்செய்து, கிழக்குத்திசைப்புறத்திலும் அவ்வாறே ஆவலோடு காவலாளிகளைச் சேவகஞ்செய்ய திட்டமோடு கட்டளையிட்டருளி, அங்கதன் நீலன் குமுதன் சாம்பன் இந்த நாலுபேரும் அவரவர் திசைப்புறத்திலே ஜாக்கிரதையாகக் காக்கிறசமயத்தில் விபீஷணரானவர் அவரவர்க்கு எச்சரிக்கை சொல்லிக்கொண்டு அந்தக் கோட்டையைச் சுற்றிக்கொண்டு வந்தார். இப்படியிருக்கிறசமயத்திலே அன்றிரவில் பதினைந்து நாழிகையாயிற்று. இனிமேல் மயிலிராவணன் கதையைக் கூறுகிறேனென்று நாரதர் சொல்லுகிருர்.

கேளும் ஐயா கௌதமரிஷியே! இப்படியாக இவர்கள் இருக்கிறகாலத்தில், பாதாள இலங்கையை யாளுகிற மயிலிராவணன் அன்று இராத்திரி பதினைந்து நாழிகையில் ஆலோசனைகள் செய்து தன்னுடைய அஞ்சனாஸ்திரத்தை நெஞ்சிலே நினைத்து பிராமணரை யழைத்து சாஸ்திரங்கேட்டு தன் மனதில் சித்தனாகிய மந்திரிகளையழைத்து கெட்டிக்காரராக நான்கு பேரை நியமித்தான். அவர்கள் யாரென்றால் சதுரனென்றும், சாயித்தியனென்றும்,சகலப்பிரவாணரென்றும், மாயாவினோதி யென்றும், நான்குபேரை யுடையவர்கள். இந்த நான்குபேரையுங் கூட்டிக்கொண்டு புறப்பட்டான்.

அப்போது அவனுடைய பத்தினியாகிய வர்னமாலிகை தன்னுடைய புருஷனாகிய மயிலிராவணன் கையைப் பிடித்துக்கொண்டு ஒரு விசேஷஞ் சொல்லுகிறாள்: வாரும் ஐயா என் பிராணநாதா! நீர் இத்தனை சேனையுடன் எங்கே பயணமென்று கேட்க, மயிலிராவணன் சொல்லுகிறான்: கேளும் பெண்ணே வர்னமாலியே! இலங்கையிலே இராம லட்சுமணாள் இரண்டு மனிதர்கள் வந்து எழுபதுவெள்ளஞ் சேனையுடனே நமது தமையனாகிய இராவணேஸ்வரனுடைய தம்பி கும்பகர்னனையும், குமாரவர்க்கங்களையும், சகல இராட்சதாளையும் அதப்பண்ணிப்போட்டார்கள். அப்படிப்பட்டமனிதர்களை காளிக்குப் பலிகொடுக்கிறேனென்று சபதங் கூறிவந்தேன். அந்தச் சபதம் தப்பாமல் அவர்கள் இரண்டுபேரையும் கொண்டுவரப் போகிறேன் என்றுகூற, இதுகளைக்கேட்ட வர்னமாலிகை சொல்லுகிறாள்: வாருமையா சுவாமி பிராணநாதா! நான் ஒரு விசேஷஞ் சொல்லுகிறேன் கேளும். அந்த இராம லட்சுமணாள் இரண்டுபேரையும் மனிதரென்று எண்ணவேண்டாம். சாட்சாத் வைகுண்டவாசியாகிய ஸ்ரீமகாவிஷ்ணுவென்று எண்ணிக்கொள்ளும். அவர்களை ஒருவராலுஞ் செயிக்கமுடியாது. இராவணனுக்குக் கெட்டுப்போக காலம்வந்தபடியால் சீதையென்கிற அக்கினியைக் கொண்டுவந்து சிறையில் வைத்திருக்

கிறுன். இலங்கைக்கு அனர்த்தம் தேடிக்கொண்டான். அவர்கள் புத்திர மித்திரர்களையுங் கொன்றுபோட்டுத் தானும் சாகவேண்டுமென்று திரிகிருன். அவனும் ஜெயிக்கப்போகிறதில்லை. விபீஷணரானவர் தன் தமையனுகிய இராவணனுக்குச் சொல்லத்தகுந்த புத்தியெல்லாஞ் சொன்னுர். சொன்னவிடத்திலே அவன் தம்பி புத்தியைக் கேளாதபடியினுல் இப்படிக்கெல்லாமாயிற்று. அவர் நல்ல புத்திமானுனபடியால் நாம் இங்கேயிருந்தால் அதமாய்ப் போவோமென்று கருதி அந்த ராமசுவாமியைச் சரணமென்றடைந்தார். அவருக்கு இலங்கை ராச்சியத்தைப் பட்டாபிஷேகஞ் செய்யப்போகிருர். சுவாமி நீரும் போனுல் உம்மையும் மேன்மையாய்ப் பூபோல் வைத்துக்கொண்டிருப்பார். அடியாள் சொல்லுகிற காரியத்திற்கு விரோதமாகப் போனுல் உம்முடைய காரியம் யாவும் விபரீதமாகும். என் ஐயனே! என் உயிர்த் துணைவா! நீர் இங்கே தானே யிருந்தால் பாதாளலங்கையை ஆண்டு சுகமாயிருக்கலாம். அங்கே போகிறது சரியான நியாயமல்ல என்று அநேக நல்ல மார்க்கங்கூறி அவனது இரு கையையும் பிடித்துக்கொண்டு அந்தப்புரம் போவோமென்று பலவாருகத் தடுத்து நற்புத்தியை யெடுத்துப் பன்முறையும் கூறினள். இவளது வார்த்தையைக் கேட்டு அந்தக் கொடும்பாவியாகிய மயிலிராவணன் சீறி கோபமீறி பதிவிரதா சிரோமணியாகிய வர்ன மாலிகை சொல்லைத் தள்ளிப்போவதே உத்தமமென்று துள்ளிவிழுந்து எழுந்து மந்திரிகளைக் கூட்டி சேனைகளை யோட்டி, விருதுகளையாட்டி சவுரியங்களைக் காட்டி நடந்தான்.

வர்னமாலிகை மறுபடியும புருஷனைப் பார்த்து தேகம் வியர்த்து, சுவாமி! நான் வரும்விதி சொன்னேன்; நீர் படுந்துன்பத்தைப் படுமென்று கூறி, அவள் புத்திமாறி அவரைத்தூறி அந்தப்புறம்வீறி பஞ்சணையேறி வீற்றிருந்தாள். மயிலிராவணன் கரி பரி முதலிய சேனுதிபதிகளை அழைத்துக்கொண்டு தன்னுடைய அரண்மனைவிட்டு ஆயுதங்களைத்தொட்டு வாசல் கடந்து நடந்து அக்கினிக் கோட்டைக்கு

வந்து யோசனைசெய்து அவ்விடம்விட்டு மேல் சமுத்திரக்கரை வெளியே ஓரிடத்தில் வந்திருந்து தனது நாலு மந்திரிகளைப் பார்த்து ஒரு விசேஷஞ் சொல்லுகிறான். மந்திரிகளே! இனிமேல் இராமலட்சுமணன் இருவரையும் யாவர் பிடித்துக்கொண்டு வருவீர்கள் என்று வினவ, சதுரனென்னும் மந்திரி யெழுந்து காலில் விழுந்து பணிந்து மயிலிராவணனைக் கண்டு அஞ்சலிசெய்து சொல்லுகிறான்: வாருமையா சுவாமி! என்னை அனுப்பினால் அந்த எழுபது வெள்ளஞ்சேனைகளையுங் கொன்று வென்று அங்கே நின்று தின்று வருகிறேன். அவர்கள் இரண்டுபேரையுங் கொண்டுவரச் சொன்னாலுங் கொண்டுவருகிறேன் என்று மறுபடியுஞ் சொன்னான். இவ்வார்த்தையைக் கேட்டமாத்திரத்திலே மயிலிராவணன் சதுரனுக்குச் சகல வெகுமதி செய்து பாக்கு வெற்றிலை கொடுத்து சீக்கிரத்திலே அனுகூலஞ் செய்து வாருமென்று அனுப்பிவைத்தான். அந்தச் சதுரன் விடைபெற்றுக்கொண்டு தாமரைத் தண்டினது வழியாக வந்து இராமரிட சேனைகளெல்லாம் இருக்குமிடம் எங்கேயென்று வெகு துரிதமாகப் பார்த்துக்கொண்டுவந்து அனுமார் கோட்டையில் இருக்கிறதைக்கண்டு மிகவும் ஆச்சரியப்பட்டு. இப்படிப்பட்ட கோட்டையை எந்த ராச்சியத்திலும் கண்டதில்லையென்று நினைத்து நாலுமூலையுஞ் சுற்றிப் பார்த்தான். கோட்டைவாசல் எங்கேயென்றால் அனுமாருடைய வாயிலே புகுந்து செவியிலே புறப்படவேண்டும். அதுவே யொழிய வேறே எங்கும் வழியுமில்லை, வாசலுமில்லை. கோட்டையானது ஆகாயம் பூமி பாதாளத்துக்கும் ஒன்றாயிருக்கிறது. ஒருவராலேயும் உள்ளே போகமுடியாது. கோட்டையிலே யிருக்கிறபேர் வெகு ஜாக்கிரதையாயிருக்கிறார்கள். ஆனபடியினாலே நம்மாலே கோட்டைக்குள் நுழைய முடியாதென்று நினைத்து சதுரனானவன் திரும்பிப்போய் மயிலிராவணனைக்கண்டு தலையைக் குனிந்துக்கொண்டு நின்றான்.

அப்போது மயிலிராவணன் சதுரனைப் பார்த்து வாரும்பிள்ளாய் சதுரா! நீ இங்கேயிருந்து போகச்சே

சொன்ன தீரமென்ன ? இப்போது தலையைக் குனிந்து நிற்கும் வீரமென்ன ? என்றுகேட்க, சதுரன் சொல்லு கிறான் : வாரும் சுவாமி ! நாம் நினைத்த காரியம் ஆகிறதில்லை. திரும்பிப் போவதே பெரிய காரியம். அதெப்படி யென்றால் அனுமாரானவர் தம்முடைய வாலாலே கோட்டையிட்டுக்கொண்டு இருக்கிறார். அந்தக் கோட்டைக்குள் நுழைய வாசற்படி எங்குங் காணோம், ஆகாயம் பூமி பாதாளத்துக்கும் ஒன்றா யிருக்கிறது. கோட்டைக்குள் இருக்கிறபேர் வெகு ஜாக்கிரதையா யிருக்கிறார்கள். நம்மாலே முடியாது என்று சதுரன் சொன்னமாத்திரத்திலே, சாயித்திய னெழுந்து மயிலிராவணன் காலில் விழுந்து சாஷ் டாங்கமாகத் தெண்டஞ் சமர்ப்பித்து நமஸ்கரித்து சதுரனானவன் உலகமெல்லாம் தன்னைப்போல் எண் ணுவான். அவனாலே ஆகாவிட்டாலும் என்னா லாகும். சுவாமி என்னை யனுப்பினால் அந்தக் குரங்கு வாலாலேயிட்டிருக்கிற கோட்டையை நான் காலினால் உதைத்துத் தள்ளிப்போட்டு எழுபது வெள்ளஞ் சேனைகளையும் ராமலட்சுமண ளிருவரையும் சங்கரிக் கச் சொன்னாலுஞ் சரியே ; அல்லது இருவரையும் மகா விநோதமான பெட்டியிலே போட்டுக்கொண்டு வரச்சொன்னாலும் வருகிறேன், சீக்கிரம் அடியே னுக்கு விடைகொடும் என்று கேட்டான். அப்படிக் கேட்ட மந்திரியைப் பார்த்து மயிலிராவணன் அதி சந்தோஷப்பட்டு அவனுக்கு வெகுமதிகளைச் செய்து அனுப்பினான். சாயித்தியனானவன் விடைபெற்றுக் கொண்டு ஸ்ரீராமருடைய பாளையத்தில் அனுமார் கோட்டையிட்டுக் கொண்டிருக்கிறதைப் பார்த்து ஆச் சரியப்பட்டு பிரமித்து நின்று நாம் என்ன சபதஞ் செய்துவந்தோம். இதைப் பார்த்தால் வெகு கடினமா யிருக்கிறது. சதுரனைப்போல் நாம் சும்மாயிராமல் அநேக சபதங்களைச் செய்து வெகுமதியும் பெற்று வந்தோம். இப்போது திரும்பிப்போனால் நம்மைப் பரிகாசஞ் செய்வார்கள். அதைவிட செத்தாலும் நல்லதென்று அநேக யோசனைசெய்து கோட்டைக்கு வழியுமில்லை வாசலுமில்லை. இதற்கு என்னசெய்யலாம்

என்று எண்ணி ஆலோசனைபண்ணி பட்சிரூப மெடுத்துவந்து ஆகாயத்திலே பறந்து இக்கோட்டைக்குட்போய் ராமலட்சுமணுள் இருவரையும் எடுத்துக்கொண்டு போவோமென்று நிச்சயம்பண்ணி பட்சிரூபம் எடுத்துவந்து ஆகாயத்திலே பறந்து வாயுமண்டலம் சூரியமண்டலம் நட்சத்திரமண்டலம் இந்நால் வகை மண்டலபுறத்திலும் பறந்து பார்த்தான். அவ்வளவிலேயும் வாலானது அப்புறம் ஊடுருவிப்போனதைக் கண்டு அதிக விசாரங்கொண்டு இப்படியும் ஆகாதென்று பூமியிலே யிறங்கி தன் சுயரூபமெடுத்து அக்கோட்டைக்குள் போக வேண்டுமென்று மெள்ள வாலைக் கிளப்பி தலையை உள்ளே நுழையவிட்ட மாத்திரத்தில் அனுமாருக்கு வாலசைவு கொடுத்து நிற்க, அனுமாரானவர் என்னமோவென்று வாலைக் கெட்டியாக நெருக்கினர். வலுவாய் நெருக்கின மாத்திரத்தில் அவனது தலைஉள்ளே, உடல் வெளியிலேயுமாக நசுங்கி தேய்ந்து நொருங்கி ஜீவன் போகத்தக்கதாகக் கடினமாயிற்று. அப்போது தலையைக் கெட்டியாக யிழுத்தான். இழுத்தமாத்திரத்தில் வால் நெருங்கினதால் முகம் மூக்கு நாக்கு கண் இவைகளெல்லாம் நசுங்கித் தேய்ந்துபோய் ரத்தவெள்ளம் எடுத்துக் கொண்டு தலை வெளியில் வந்ததும் மூர்ச்சையடைந்து சற்றுநேரஞ் சென்ற பின்பு மூர்ச்சை தெளிந்து எழுந்து தலையைக் குனிந்துகொண்டு நின்றான்.

நின்றவனைப் பார்த்து மயிலிராவணன் திகைத்து நகைத்து, வாரும்பிள்ளாய் மந்திரி சிரோன்மணியே! சாயித்தியனென்னும் நவமணியே! நீ இங்கிருந்து சொல்லிப்போன விசேஷமென்ன? உன்னை இப்படிச் செய்தது யார்? எனக்கேட்க, சாயித்தியன் சொல்லுகிறான்: கேளுமையா சுவாமி! நான் அவர்கள் பாளையத்திற்குப் போய்க் கோட்டையைச் சுற்றிப் பார்த்தேன். அக்கோட்டையானது பூமி பாதாளத்திற்கும் ஒன்றாக யிருந்ததைக்கண்டு ஆலோசித்துப் பட்சிரூபமெடுத்துப் பறந்து போகிறபோது வாயுமண்டலம் சந்திரமண்டலம் சூரியமண்டலம் நட்சத்திரமண்



டலம் வரையிலும் பறந்து பார்த்தேன். வால் கோட்டை அதிக நெருக்கமாய் உயர்ந்திருப்பதைக் கண்டு திரும்பிப் பூமியிலே யிறங்கிப் பெருச்சாளியாக அறுத்துக்கொண்டு போகிறபோது, வால் நெருக்க மாகவும் நீண்டிருப்பதையுங் கண்டு மீண்டு மெதுவாக வாலைக் கிளப்பித் தலையை உள்ளே போகவிட்டேன்; அந்த அனுமானுக்கு வால் அசைவு கொடுத்தபடியால் வாலை நெருக்கினார். என்னுடைய தலை உள்ளேயும் உடல் வெளியிலேயுமாய்த் தேய்ந்து ஜீவன் போவ தாய்ப் பிராணனுக்கு அபாயம் வருவது கண்டு தலையை யிழுத்துக் கொண்டேன். இழுக்கிறபோது முகம் மூக்கு முதலானவைகள் நசுங்கிப்போய் பிராணன் பிழைத்து வந்தேன். நான் சதுரன் சொன்னதைக் கேட்டு நாம் பரிகாசஞ் செய்தோமே; அந்த அனு மார் மஹா பராக்கிரமசாலி; அவரை ஜெயிப்பது அரிது. அப்புறம் உமது சித்தத்துக்கு தகுந்த யுக்திப்படி செய்யுமென்று மெத்தவும் வேண்டி சது ரனைத்தாண்டி தனது காவலில் ஆவலோடு சேவகஞ் செய்திருந்தான்.

அப்பால் மயிலிராவணன் சாயித்தியன் போன பின்பு மந்திரிகளைப்பார்த்து வாருங்கள் மந்திரிகளே! நான் போய்வருகிறேன். உங்கள் கையால் ஆகாமற் போயிற்றே. நீங்கள் இங்கேதானே நான் வருகிற பரியந்தம் பத்திரமா யிருங்கள் என்று சொல்லிவிட்டு, மயிலிராவணனனவன் விபீஷணரைப்போல ரூபம் எடுத்துக்கொண்டு மிகுந்த கோபாவேசத்துடன் பாதாளலங்கையை விட்டுத் தாமரைத் தண்டின் வழியாக வெளியில்வந்து சீக்கிரம் இராமலட்சுமணுள் எங்கேயென்று வந்துபார்க்க, அனுமார் வாலினல் கோட்டை கட்டிக்கொண்டு இருப்பதைக்கண்டு எங்கும் உள்ளேபோக வழியில்லாமல் ஒரு தந்திரத்தை யோசித்து அனுமார் அருகில்வந்து அனுமாரே! எச் சரிக்கையென்று சொல்லி கோட்டைக்குள்ளே எச்ச ரிக்கையாய் இருக்கிறார்களா? நான்போய் பார்க்க வேண்டுமென்றுசொல்ல, அனுமார் மெய்யென்று

நம்பி வாயைத் திறந்த மாத்திரத்தில் மயிலிராவணன் அனுமாருடைய வாயிலே புகுந்து செவியிலே புறப்பட்டு கோட்டைக்குள்ளே போய் ராமலட்சுமணுள் படுத்துக்கொண்டிருக்கும் இடத்தைத்தேடி மெதுவாக மாயாவிநோதப்பண்ணி இரண்டுபேரையும் எடுத்து ஒரு பெட்டியிலேபோட்டு கெட்டியாகக்கட்டி எடுத்துக்கொண்டு வந்து ஒரு வார்த்தை சொல்லுகிருன்: ஓ அனுமாரே! நாழிகை பதினைந்து ஆயிற்று. இன்னம் பதினைந்து நாழிகை யிருக்கிறது; எச்சரிக்கையாயிரும். நான் மயிலிராவணன் வருகிற கள்ளவழியெல்லாம் பார்த்து வருகிறேன். மயிலிராவணன் என்னைப்போலும் ரூபமெடுத்துக்கொண்டு வருவான். இதுகளையெல்லாம் நன்ருக ஆராய்ந்து பார்த்திருமென்று விபீஷணரைப்போல் அவ்வாயிலே புகுந்து செவியிலே வந்துவிட்டான். மயிலிராவணன் பின்னும் தன்னுடைய மந்திரிகளிருக்கிற இடத்திலே போய் அழைத்துக்கொண்டு தனது இலங்கையில் பெட்டியைக் கொண்டுபோய் வைத்து இராட்சதர்களையும் காவல் வைத்துவிட்டுத் திரும்பிப்போனுன்.

அந்தச் சமயத்தில் ஆகாயவாணி பார்த்து சொல்லுகிருள்: அடா வாடா மயிலிராவணு! இந்த மட்டுந்தான் உனக்குப் பட்டம் பொறுக்கும். இனி பட்டம் பொறுக்காது. இந்தப் பெட்டியிலிருக்கிற சாட்சாத் வைகுண்ட நாயகராகிய இராமலட்சுமணுளை எடுத்துக்கொண்டு வந்தாயே, அதனுலே உனக்கு அழிவுகாலம் வந்து விட்டது. அனுமாரானவர் வந்து பட்டணமெல்லாஞ் சுட்டுக் கோட்டையைக் கொளுத்தி இராக்ஷதர்களையும் வென்று உன் உடன் பிறந்தாளாகிய துூரதண்டிகைப்பிள்ளையாகிய சித்திரசேனனுக்குப் பட்டங்கட்டிவிட்டு இராமலட்சுமணுளை எடுத்துக்கொண்டு போவானென்று ஆகாயவாணி பல முறை நற்புத்தி எடுத்துக் கூறினுள். அந்த மகா பாவியான மயிலிராவணன் காதிலே நாராசங் காய்ச்சி விட்டதுபோலும், ஈரமரத்திலே வயிர ஆணி கடாவினுற்போலும் ஏறிற்று. மயிலிராவணன் பயந்து

நயந்து நடுநடுங்கி ஒடுங்கி அயர்ந்து வியர்ந்து நாணி மன நடுங்கி உடனே தூரதண்டிகையையும் சித்ரசேனனையும் பிடித்துக்கட்டி கால்விலங்கு தாள்விலங்கு மார்விலங்கு இவைகளைப் பூட்டி ஒரு குகையிலே மாட்டி அடைத்துத் தன்னுடைய அரண்மனையிலே இந்திரபோகத்திலே போனான். அங்கே விபீஷணரானவர் வால்கோட்டையிலே அவரவர்களுக்கு எச்சரிக்கை கூறிவரும்போது அனுமார் சொல்லுகிறார்: ஏன் விபீஷணரே! அரை நாழிகைக்கு முன்னேவந்து என்னைப்போல் உருவமெடுத்து வருவானென்றும் சொல்லிவிட்டுப் போனீரே; நான் அவன் வருகிற கள்ளவழியைப்பார்த்து வருகிறேனென்றும் என்னையறியாமல் கோட்டைக்கு எப்படி வந்தீர்? மறபடியும் மனது கசிந்து நசிந்து வருகிறது என்னவென்றும் அனுமார் கேட்டார். இதை விபீஷணர் கேட்டு இடி விழுந்த மரப்போற் சாய்ந்து எரிந்து பொரிந்து சரிந்து குடலும் சரிந்து எடுத்துக்கொண்டு போய் விட்டானென்று தெரிந்து அறிந்து பழுமரம் போலும் முறிந்து விழுந்து எழுந்து வாதித்து பனம் பேதித்து தியங்கி மயங்கி அஞ்சி அனுமாரைக் கெஞ்சி விசாரமிஞ்சி, ஐயையோ கெடுத்தீரே! வீண் பேர் எடுத்தீரே! என்று கூற, அனுமார் கனிந்து முனிந்து அகம் வெறுத்து முகங் கறுத்து க்ஷணப் பொழுதிலே மூர்ச்சையடைந்தார். மூர்ச்சை தெளிந்து விபீஷணரைப் பார்த்து நீர் சொன்னது பொய்யல்ல மெய்யே. எனக்கு மதிமயங்கி ஒன்றுந் தெரியாமல் போயிற்று. இதற்கு என்ன செய்வோம் என்று கேட்க விபீஷணர் சொல்லுகிறார்:

வாரும் அனுமாரே! நான் என் தமையனாகிய இராவணனைப் பகைத்துக்கொண்டு வழிபடு கடவுளாகிய இராமசுவாமியைச் சரணமென்று அடைந்தேன். அப்படிப்பட்ட சுவாமியையும் மயிலிராவணன் கையில் ஒப்புவித்துவிட்டேன். என்னைப்போல் ஒரு பாவி இவ்வுலகில் உண்டோ? என்று பலவாறு அழுது கடவுளைத்தொழுது துயரப்பட, அனுமார் மனங்

கலங்கி துயரங்கொண்டு சொல்லுகிறார்: கேளும் விபீஷணரே! நமது சுவாமி படுத்துக்கொண்டிருக்கிற விடத்திலே பார்க்க, அவ்விடத்திலே சுவாமியைக் காணாதபடியினால் விபீஷணர் கூறுகின்றார்: இப்போது விடிந்தால் சுக்ரீவர் வருவாரே; சுவாமி எங்கேயென்று கேட்பாரே; அவருக்கு என்ன சொல்லுகிறது? இத்தனைபேருமிருந்து சுவாமியை ஒப்புவித்துவிடலாமோ என்று வருந்துவாரே; ஆக்கினை செய்வாரே; எழுபது வெள்ளஞ்சேனையும் அவரவர் இருப்பிடம் போய்விடுவாரே; நான் சுவாமியை நம்பிவந்தேனல்லவா; நான் எங்கே போவேன்? எனக்கு ஒரு இடமும் இல்லையே; அனுதி பட்சிபோலானேனே; அபகீர்த்தியுமாயிற்றே; தீவிரம் போயிற்றே; சுவாமியை எக்காலத்தில் காண்பேன் என்று வெகுவாய் விசாரப்படுகிறபோது, அனுமார் ஒரு விசேஷஞ் சொல்லுகிறார்: ஐயா விபீஷணரே! மயிலிராவணனும் உம்மைப்போல் உருவம் எடுத்துவந்தது தெரியாமற் போயிற்றே. இப்படி செய்வானென்று தெரிந்தேனாகில் மகா ஜாக்கிரதையாகயிருப்பேன். அப்படிப்பட்ட துன்மார்க்கனைக் கொன்றுவிட்டு இராம லட்சுமணாள் இரண்டுபேரையும் எடுத்துக்கொண்டு வருகிறேன்; நீ யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம். அந்தப் பாதாள லங்கைக்குப் போகிறவழி எப்படியென்று கேட்க, விபீஷணர் சொல்லுகிறார்.

கேளும் ஐயா! பாதாளலங்கைக்கு நீராவது போவதேது; பாதாள லங்கையோ வெகு கடினம்; ஒருவராலேயும் ஆகாது; அது எப்படியென்றால், நடுசமுத்திரத்திலே பெரிய கடற்றாமரை படர்ந்திருக்கும். அதில் ஒரு தாமரைத்தண்டும் ஒரு புஷ்பமும் பெரிதாயுமிருக்கிறது. அத்துவாரத்தில் சரீரத்தைஒடுக்கி நுட்பமான புகையைப்போல் போகவேண்டும். அப்படிப் போனால் அங்ஙனம் பாதாளலங்கை அக்கினி கோட்டையோடு தோன்றும். அக்கோட்டையின்சிகரத்தில் மச்சகற்பன் என்று ஒரு ராட்சதனுண்டு. அவன்மகாபராக்ரமசாலி, அவனை ஒருவராலேயுஞ் ஜெயிக்க முடியாது; அவனோடுகூட இரண்டாயிரம் லட்சம் இராட்சதர்கள்

உண்டு. ஒருவரைப் பார்க்கிலும் ஒருவர் பராக்கிரம சாலிகள். அங்ஙனம் விட்டு மற்றொரு பக்கத்திலே போனால் அங்கு ஒரு கற்பகத் திருக்குளம் ஒன்றுண்டு. அத்திருக்குளத்தில் அப்பட்டணத்திலுள்ள ஜனங்களும் சகல ராட்சத ஜனங்களும் வந்து தண்ணீர் மூகர்வதும் பூசைசெய்வதும் குளத்தண்ணீர் எடுத்துக் கொண்டு போகிறபோது கோட்டை வாசலிலிருக்கிற பேர் தண்ணீர் முதலானதும் துலாபாரத்தில்வைத்து நிறுத்திச் சோதித்துக் கொள்ளுவார்கள். அதிலே யாதாமொரு அத்தாட்சி காணப்படுமாயின் ஆக்கினையோடு தாக்கீ செய்வார்கள். அப்படிப்பட்ட கட்டுங் காவலுமா யிருக்கும். அப்புறம் போகையில் அந்தப் பட்டணம் மாடமாளிகை கூடகோபுரம் அரண்மனையோடு தோன்றும். பாதாள லங்கையின் பெருமையும் அருமையும் மூவராலும் சொல்லப்படாது என்று விபீஷணர் கூற, அனுமார் கேட்டு இனிமேல் அரைட்சண மிருக்கிறதில்லை. நாம் வழிபடு தெய்வமாகிய இராமலட்சுமணர் இரண்டுபேரையும் எடுத்துக்கொண்டு வராவிட்டால் பாதாள லங்கையிலே என் சீவனை விட்டுவிடுகிறேன். இனி ஒருவருக்கும் என் முகத்தைக் காட்டுகிறதில்லை யென்று புறப்பட்டார். மறுபடியும் விபீஷணர் சொல்லுகிறார்.

வாரும் ஐயா அனுமாரே! எந்தவிதத்திலே போய் வரவேண்டுமோ அந்த விதத்திலே போய்வாரும்; நீர் ஜெயமாய் வந்தாலாச்சுது; இல்லாவிட்டால் இவ்விடத்திலேதானே பிராணத்தியாகஞ் செய்துகொள்ளுகிறேன். அது நிச்சயமாக எண்ணிக்கொள்ளும். இராமசுவாமி கிருபையினாலே நீர் ஜெயமாய் வருவீர். சீக்கிரத்தில் நமது காரியத்தை ஜெயஞ்செய்து வாரும் என்று விடைகொடுத்தார். அனுமார் பாதாளலங்கைக்குப் புறப்பட்டுவருகிறபோது. நடுச்சமுத்திரத்தில் தாமரை விசேஷமாய்ப் படர்ந்திருந்தன. அதில் 20,000 இராக்ஷதாள் காவலிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் க்ஷணநேரத்தில் கொன்று அதிலிருந்து ஓர் பெரிய புட்பத்தின் தண்டில் தன் சரீரத்தை

யொடுக்கி புகைபோல் புகுந்து பாதாள லங்கைக்குப் போனுர். போகிறபோது அக்கினிக் கோட்டையைக் கண்டார். அதன் அருகே போகிறபோது அப்பட்டணத்திலுள்ளவர்கள் அனுமாரைக்கண்டு சொல்லுகிருர்கள். இதற்குள்ளே அனுமாருங் கிட்டேவந்தார். ஜனங்கள் பார்த்து அந்தக் குரங்கைப் பிடிக்கவேணுமென்று வந்து நாலுபுறமும் வளைத்துக்கொண்டார்கள்.

அப்படி வளைத்துக் கொண்டதை அனுமார் பார்த்து சற்றும் அஞ்சாமல் உடனே தமது விஸ்வரூபத்தை யெடுத்து ராட்சதரைத் தடுத்து வாலாலே வளைத்துச் சுற்றி நிலத்திலே உதைத்து குரங்கைப் போல் முனைந்து விஸ்வரூபம் கிளைத்து அடியடியென்று அடித்து இடி இடியென்றிடித்து புடைத்து வாலைத் துடைத்துத் தள்ளி இராட்சதர் தலையைக் கிள்ளி இரத்தநீரை யள்ளி அருந்தி மனம் வருந்தி வீரம் பொருந்தி நிற்க, மற்றும் இராட்சதர் வந்து எதிர்க்க, அவர்களையும் அவ்வாறு கால்மாடு தலைமாடுகளாகப் பிடித்து அடித்து மீசை துடிக்க பற்களை நெறநெறவென்று கடித்து யுத்தஞ் செய்கிறபோது, மச்சகர்ப்பன் கேட்டு மனம் பதைத்து அநேக இராட்சதக் கூட்டமும் தானுமாக அனுமாரிடத்தில் வந்து நிறைந்து சண்டைக்கு முனைந்து வீரமணிகளை யாட்டி சவுரியங்களைக் காட்டி வானராதிகளை மாட்டி அரக்கர் கூட்டங்களை நாட்டி சிங்கநாதங்களை மீட்டி வெற்றி வெற்றியென்று விருதுபடைகளைக் காட்டி யுத்த ஆயுதமணிந்து சித்தமாகத் துணிந்து நோக்கி, அனுமாரோடுதாக்கி தோல்வி யென்பதை நீக்கி வெற்றியென்பதை யாக்கி மகாவீரனுகவும் அனுமாரைக் கொல்லவும் அதிக மெதுவாகவந்து எதிர்த்தான். அனுமாரும் மச்சகர்ப்பனும் ஒருவர்க்கொருவர்தாக்கி சண்டைகளாக்கி அவர் மெரிக்க, இவர் அடிக்க, மச்சகர்ப்பன் ஆவி துடிக்க, சற்றும் இளையாமலும் களையாமலும் தேகம் பதைக்கவும், இராட்சதன் உடல் சிதைக்கவும், அனுமார் பதைக்கவும், பூமியில் தள்ளி உதைக்கவும், இராட்சதன் கோபமீறி அனுமாரைத்தூறி பாம்பைப்

போல்சீறி சிங்கம்போல் வீரி அஞ்சாமலும் வீரதீரஞ் துஞ்சாமலும் அவரோடுகூட சரிசமானமாக சண்டை செய்து வந்தான். அனுமாருக்குக் கைகால் அசைந்து தோல்வி அடைந்தார். அப்படி தோல்வியை யடைந்த அனுமார் ஆலோசித்து ஒருவார்த்தை சொல்லுகிறார். கேளும் பிள்ளாய்! நீ யாருடைய குமாரன்? உன் தகப் பன்பேர் என்ன? உன் தாய்பேர் என்ன? உன்பேர் என்ன? அதை எனக்குத் தெரியப்படச் சொல் என்று கேட்க, மச்சவல்லபன் கூறுகிறான். அடா வாடா! நீ என்ன கேட்கிறது; நான் என்ன சொல்லுகிறது. சண்டைசெய்ய நிபுணன் நீதானோ? சண்டைசெய்யத் திறமில்லாமல் ஜாதிகுலங் கேட்டவனே எழுந்துவா சண்டைசெய்வோம். உன் சமர்த்தும் என் சமர்த்தும் அறிவோம்; சற்று எழுந்திரும் என்று பலவந்தமாக அழைக்க, அனுமார் சொல்லுகிறார். கேளும்பிள்ளாய் இராட்சத சிரோத்தம சிகாமணியே! உன் குலமும் நலமும் ஜாதியும் நீயும் கேட்பது என்னவென்று கேட்பாயேயானால் சொல்லுகிறேன்.

கேளும் பிள்ளாய்! அநேக சீமையிலே யோடி அநேகம்பேருடனே கூடி சண்டைகள் ஆடினேன். சகலரையுஞ் சாடினேன், வெற்றியும் சூடினேன். எனக்கு மிஞ்சின பலசாலிகள் இந்த மூன்று மண்டலத்திலும் இல்லை. அப்படிப்பட்ட மகா சுத்தவீரனாகிய நான் உனக்குத் துஞ்சினேன்; அஞ்சினேன். ஆனபடியினாலே என்னிட ஜீவன் உன்கையில் போப்படியாகத் தோன்றுகிறது, அதற்கு முன்னே எல்லாம் அறிந்து சாவோம், அல்லது திரும்பிப்போவோம் என்று எண்ணியும் சொன்னேன். இவ்வளவு பராக்கிரமசாலியான உன்னைப் பெற்ற தாய் யாரோ? அவளைச் சேர்ந்த சுத்த வீரன் யாவன்? அவன் எத்தனை பராக்கிரமசாலியாக விருப்பானோ? அறியேன். எவ்வளவு தபசுசெய்து பெற்றார்களோ அதை அறியேன். இப்பேர்ப்பட்ட பலத்துடன் கூடிய நீ ஒருவரிடத்திலே சேவிப்பானேன். நீ இந்தப் பதினாலுலோகத்தையும் ஜெயிப்பாயே. இந்த மயிலிராவணனிடத்திலே சேவிக்கிற



காரணமென்ன? நான் கேட்கிறேன் என்று கோபித்துக்கொள்ளவேண்டாம். என்னை சண்டைக்கு அழைக்காதே; உன்னோடே சண்டைசெய்ய எனக்குப் பலம் இல்லை; நான் தோற்றுப்போனது மெய்யே; என் பேரில் தயவுசெய்யுமையா வென்று அனுமார் பல முறையுந் தொழுதார். மச்சவல்லபன் மனதிரங்கி தஞ்சமென்றவரைக்கொல்லக்கூடாது என்று நெஞ்சில் நினைத்து, கேளும் வானரசிகாமணியே! என் தாய் தகப்பன்பேர் சொல்லுகிறேன். கேட்டபின்பு சண்டைக்கு வாரீரோவென்ன, அப்படியே நல்லது என்று அனுமார் கூற, மச்சவல்லபன் கூறுகிறான். ஐயா வானரோத்தமா! என் தகப்பன் பெயர் என்னவென்றால், அஷ்டதிக்குப் பாலகரை வெல்லுவான்; மும்மூர்த்தியையுங் கொல்லுவான்; மகாசமர்த்தன், சுத்த வீரன், சத்துருசங்காரன், சாவில்லா சிரஞ்சீவி பெற்றவன், சாக்ஷாத் சிவசங்கற்பமா யிருக்கிறானே அவன் என் தகப்பன்; அவன் நாமதேயம் அனுமார் என்று சொல்லப்படும்; என் தாயார் திமிதியென்னும் மச்சம்; என் தகப்பனைப் பெற்றவன் வாயுபகவான்; என் பெயர் மச்சவல்லபன் என்று சொல்ல, அனுமார் கேட்டு திடுக்கிட்டு மச்சவல்லபனைப் பார்த்து அங்ஙனே யோசித்து, ஏதடா என்னைத்தவிர வேறொரு அனுமார் உண்டோ? இல்லை. நாம் ஒருவன்தானே அனுமார்; இதென்ன விசித்திரமாயிருக்கின்றது. எனக்கு ஸ்திரீ யில்லையே, நான் நித்திய பிரம்மசாரி ஆயிற்றே. ஆனால் முன்னம் இலங்கையிலேபோய் சீதையைத் தேடி இராவணனுடைய புட்பகவிமானத்தில் ஸ்திரீகள் தாறுமாறாய்க் கிடந்தார்களே அவர்களை நாம் பார்த்து சாபல்யப்பட்டோமோ. ஐயையோ! என்னை அறியாமல் பிள்ளைவந்த காரணம் ஏது? என்னமோ புதுமையாகத் தோணுது, மற்றுங் கேட்டறிவோம் என்று கேட்கிறார்.

வாரும் அப்பா மச்சவல்லபா! என்னமோ அடிக்கடி கேட்கிறானென்று கோபஞ்செய்துகொள்ளாதே. என் வாக்கியத்தைத் தள்ளாதே. இன்னம் ஒரு விசேஷங்

கேட்கிறேன். அது என்னவெனில்: அனுமாரென்று சொன்னீரே; அவன் எங்கே யிருக்கிறவன்? யாரிடத்தில் சேவிக்கிறவன்? சொல்லும் என்று வினவ, மறுபடியும் மச்சவல்லபன் அனுமாரைப் பார்த்துச் சொல்லுகிறான்: அடா வாடா வானராதிபதி! என் தகப்பன் ஸ்ரீராமலட்சுமணனுக்குச் சேவகன். அவனுக்குத் துரை சுக்ரீவன். அந்தச் சுக்ரீவன் மந்திரி எனது தகப்பன்; வாலியினாலே துரத்தப்பட்டு வனாந்திரத்திலேயிருக்க, அப்போது ராமலட்சுமணனை வணங்கி யழைத்து அதுகளை யாவும் திடப்படுத்தி கிஷ்கிந்தையைப் பட்டங்கட்டின மகானுபாவன்; அவரே எனது தகப்பன் என்றுகூற, அனுமார் சந்தோஷித்து இருதய மகிழ்ந்து, ஆசையினாலே உன் தாய் தகப்பன் பேர் கேட்டால் இப்படி பரிகாசஞ் செய்யலாமா? பொய் சொல்லலாமா? நான் அந்த அனுமாரை யறியேனோ? அவ்வனுமார் நித்திய பிரம்மசாரியாயிற்றே; அவருக்கு ஸ்திரீயுண்டோ? பொய் சொல்லாமல் சொல்லென்று வினவ, மச்சவல்லபன் சொல்லுகிறான்: வாராய் வானராதிபதியே! என் தகப்பன் அனுமார் இராமலட்சுமணனுடனே சுக்ரீவன் அங்கதன் நீலன் நளன் குமுதன் கேசன் கேசவாக்ஷதன் முதலானபேருடனே சீதையைக் காணமல் நாலுமூலைக்கும் வானரர்களை அனுப்பும்போது என் தகப்பன் தெற்கு பாரிசத்திலே சமுத்திரக்கரையிலே யிருந்து சீதை இலங்கையில் இருக்கிறாளென்று அறிந்து அங்ஙன மிருந்தபடியாய் ஆகாயத்தில் பறந்து சமுத்திரத்தில் வந்து யோசனை தாண்டி ஓடும்போது அந்தச் சமுத்திரத்தில் வெட்கையென்கிற இராட்சசி அனுமாருடைய நிழலைக் கண்டுபிடித்து விழுங்க, என் தகப்பனாகிய அனுமார் அந்த இராட்சசி வாயிலே புகுந்து உள்ளே போய் வயிற்றைக் கிழித்துக்கொண்டு போகிறபோது மகா இளைப்பாக உடம்பு வேர்வை வேர்க்க, அந்த வேர்வையைப் பிழிந்து சமுத்திரத்திலேபோட, அந்த சமுத்திரத்தில் வாசஞ்செய்கின்ற பெண்வாயிலிலே விழுந்த அந்த வேர்வையை மச்சம் விழுங்கின வுடனே கர்ப்பந் ,ரித்து என்னைப் பெற்றாள். அந்தட்

சணமே நான் சமுத்திரக்கரையில் குளிர் நடுங்க உட்கார் ந்துக் கொண்டிருந்தேன். இருந்தாற்போலிருந்து ஒரு திவ்விய புருஷன் வந்து என்னை யெடுத்து மடியின் பேரில் வைத்துக்கொண்டு உள்ளங்கால் முதல் உச்சந் தலைவரையிலும் தடவிக்கொடுத்து என்னை முகந்து கொடுத்து முத்தியிட்டுக் கொண்டார். அப்போது நான் திவ்விய புருஷரைப் பார்த்து, வாரும் ஐயா! நீர் யார்? ஐயா என்பேரில் வெகு பிரீதியாக உற்றூர் பெற்றூர்போல் என்னைப் பட்சமோடு எடுத்து முத்தி யிட்டுக் கொள்வதென்ன என்று கேட்க, அத் திவ்விய புருஷன் சொல்லுகிருன்: ஓ ஓ குழந்தாய்! நான் உனக் குப் பாட்டனென்றுகூறி எனக்குப் பேருமிட்டார். நான் மச்சத்தின் வயிற்றிலே பிறந்தபடியால் மச்சவல்லப னென்று நாமதேயமிட்டார். இப்படியிருக்க, நான் பாட்டனுகிய வாயுபகவானைப் பார்த்து, பாட்டா! என் தகப்பன் எங்கேயென்று கேட்டேன். அவர் சொன்ன தாவது, வாரும் குழந்தாய்! உன் தகப்பன்பேர் ஆஞ்ச நேயரென்றும் அனுமாரென்றுங்கூறி, அவர் அநேக வரம் பெற்று முப்பத்துமுக்கோடி தேவர்களாலும் ஜெயிக்கப்படாதவர்; ஆயிரத்தெட்டு அண்டத்திலே யும் சாவுஇல்லையென்றுகூற, அப்போது என் தகப்பன் எங்கேயென்று கேட்டேன். வாயுபகவான் சொன் னது: அனுமார் சீதையைக் கண்டுபேசி இலங்கையைக் கொளுத்திஞரென்றூர். வாரும் பாட்டா! எனக்கு வரந்தர வேண்டுமென்று கேட்டேன். அவர் சும்மா வரந்தரலாகாதென்றும் நீ என்னைக் குறித்து ஒரு நாழிகை தவஞ்செய்தால் நான் தருவேனென்றும் சொல்லினர். அவ்வாறே யான் ஒரு நாழிகை தவஞ் செய்தேன். அதைப்பார்த்து சந்தோஷப்பட்டு என்ன வரம் வேண்டுமென்றூர். எனக்கு வரம் ஒன்றுயிருக்க வேண்டும்; சகல வரமும் அதிலே அடங்கி யிருக்க வேண்டும்; என் தகப்பன் பலத்திலும் அதிகமாயிருக்க வேண்டும் என்றேன். அப்படியே வரங்கொடுத்துப் போனூர். இப்படியாக என்னுடைய பூர்வோத்திரம் கேட்டீரோ. இப்போதாகிலுஞ் சண்டைக்கு எழுந்தி ரென்று சொன்னுன். இந்த வசனங்களை யெல்லாம்

அனுமார்கேட்டு சந்தோஷித்து நயப்போடும் வியப் போடும் மெய்யென்று ஒத்துக்கொண்டு சரீரத்தை அநியாயமாய் மடிக்கப் பார்த்தோம்; நமக்குப் புத்திர சிகாமணி கிடைத்தது பாக்கியந்தானென்று எண்ணி யோசனை பண்ணி, ஆ ஆ புத்திரசிகாமணியே! நான் தான் அனுமாரென்று சொல்ல, மச்சவல்லபனுனவன் உடனே பயந்து நடுநடுங்கி ஒடுங்கி அடிபணிந்து தகப்பனென்றெண்ணி நமஸ்காரம் பண்ணி ஆடிப் பாடி ஓடிவந்து காலிலே விழுந்து எழுந்து நிற்க, அனுமான் மச்சவல்லபனை யெடுத்து முத்திகொடுத்து மடிமேல் வைத்துக்கொண்டு உச்சியை முகந்து சரீர மெல்லாந் தடவி, அப்பா குமாரகா மச்சவல்லபா! நான் உன்னை யடித்தேன்; பிதுர்த்துரோகி யானே னென்று மறுபடியும் சொல்லுகிருர்.

கேளும் அப்பா மச்சவல்லபா! நான் ஒருகாரியமாக வந்தேன். எனக்கு அந்தக் காரியஞ் சாதித்துத் தர வேண்டுமென்ன, மச்சவல்லபன் கூறுகிருன்: வாரும் ஐயா! நீர் என்ன காரியமாக வந்தீர்? நான் அந்தக் காரியத்தை முடித்துக் கொடுக்கிறேன் சொல்லு மென்று வினவ, அனுமாரானவர் சொல்லுகிருர். கேளும் அப்பா மச்சவல்லபா! தசகண்ட ராவண னேடு இராம லட்சுமணனும் வானர சேனைகளுங்கூடி சண்டைபண்ணி மூலபலத்தையும் அதஞ்செய்த பின்பு தசகண்ட ராவணன் இந்த மயிலிராவணனை அழைத்து இராம லட்சுமணனைக் கொண்டுபோய் உன்னுடைய பாதாளலங்கையிலே வைத்துப்போடு மென்ருன். அவ்வாறே மயிலிராவணன் இராத்திரி வந்து என்னை மோசஞ்செய்து இராமலட்சுமணனை எடுத்துக்கொண்டு வந்தான். அதன் பின்பு நான் கோபத்துடனே மயிலிராவணனைச் சங்கரிக்கிறே னென்று பிரதிக்கினை செய்து வந்தேன். அவ்வி ராமலட்சுமணுள் எங்கே யிருக்கின்ருர்கள்? உனக் குத் தெரியுமல்லவா சொல்லுமென்ன, மச்சவல் லபன் சொல்லுகிருன். நான் முன்னம் குழந்தை யாக யிருக்கிறபோது வாயுபகவான் வரங்கொடுத்

துப் போனர். அப்போது நான் ஒரு யோசனை சொல்லியிருந்தேன். அதாவது இந்தப் பதினாலு லோகமும் ஜெயிக்கவேண்டுமென்று கருதினேன்; அப்போது இந்த மயிலிராவணன் வேட்டை மார்க்கமாகப் புறப்பட்டு நான் இருக்குமிடத்தில் வந்து என்னுடைய முகக்களையும் பராக்கிரமத்தையும் கண்டு மகிழ்ச்சி கொண்டு மயிலிராவணன் சாஷ்டாங்கமாகக் காலில் விழுந்து பணிந்து ஒரு வரம் வேண்டுமென்று கேட்டான். நான் அவரைப் பார்த்து சந்தோஷப் பட்டு இப்படிப்பட்ட ராஜாவானவன் சிறுபிள்ளை யாகிய என் காலில் விழுந்து கேட்டானென்று மகிழ்ந்து புகழ்ந்து மயிலிராவணனைப்பார்த்து உனக்கு என்ன செய்ய வேண்டுமென்று கேட்டேன். மயிலிராவணன் சொன்னது: வாரும் பிள்ளாய் மச்சவல்லபா! நான் ஆளுகிற பாதாளலங்கையைக் காக்க ஒருவருமில்லை; நீ இருந்து காத்துக்கொண்டு வர வேண்டுமென்று அழைத்துவந்து தன்னிடத்தில் வைத்துக்கொண்டான். அதுமுதல் இதுவரையிலும் நான் காத்து வருகிறேன். இப்போது எப்படி உம்மை விடுவேன்? நீர் தர்மசாஸ்திரம் யாவும் அறிவீரே? உன் மனதுக்குத் தக்கபடி நடவுமையாவென்று வணங்கிச் சொல்ல, அனுமார் மச்சவல்லபனைப் பார்த்துச் சொல்லுகிறார்.

கேளும் குமாரகா! ஆனல் செய்யவேண்டியதென்ன? நான் அபஜயப்பட்டால் அந்த அபகீர்த்தி உனக்கு இல்லையா? உன்னுடையதல்லவா? என்று இவர் பல முறையாகச் சொல்ல, அப்போது மச்சவல்லபன் சொல்லுகிறான்: பிதாவே! நான் உயிரோடிருந்து மயிலிராவணனுக்குத் துரோகம் பண்ணமாட்டேன்; உமக்கு அந்தரங்கமான வார்த்தைகளைச் சொல்வது தருமமல்ல. ஆனாலும் உம்முடைய விவரத்தை அறிந்து சொல்லுகிறேன். நீர் வரும்போது தாமரைக் கமலத்திலே இரண்டாயிரம் ராட்சதர்களிருந்தார்களே; அவரைக் கொன்று அழித்து வந்தீரோ? அல்லது சும்மா வந்தீரோ? சொல்லுமையாவென்ன,

அந்த இரண்டாயிரம் ராட்சதரையுங் கொன்று வந்தே னென்ன, மச்சவல்லபன் சொல்லுகிருன் : ஆனுல் ஜெயத்தை யடைவீர். நான் உம்மைச் சும்மா விடக் கூடாது. ஒரு தந்திரம் சொல்லுகிறேன். அதென்ன வெனில் : என்னை நடுமார்பில் குத்துவீராகில் நான் மூர்ச்சையாய் விழுவேன். என் உயிர் நிலை அதுதான். அவ்விதஞ் செய்து அப்புறம் நீர் உள்ளே போமெ ன்று சொல்ல; அனுமார் அங்ஙனே யோசித்து சுவாமியைப் பூசித்து துயரப்பட அதைக்கண்ட மச்சவல்லபன், ஓ ஓ பிதாவே! நீர் இப்படி துயரப் பட்டால் உள்ளே போகமாட்டீர்; நாழிகை அதிக மாகிறது; இப்படி இருக்கக்கூடாது; முன்பின் யோசிக்காமல் உமது பலமெல்லாஞ் சேர்த்து குத்து மையா என்று தனது மார்பைக்காட்ட, அனுமா ரானவர் வருத்தத்துடனே ஐந்துவிரலையு முஷ்டி யாகப் பிடித்து மச்சவல்லபன் மார்பிலே குத்தினுர். அந்தக் குத்திலுலே மச்சவல்லபன் கீழே விழுந்து மூர்ச்சை யடைந்தான். அனுமார் தனது குமார னுக்கு வலித்துதோவென்று மிக்க மனவிசாரத் துடன் மூர்ச்சையாய் விழுந்த மச்சவல்லபனைத் தடவிக்கொடுத்துச் சுகமா யிருக்கும்படி ஆசீர்வதித்து இராமசுவாமியைத் துதித்து பாதாள லங்கையை மிதித்து இராட்சதன் எங்கே யென்று குதித்து உள்ளே சென்று அங்ஙனம் நின்றும் ஓர் பக்கம் பிரவேசித்தார்.

அப்படி பிரவேசித்துப் போகிறபோது அவ் விடத்தில் முதல்கோட்டை செங்கல்லினுல் கட்டப் பட்டிருந்தது. அதைப் பார்த்து அப்பாற் போகும் போது நாலாயிரலட்சம் இராட்சதர்கள் ஆயுதத் துடனே காவலிருந்தார்கள். அவர்களை அனுமார் பார்த்து தேகம் வேர்த்து இவர்களை எவ்வாறு சங்க ரிப்போமென்று கருதி தியங்கி மயங்கி செல்லுகிற போது அங்கே ஒரு மரமானது பிரமாண்டமாக இருக்கப்பார்த்து, அந்தப் பெருமரத்தை வேரோடு பிடுங்கிக்கொண்டு குபீலென்று இடிவிழுந்தாற்போல்

பாய்ந்து இந்தச் செங்கற்கோட்டையின் வாசற்படியை வாலினால் படல்கட்டி மூடி முத்திரை போட்டுக் கொண்டு உள்நுழைந்து இராட்சதர்களைப் பார்த்து கோபநகை செய்து அனுமாரானவர் மரத்தினலே சூரையடித்ததுபோல் ராட்சதர்களை அடிக்கிற காலத்தில் ராட்சதர்களெல்லாம் கத்திகளையும் வாள்களையு முருவி புறப்பட்டு அனுமாரைக் கொல்லும்படியாக எதிர்த்து ஆயுதங்களைத் தெரித்தார்கள். அதைக் கண்ட அனுமார் சற்றும் அஞ்சாமல் அவ்வித அரக்கரை யெல்லாம் நொருக்கி ஒருவரோடொருவரைத் தாக்கி யுத்தஞ் செய்கிறபோது, சத்த சமுத்திர முழக்கம் போல சந்திராயுதமும் சுக்குமாந்தடியும் கண்ட கோடாலியும் தெண்டாயுதமும் அஸ்திர சஸ்திரமுங் கொண்டு சில ராட்சதர்கள் நெருங்கினர். சிலர் கண்டு வாள் வேல் வில் முதலிய ஆயுதங்களைக் கொண்டு நாற்புறத்திலுஞ் சூழ்ந்தார்கள். சிலர் யுத்தத்திற்கு நடந்தார்கள். சேனதிபதிகள் யானை அறுபதுலட்சம், குதிரை அறுபதுலட்சம், தேர் ஆயிரலட்சம், இராட்சதர் நூருயிரலட்சம், இப்படிப் பட்ட சேன சைனியங்களுடனே வந்து எதிர்த்தார்கள். அப்போது அனுமாரானவர் கையிலிருந்த விருட்சத்தினல் நாளுவிதமாகச் சாடினர். அத்தருணத்தில் இராட்சதர் யாவருங் கால்மாடு தலைமாடு கைவேறு மெய்வேறு தோள்வேறு தாள்வேறு உடல்வேருகச் சிதைந்து மடிந்தார்கள். ஆயுள்கால முடிந்தார்கள். நரகவாசற் குழியில் மடிந்தார்கள். இப்படி நிர்மூலமாக அடித்து இராட்சதர்களைப் பிடித்து தரையில் அறைந்து அனுமார் வெற்றியிற் சிறந்து துறந்து வீரமோடு தீரமாக அப்புறம் போம்போது அவன் ஆளப்பட்ட பித்தளைக்கோட்டையானது மகர குண்டல சிகரமகரமொடு மகரமாகத் தோன்றிற்று. அதிலே அந்த ராட்சதக் கூட்டங்கள் நிறையாயிருப்பதைக் கண்டு, நம்முடைய அதிர்ஷ்டம் தெய்வாதீன மிப்படியாக இருந்தது. இன்று பிழைத்தோம்; இலைபோல் தழைத்தோம்; மூலைக்கு ஒருவனுக இராமல் ஒன்ருக யிருந்தது நன்ருக முடிந்தது.

நாம் கொண்ட கோட்பாடு தெண்டம் வராது. இனி யாவரையு முறுக்கி இறுக்கி நொறுக்கி விடுவதே யோக்கியம்; இதுவே சிலாக்கியம்; இராமர் கொடுத்த வாக்கியம்; நல்ல பாக்கியம் என்று எண்ணி மகிழ்ந்து புகழ்ந்து அண்ணுந்து இறுமாந்து புடைத்து பூரித்து ஆரவாரித்து யுத்தத்திற்குப் பிரயத்தனமானுர்.

அப்போது அனுமாரானவர் சரீரத்தை யொடுக்கி விஸ்வரூபம் புதுக்கி அண்டகோளவரைக்கும் பிரமாண்டமாக வளர்ந்து இருகையும் குவித்து தவித்து கூட்டி அபிநயங்காட்டி விரலை விரித்து அரிந்து குபீல் குபீலென்று பறந்து மெய்மறந்து அந்த ராட்சதரை யடித்து வாயினுலே கடித்து ஒருவரோடொருவரைத் தள்ளிச் சிங்கம்போலத் துள்ளி யாவரையும் விடாமலும் ஆயுத மெடாமலும் காயப்படாமலுமாகப் போகிறபோது அங்கே இரண்டாயிரம் ராட்சதர்கள் மடிந்தார்கள். இவ்வாருக அனுமாரானவர் அடித்து மடித்துவிட்டு புறப்பட்டு போகிறபோது செப்புக்கோட்டையானது மாடமாளிகை கூடகோபுரம் அரண்மனை தோன்றிற்று. அந்தச் செப்புக்கோட்டையானதைப் பார்க்குமிடத்தில் 20-லட்சம் இராட்சதர் ஆவலோடு காவலில் சேவகஞ் செய்துக்கொண்டு இருப்பதைப் பார்த்து, ஆர்த்து சீக்கிரமாக ஜாக்கிரதையோடு குபீலென்று குதித்து இராட்சதரை மிதித்து இராமரைத் துதித்து அரக்கரை மிதித்துக் கொன்று தின்று போவோமென்று அப்பாலே போகும் போது வெங்கலக்கோட்டை தோன்றிற்று. அதிலே காவல் 28-லக்ஷம் இராட்சதர் இருப்பதைப் பார்த்து கதவை மூடிக்கொண்டு தாப்பாளைப்போட்டு சாப்பாக ஒருவரையாகிலும் வெளிவிடாமல் எல்லோரையும் அதமாக அடித்து இடித்து நொறுக்கி அவரவர் எலும்புகளைப் பொறுக்கிக் கடலிலே போட்டுவிட்டார். அரக்கரெல்லாம் எமபுரஞ் சேர்ந்தார்கள்.

பின்னர் அனுமாரானவர் அவ்விடம் விட்டு போகிறபோது பொன்கோட்டை தோன்றிற்று. அங்

ஙனம் 60-லட்சம் இராட்சதரிருக்கக்கண்டு மகிழ்ச்சி கொண்டு களித்து ஆனந்தக்கடலில் குளித்து அதற்கும் அப்படியே அற்பமாகவெண்ணி அதம்பண்ணி அப்பாலே நடக்கிறபோது பவளக்கோட்டை தோன்றிற்று. அதிலே 80-லட்சம் இராட்சதர்கள் இருப்பதையறிந்து வாலினலே எறிந்து அறைகிறபோது, அங்ஙனே ஒரு கொடிக்கம்பானது நவரத்தின கசிதமாய் நூறுயோசனை விஸ்தாரமாகயிருக்க, அதைப் பிடுங்கிக்கொண்டு அரக்கர் படையிலே விழுந்து அதம்பண்ணிவிட்டு அப்பாலே போகும்போது சரீரமானது சிறுக ஒரு அணுவளவாக எடுத்துக்கொண்டு கோட்டையின் மேலே துலாயந்திரங் கட்டியிருப்பதைப் பார்த்து, அங்கேயிருக்கிற இராட்சதரையுங் கண்டு யோசனை பண்ணி உள்ளே போகிறபோது தங்கக்கோட்டை காவற்காரர்கள் மேளதாளம் வெடிதடி யொழுதமுறு தப்பட்டை எக்காளம் முதலிய வாத்தியத்துடனே பாதாளலோகம் கிடுகிடுவென்று இருப்பதைக் கண்டு மயங்கி யோசனை செய்து எங்கேபோய் ஒளிப்போம் என்று நாலுபக்கமும் இடமில்லாமல் அந்தப் பவளக் கோட்டைக்கு உத்தர பாரிசத்திலே ஒரு தோப்பானது உத்தியானவனமும் சிறிது விருக்ஷாதிகளும் சில நந்தவனமும் சோலையுஞ் சாலையும் இருப்பதைப் பார்த்து அந்தத் தோப்பிலே மறைந்திருக்கவேண்டும் என்று போய் ஒரு மரத்திலே இலைமறைவிலே ஒளித்திருந்தார்.

அப்போது பரிசோதனைக்குப் புறப்பட்ட ராட்சதர்மேல் சண்டைக்குப் போய்விட்டார். அனுமார் அந்த மரத்திலே யிருந்தபடியாக நாலுதிக்கும்பார்த்து ஒருவரும் இல்லையென்று மனதிலே தீர்மானித்து கீழேயிறங்கி அந்த வனம் இருக்கிற அழகைப்பார்த்து இது யாருடைய வனமோ! இத்தனை அழகாகப் பொருந்தி யிருக்கிறதென்று மனதில் நினைத்து நாலு புறமும் சுற்றி வரும்போது அவ்விடத்தில் ஒரு மண்டபமானது மயிலிராவணன் பரதநாட்டியம் பார்க்க நடனஞ் செய்கிற மண்டபமும், ஒருவராலும் அமையாத அழகோடு கட்டி யிருப்பதை

அனுமார் பார்த்து வெகு ஆச்சரியப்பட்டு இது யார் கட்டிவைத்த மண்டபமோ என்று அதிலே உட்கார்ந்துக்கொண்டார்.

இந்தக்கதை இப்படியிருக்க, கேளும் கௌதம ரிஷியே! என்று நாரதமகாரிஷி சொல்லுகிறூர்: அப்பால் அந்தப்புரத்திலே யிருக்கும் மயிலிராவணன் மாதங்கியுடனே கூடி சரசசல்லாபமாடி மன்மதன் போல் நீடி, குங்குமக் கதம்பஞ்சூடி, சம்போக பாக்கியங்களை அனுபவித்து நித்திரைசெய்துக்கொண்டிருந்தவன் திடீரென்று எழுந்து கண்விழித்து வெளியிலே வந்து எத்தனை நாழிகையாயிற்று என்று நட்சத்திரம் உச்சமானதைப் பார்த்து, நாழிகை 22-ஆய்விட்டது, இனி சும்மாயிருக்கக் கூடாதென்று நினைத்து பாதாள இலங்கைப் பத்தினியாகிய பத்திரகாளிக்கு இராம லக்ஷமணனை பலிகொடுக்கவேண்டுமே; இன்னும் பொழுது விடிய எட்டுநாழிகை யிருக்கிறதல்லவா; இதற்குள்ளே சுருக்காக அபிஷேகத்திற்கு ஜலம் கொண்டுவரவேண்டுமே; யாரை அனுப்பி வைப்போமென்று உடனே யோசனைசெய்து தன்னுடைய உடன்பிறந்தாளாகிய தூரதண்டிகையையழைத்து, அடி தூரதண்டிகையே! இப்போது என்னுடைய உத்தியான வனத்திற்குப் போய் தண்ணீர் கொண்டுவா என்று சொல்லித் தங்கக் குடத்தைக் கொடுத்து சீக்கிரங் கொண்டுவா போடியென்று கட்டளையிட்டான்.

அந்தத் தூரதண்டியானவள் தானும் தன் மகனும் சதாகாலம் விலங்கிலே அகப்பட்டிருந்தோமே! இப்போது என்னமோ நம்மைக் கொல்ல நினைத்துத் தண்ணீருக்குப் போகச் சொல்லுகிறுன் என்று கருதி, மயிலிராவணனைப் பார்த்துச் சொல்லுகிறுள்: வாடா அப்பா மயிலிராவணு! என்னடா என்னைத் தண்ணீர்க்குப் போகச்சொல்லி, என்னையும் என் மகனையும் விலங்குபோட்டுக் காவலாளிகளைக் காவல்வைத்தாயே; இப்போ தண்ணீர் கொண்டுவந்தால் என்னையும் என் மகனையும் வெட்ட யோசனைசெய்து போகச்சொல்லுகிருப்போல் தோற்றுகிறது. அப்படி செய்கிறது உன்

மையானுல் எங்கள் இருவரையும் இங்கேதானே வெட்டிப்போடப்பா என்று வருந்திச் சொன்னுள். மயிலிராவணன் தூரதண்டிகையைப்பார்த்துச்சொல்லுகிருன்: அடி தூரதண்டி! அப்படி உங்கள் இரண்டுபேரையும் வெட்டுகிறதானுல் எனக்கு என்ன பயம்? இங்ஙனம் வெட்டமாட்டேனே? வேறே ஒருகாரியமிருக்கிறது? உங்களை வெட்டவில்லை. அஞ்சாதே; நீ தண்ணீருக்குப் போடி யென்று சொல்லி, தூரதண்டிகையே! தசகண்டராவணனுக்குச் சத்துருவான ராமலட்சுமணனை நமது பத்திரகாளிக்குப் பலிகொடுக்கவேண்டும்; வெளியில் ஒருவரோடுஞ் சொல்லாதே போடியம்மா! சுருக்கிலே தண்ணீர் கொண்டுவாடி யம்மாவென்று சொன்ஞன்.

அதைக்கேட்ட தூரதண்டி திடுக்கிட்டு மனது கசிந்து, ஆ தெய்வமே! நான் என்ன பாவஞ் செய்தேனே; பூர்வத்தில்செய்த தீவினை இந்தஜென்மத்தில் இவ்வாறு நானும் என்மகனும் காலிலே விலங்குமாட்டிக்கொண்டு புருஷனையும் பறிகொடுத்து இப்படியிருக்கிறேனே; இந்தப் பாவம் அனுபவிப்பதல்லாமல் அந்தத் தரும புருஷர்களான இராமலக்ஷ்மணனை பலிகொடுக்கும்போது நான் ஜலம் கொண்டு வருவது தருமமா? ஐயையோ! பாவம் வந்து விதித்ததே என்று மயிலிராவணனைப் பார்த்து, நான் தண்ணீருக்குப் போகமாட்டேன் அண்ணவென்று சொன்னுள். அப்போது மயிலிராவணன் கோபத்துடனே அடி தூரதண்டிகையே! ஒருவரோடேசொல்லாதே என்று சொல்லியும், நான் உன்னை தண்ணீருக்குப் போகச் சொன்னுல் இராம லட்சுமணனை கூப்பிடுகிருய்; என்னடி யென்று தனது உறையிலேயிருந்த கத்தியை உருவி இதோ உன்னை வெட்டுகிறேனென்று பயமுறுத்திஞன். தூரதண்டிகை நடுங்கி ஒடுங்கி பயந்து அயர்ந்து இதோ நான் தண்ணீர் கொண்டுவருகிறேன் என்றுகூறித் தங்கக்குடத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டுப் போனுள். அந்தத் தங்கக் கோட்டையைத் தாண்டி துலாயந்திரம் மீண்டு மயிலிராவணனுடைய

உத்தியான வனத்திற்கு வந்துவிட்டாள். அந்தச் சமயத்தில் அனுமார் கண்டு பயங்கொண்டு அங்ஙனமேயிருந்து தன்னுடைய சரீரத்தை அணுவைப்போல் குறுக்கி அந்த மண்டபத்திலிருந்து ஓடி ஒரு மரத்தின் மேல் ஏறிக்கொண்டு இலை மறைவிலே மறைந்து இருந்தார்.

தூரதண்டியானவள் உத்தியானவனத்து கதவைத் திறந்து உள்ளே புகுந்துகொண்டு தாப்பாளைப்போட்டு விட்டு உட்கார்ந்துகொண்டு தன்னுடைய விசாரத்திலே யழுகிருள். ஆ தெய்வமே! என்னைப் படைத்த கடவுளே! நான் என்னசெய்வேன். இந்தப் பாதகம் என் தலையிலே விடிந்ததோ! இராம லக்ஷ்மணனுடைய சீவன் போக முடிந்ததோ! அந்த மகா பாதகனுக்குத் துற்புத்தி மனத்திற் படிந்ததோ! பார்த்தையா புண்ணிய புருஷரானவர்க்கு இப்படி வருமோ! எந்த ராச்சியத்திற் பிறந்தார்களோ! என்னபாவம்செய்தார்களோ! இந்த இராச்சியத்தில் ஜீவன்போகப் பிரமன் எழுதினனே! நானும் இந்தச் சண்டாளனை திண்டாளன் காலிலே விலங்குதரிக்க தெய்வம் விதித்ததோ! இராம லட்சுமணனுக்கு இப்படியும் லபித்ததோ! நமக்கும் அவர்களுக்கும் ஒன்ருகவும் ஆச்சுதோ! அயனுடைய எழுத்துப்போல் ஆச்சுதோ! ஆ தெய்வமே! பரமசிவமாகியதெய்வமே! எனநொந்து துன்பமாக வார்த்தைகளைத் தனது வாயில்வந்தபடி உளறி பாதக விபீஷணனுகிலும் இராம லட்சுமணனை வந்து எடுத்துக் கொண்டு போகலாகாதோ! இல்லாவிட்டால் யாரோ அனுமார் என்கிற புண்ணியவான் வால்கோட்டையாக யிட்டுக் காப்பாற்றினரே! அவருக்காகிலும் வழி துறைசொல்லி அனுப்பலாகாதோ! அடா விபீஷணு! கெடுத்தாயே! சத்துருக்கள்முன்காட்டிக்கொடுத்தாயே! இராம லட்சுமணன் அநியாயமாகப் போகிருர்களே என்று பலவாருக அழுகிருள். மண்ணிலே விழுகிருள். சுவாமியைத் தொழுகிருள். பூமியை அறைவாள் இறைவாள் அணிவாள். இராமனை நினைத்து தணிவாள். இது என்ன விதி என்பாள். தெய்வமே கெதி

யென்பாள். இவ்வாறு பலவாறாக மதிப்பதும் துதிப்பதுமா யிருப்பதை மரத்தில் ஒளித்துக்கொண்டிருந்த அனுமாரானவர் மகிழ்ச்சிகொண்டு பூரித்து ஆரவாரித்து எண்ணி யோசனைபண்ணி இவளாரோ கன்னிகை, இராமகாரியம் விசுவாசிக்கிறாள். அதிகமாகப் பூசிக்கிறாள் புகழ்கிறாள் தெரியவில்லை; கிட்டப்போனால் பயந்து ஓடிப்போவாளோ அறியோம்; அல்லது மயிலிராவணன்தானோ மாறுவேடம் போட்டுக் கொண்டு இப்படி கபடு செய்கிறானோ யாதொன்றும் தெரியோம் என்று நினைத்து அந்த மரத்தின்மேலிருந்தே ஆகாயவாணி சொல்லுவதுபோலவே அனுமார் சொல்லுகிறார்.

கேளும் பெண்ணே! உன் மகனுக்கு ஒருவனும் திக்கில்லாமற் போனதென்ன? இராமலட்சுமணனுக்கும் அப்படி போனதென்ன சொல்லென்ன, தூரதண்டிகை கேட்டு, இதேது மனிதர் பேசுகிற குரலாயிருக்கிறது; மயிலிராவணன் ஒருவரோடே சொல்லாதேயென்று போகச்சொன்னானே, நாம் இங்கே வந்தோமே; இப்படி யழுதோமே; அந்த மயிலிராவணன் தான் வந்தானோ? அல்லது எவரையாகிலுங் கூட்டியனுப்பினானோ? இதேது பேசுங் குரலாயிருக்கிறது என்று பயந்து அழுகையை நிறுத்தி எழுந்திருந்து குளத்திலே தண்ணீர் மொள்ள இறங்கினாள். அதை அனுமார் பார்த்து இனி சும்மா யிருக்கலாகாது; இவளண்டைக்குப் போய் பேசவேண்டுமென்று அந்தட்சணமே மரத்தைவிட்டிறங்கி தூரதண்டியிடத்தில் மெதுவாக நடந்துபோய் குளத்தின்படிகட்டின்பேரில் நின்றுகொண்டு சொல்லுகிறார்: வாரும் பெண்ணே மாதுசிரோமணி! இராமலட்சுமணனுக்கும் உனக்கும் உன் மகனுக்கும் அனுமந்தனாகிய நான் சதிபாக்கிக் கொடுக்க வந்தேன். அந்த இராம லட்சுமணனென்கிற வழிபடு கடவுளர் எங்கே யிருக்கிறார்கள்? அறிந்தால் தயவுசெய்து சொல்லும் அம்மாவென்று அனுமார் கேட்டருளினார். அப்போது தூரதண்டி அனுமாரைப் பார்த்து பயந்தெளிந்து சொல்லுகிறாள்: ஐயா

அனுமாரே! நீ என் அருகில் வாரும் என்று அழைக்க, அனுமார் சந்தோஷித்து அவள் அருகிற் போய் நிற்க, தூரதண்டி சொல்லுகிருள்: அடாவாடா அப்பா! அனுமார் அனுமாரென்று சொல்லுகிருயே; குரங்கு சாதியல்லவா? மனுஷரைப்போல் நீ பேசுகிருய்; நான் எப்படி நம்புவேன் என்றுசொல்ல, அனுமார் சொல்லுகிருர்: வாரும் பெண்ணே தூரதண்டியென்னும் ராட்சத ஸ்திரீயே! அப்படி ஏன் பயப்படுகிருய்? எனக்கு அறுபத்தினலு பாஷையும் சகலசாஸ்திரமும் நீதிநூலும் சாதாரணமாய்விளங்கும்; எறும்பு முதலிய சிற்றறி உயிர்களின் பாஷையும் தெரியும்; சந்தேகப்பட வேண்டியதில்லை; சும்மா சொல்லடி யம்மாவென்று கேட்க, தூரதண்டி சொல்லுகிருள்: வாரும் ஆஞ்சநேயா! அரிராமருடைய நேயா! அருணனுகிய வாயுவின் சேயா! நான் சொல்வதைக்கேளும். புஜபல பராக்கிரமம் பண்ணுகிறபோது ஒரு கையினல் இராட்சதக் கூட்டங்களை யடித்தால் பதினெட்டு அக்ரோணி தண்டு தளம் மாண்டுவிட்டது என்ருர்களே; அப்படிப்பட்ட புஜபல பராக்கிரமசாலியாகிய நீ இப்படி குழந்தை பிள்ளைபோலிருந்தால் எனக்கு சம்மதி படாது; உன்னுடைய விஸ்வரூபத்தை எனக்குக்காண்பிக்கவேண்டும். அதன்பின்பு நான் சொல்லுகிறேன் என்று சொல்ல, அனுமார் தூரதண்டியைப் பார்த்து நீ அந்த சொரூபத்தைப் பார்த்தால் பயப்படுவாயென்று சொல்ல, அதற்கு தூரதண்டியானவள் சொல்லுகிருள்:

கேளும் ஆஞ்சநேயரே! நீர் எவ்வித சொரூபம் எடுத்துக் காட்டினலும் பயப்படமாட்டேன். மயிலிராவணனுடைய மாய்கைகளைக்கண்டு பயந்தெளிந்தேன். நீர் எவ்வித ரூபம் எடுத்தாலும் பயம்தோற்ருது; துரிதத்தில் உம்முடைய விஸ்வரூபத்தை எடுத்துக் காட்டுமையா என்று தூரதண்டி சொல்ல, அனுமார் பாரும் பெண்ணே யென்றுசொல்லி, மேகமண்டலம் வாயுமண்டலம் சந்திரமண்டலம் சூரியமண்டலம் நட்சத்திரமண்டலம் அளாவும்படியாக வளர்ந்தார்.

தூரதண்டி பார்த்து பயந்து நடுநடுங்கி ஒடுங்கி கிடுகிடுத்து ஆஞ்சநேயரைப் பார்த்து சொல்லுகிருள்: அனுமாரே! உமது சொரூபத்தைப் பார்க்கத்தக்கவள் அல்ல; போதும் போதும் ஐயாவென்று ஆடிப்பாடி அவரை நாடி அவர் பாதம் தேடி விழுந்து எழுந்து அடிபணிந்து அனுமாரென்று தணிந்து விசாரந் தணிந்து சிரமேற் கரங்குவித்து தீர்க்கதண்டஞ் சமர்ப் பித்தாள். உடனே அனுமார் அந்த சொரூபத்தை விட்டு எப்போதும்போல சுருக்கி தூரதண்டியண்டை யில் நெருங்கி பயப்படாதே யென்று தைரியஞ்சொல்லி பெண்ணே! உன் காலில் விலங்கேது? யார் போட்டார் கள்? எக்காரணத்திஞல் உனக்கு விலங்கிட்டார்கள்? எங்கே திருடிஞய்? என்ன அடாத காரியத்தைச் செய் தாய்? என்ன சுமங்கலியே! உன்னைப் பார்த்தால் சகல ஆபரணங்களுடன் பூஷணுலங்கிருதையா யிருக்கிருய்; கழுத்திலே மங்கிலியம் விளங்கவில்லை; உன் புருஷன் இருக்கிருஞே இல்லையோ? இராமலட்சுமணுள் உயி ரோடு சுகமாயிருக்கிருர்களோ இல்லையோ? உனக்கு இந்த விலங்கு வந்த காரணுர்த்தமென்ன? சொல்லும் அம்மாவென்று கேட்டார்.

இந்த வார்த்தையைக் கேட்ட தூரதண்டிகை அனுமாரைப் பார்த்து அன்போடும் இன்போடும் அர்ச்சித்துப் பூசித்து யோசித்து சொல்லுகிருள்: கேளும் ஐயா அனுமாரே! இந்த மயிலிராவணன் மகா திண்டோளன்; வெகு சண்டாளன்; என்னையும் என் மகனையும் விலங்கிலே போட்டான்; நாங்கள் திருடவில்லை அள்ளவுமில்லை துன்பஞ்செய்து கொள் ளவுமில்லை, அவன் வார்த்தையைத் தள்ளவுமில்லை. அந்தப் பாதகன் ஆங்காரத்திலேயே என் புருஷனைக் கொன்று என்னையும் என் மகனையும் அநியாயமாக நாலாயிர வருஷகாலமாய் மூன்ஞூறுபாரம் எழுகி ஞலே மிகுதியோடு தகுதியான கையிலும் மெய்யிலும் தோளிலும் விலங்கு பூட்டிவிட்டான் என்றுகூற. அவ் வசனத்தைக் கேட்ட அனுமார், நல்லது பெண்ணே! அந்தச் சண்டாளனிட்ட விலங்கு எங்கேயென்று ஆக்

கரித்துப் பற்கடித்து மீசை துடித்து கரத்தை மண் மீது அடித்து காலையுங் கையையும் பிடித்து விலங்கு களை ஒடித்துவிட்டார். தூரதண்டிகை கண்டு மன மகிழ்ச்சிகொண்டு நயந்து வியந்து அனுமாரென்று பயந்து கைகட்டி வாய்பொத்தி தூரதண்டிகை உனக்கு விலங்குபோட்ட காரணமென்ன? உன் புருஷனாகிய புண்ணியவான் பெயர் என்ன? உன் மகன் விலங்கிலே கிடக்கிறனென்று அழுதாயே; அந்தச் சங்கதிகளை யெல்லாம் சவிஸ்தாரமாகச் சொல்லவேண்டுமென்று அனுமார் கூறினர்.

அந்த வசனத்தைக்கேட்ட தூரதண்டிகை சொல் லுகிருள்: கேளும் அனுமாரே! என்பேர் தூரதண் டிகை; என் புருஷன்பேர் காலதத்தன்; என் குமாரன் பேர் நீலமேகன். கேட்டீரோ அனுமபூபா! என் புரு ஷனைக் கொல்லவந்த காரணம் மயிலிராவணன் எனக்கு அண்ணன்; அவன் இந்தப் பாதாளலங் கையை அரசாட்சி செய்துக்கொண்டிருந்தவன். என் புருஷனையும் தன்னேடுகூட வைத்துக்கொண்டு சகல அதிகாரமெல்லாம் விசாரணைகளையும் விசாரித்து வரச்சொல்லி உத்தியோகக் கட்டளை திட்டமாக யிட் டிருந்தான். நானும் என் புருஷனுடன் சுகமாகச் சிறிதுகாலம் வாழ்ந்திருக்கும்போது, எனக்கு கர்ப்பந் தரித்து ஒரு பிள்ளையைப் பெற்றேன். அந்தப் பிள் ளைக்கு என் புருஷன் நீலமேகனென்று பேரிட்டார். அதன்பின்பு மயிலிராவணனுக்கு மாதங்கி என்பவ ளுடைய வயிற்றிலே ஒரு பெண் பிறந்தது. அப் பெண்ணுக்கு ரூபவதியென்று பெயரிட்டு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தார்கள்.

அப்படி வளர்த்துவந்த சிறிதுகாலத்துக்குப் பின் என் புருஷனுனவன் மகனை யெடுத்து முத்தங் கொடுத்து மடிமீது வைத்துக்கொண்டு கொலுக் கூட மண்டபத்திலிருந்தார். அப்போது மயிலிரா வணனும் தன்னுடைய குமாரத்தியாகிய அதிரூப

வதிக்கு சகல ஆபரணந் தரித்து மடியின்மீது வைத்துக்கொண்டிருந்தான். இப்படியாக ஏக சிங்காதனத்தின் மீதிலே இருக்கும்போது மயிலிராவணன் என் புருஷனைப்பார்த்து, வாரும்பிள்ளாய் காலதத்தா! உன் மகனுக்கு இந்த ரூபவதியென்கிற பெண்ணைக் கொடுத்து கலியாணம் பண்ணிவைக்கிறேனென்று சொன்னான். அந்தட்சணமே இடி யிடித்ததுபோல் ஆகாயவாணி சொன்னதாவது: அடா வாடா மயிலிராவணா! இந்த ரூபவதியை யாருக்குக் கொடுத்து விவாகஞ் செய்துவைக்கிறாயோ அந்தப் புருஷன் பெயர் நீலமேகனாகும். அவனுக்கு இந்தப் பாதாள லங்கை மூடி பொறுக்குமென முக்காலுஞ் சொல்ல, அப்போது சபையிலிருந்தவர்கள் எல்லோரும் ஆதியந்தமோடு கேட்டுக்கொண் டிருந்தார்கள். உடனே மயிலிராவணன் திடீரென்று தனது சிங்காதனத்தை விட்டு கீழே குதித்து கோபம் அதிகரித்து அச்சபையை மிதித்து குதித்து சொல்லுகிறான்: கேளுங்கள் சபையோர்களே! யான் விளையாட்டுக்குச் சொன்னதை நீலமேகனுக்கு ஸ்தாபிதமாக அந்த ஆகாய வாணியாரும் உறுதி சொல்லலாமோ? நீலமேகனுக்கு என் குமாரத்தியான ரூபவதியைக் கொடுக்கிறேனென்று சும்மா சொன்னேனேயொழிய நிஜமாகச் சொல்லவில்லையே. எனக்குச் சரியான பலசாலியானவன் எவனோ அவனுக்கல்லவோ கொடுப்பேன். இந்த சொற்பபலமுள்ள நீலமேகனுக்கு என்குமாரத்தியைத் தருவேனோ? இவ்வசனம் அடாது. இனி விட்டுவிடாமல் காலதத்தனையும் அவன் பெண்சாதியையும் பிள்ளையையும் கொல்லாமல் விட்டுவிட்டால் பின்னால் நமக்குக் கெடுதல் தருமென்று எண்ணி, இதோ இந்தக் கத்தியினால் வெட்டுகிறேன் என்று என் புருஷனைப் பிடித்துக்கொண்டான். அப்போது என் மகன் ஓட்டமாக ஓடிவந்து இப்படி சேதியென்று என்னோடு சொன்னான். அப்போது நான் என் மகனாகிய நீலமேகனை வீட்டிலே போட்டுக் கதவை மூடி ஒளித்துவைத்துப் புருஷனை அழைத்துவர மீண்டும் திரும்பிச் சென்றேன். அதற்கு முன்னமே

மயிலிராவணன் என் புருஷனை வெட்டிப் போட்டு எனக்கு எதிராக அந்தக் கத்தியையும் பிடித்துக் கொண்டு ஓடிவந்து, அடி தூரதண்டிகையே! உன் மகன் ஓடிவந்தானே, அவன் எங்கேயென்று என் தலை மயிரைச் சுருட்டி கீழேதள்ளி அவன் கையினாலே ஓங்கிக் குத்தும்வேளையில் நான் அண்ணா! என்னிரு கண்ணா! ஐயா இருபதுகையா! ஆண்டவனே! முடிகள் பூண்டவனே! என்னையனே! ஏன் என்னைக் குத்துகிறாய்? என்று இரக்கமோடு வேண்டினேன். அச்சமயம் அவன் மனதிரங்கி, இதோ பெருவிலங்காகிய ஒரு விலங்கு மாட்டிவிடுகிறேனென்று பதினாயிரம் பாரமுள்ள எழுகினாலே செய்த இந்த விலங்கை என் காலிலும் என் குமாரன் காலிலும் தரித்தான். அந்த விலங்குடனே என் மகனை நீலமேகன் காவற்கூடத்திலே யிருக்கிறானென்று அடிவானமுறையாக ஆதியந்தமாகக் கூறிப் பின்னும் அனுமாரே! நீ என்பங்கு தேவனாகவந்து நாற்பதினாயிர வருஷமாகத் தரித்திருந்த பெருவிலங்காகிய திருவிலங்கை முறித்துத் தெரித்துவிட்டீரே! வானர சேனாதிபதியே! வழிபடு தெய்வகதியே! மாயோன் புகழு நிதியே! மன்னர் துதிக்குந் துதியே! ஆஞ்சநேயா! ஆயன்சகாயா! அரும்பதத்தூயா! அடியார்களுக்கு நேயா! அனுமந்தா! என்முன்வந்து ஆள் ஐயனே! மெய்யனே! தீரனே! வீரனே! சீலா! அன்பரனுகூலா! சரணம் சரணம். என்னை ஆண்டருளும் தருணம் என்று பற்பலவாறாகப்புகழ்ந்து அஞ்சலிசெய்து இருகைகளையும் நீட்டி திருமுகங் காட்டி அபயஸ்தந் தாவென்று கேட்டாள்.

அனுமார் சந்தோஷித்து தூரதண்டிகையைப் பார்த்து அவள் கையைப் பிடித்து உள்ளங்கையில் அடித்து நன்மதி யெடுத்து அபயஸ்தங் கொடுத்துச் சொல்லுகிறார்: வாரும் பெண்ணே! உனது சேதியெல்லாங் கேட்டு என் மனங் களித்தேன். ஆனந்தக் கடலில் குளித்தேன்; இனி எனது பராக்கிரமம் நீ யறியப்போகிறாய்; அந்த மயிலிராவணனை அதம்

பண்ணிப் போடுகிறேன். உனது குமாரனுகிய நீல மேகனுக்கு அவனது பாதாள லங்கையாகிய இந்த நகரத்திற்குப் பெரிய துரையாகப் பட்டங்கட்டி அந்த ரூபவதியென்னும் மாதை அவனுக்கு மணம் செய்வித்துப் போவதுமன்றி, நாடு நகர முதலியவற்றைச் சீர்திருத்தி அரக்கர்படைகளை நீக்கிவிட்டுப்போவேன்; அஞ்சாதே யென்று பற்பல தைரியஞ் சொல்லி பின்னுஞ் சொல்லுகிருர்: கேளும் மாதே தூரதண்டியே! நமது வழிபடு தெய்வமான இராம லட்சுமணுள் எங்கே யிருக்கிருர்கள்? மயிலிராவணன் எங்கே யிருக்கிருன்? என்ன செய்கிருன்? அவன் புஜபல சௌரியமென்ன? பராக்கிரமம் வீரதீரமென்ன? எல்லா மறியச் சொல்லவேண்டுமென்று வினவ, வாரும் அனுமாரே! என்ன சொல்லப் போகிறேன்; நிஷ்கள நிர்மல நிர்விஷய சுத்த சைதன்னியமாகியும் பார்வதா சமேதனுகியும், குணக்குறி யில்லாததாயும் விளங்கியிருக்கப்பட்ட சாட்சாத் பகவானுகிய பரமேஸ்வரனிடத்திலே மூவேழு தலைமுறைக்கும் அழியாத வரம் பெற்றவன்; வீராதிவீரன், தீரமுள்ளவன்; மாய வித்தைகள் கற்றுசிறந்தவன், புண்ணியமற்றவன், அவனை தேவராலும் மூவராலும் ஜெயிக்கமுடியாது. இந்த மண்ணுலகத்திலும் விண்ணுலகத்திலும் ஒருவரும் இல்லை. அவனைப்போலொத்த பராக்கிரமசாலிகள் யாவருமில்லை. நீர் ஜாக்கிரதையாகச் சண்டைசெய்து ஜெயிக்க வேண்டுமென்று தூரதண்டிகை சொல்லிளுள்.

இதைக்கேட்ட அனுமார், நல்லது அப்படியே அவன் சமர்த்தனென்று சொன்னையல்லவா; நல்லதாகட்டும். அவனை நான் ஒருவனுமே ஏகாங்கியாய் வீரதீர சண்டப்பிரசண்டனுய் யுத்தத்தில் மடித்துவிடுகிறேன்; என் பலத்தை அறியப்போகிருய். அது இருக்கட்டும்; இதோயிருக்கிற தங்கக்கோட்டை வாசலிலே துலாயந்திரமொன்றிருக்கிறதாம். அதில்சிறிது இராட்சதர்க ளிருக்கிருர்களாம். அதன்விபரம் விரைவில் சொல்லென்ன, தூரதண்டிகை சொல்லுகிருள்: கேளும் ஐயா வானரசிரோமணியே! அதோ பாரும்

112186

அக்கோட்டைவாசலில் அலாயந்திரங்கட்டியிருப்பதை பாரும், அதிலே மயிலிராவணனுக்குச் சத்துரு யாவர் வருவாரோ அவர்களைக் கண்டிப்பதுந் துண்டிப்பது மாக நிறைகோலில் நிற்பார்கள். அந்த நிறைகோல் மூன்றுதரஞ் சாயுமாயின் அவன் சத்துரு, இவன் மித்துரு, இவன் இஷ்டன், இவன் துஷ்டன், இவன் சகோதரன், இவன் விசுவாசன் என்று அறிந்து கொள்ளுவார்கள். இவனை சத்துருவென்று கண்டு கொண்டால் அங்ஙனம் காவலாகயிருக்கும் 20-லட்சம் இராட்சதர் வந்து மூனைந்து யுத்தவாதம் புனைந்து கோபக்கனல் கனைந்து சினந்து கதித்து கொதித்து மதித்து துடித்து பிடித்து அடித்து கசக்கி நசுக்கி உதைத்து வதைத்து மண்ணிற் புதைத்துவிடுவார்கள் என்று கூறினாள்.

பின்னும் அனுமாரானவர் சொல்லுகிறார்: வாரும் பெண்ணே! இந்தக் கோட்டை வாசலிலுள்ள அவ ரவரை யானே தப்பாமல் கொல்லுவேன். நீ எனக்கு ஓர் உபாயம் செய்யவேண்டுமென்ன, தூரதண்டிகை அனுமாருக்குச் சொல்லுகின்றனள்: ஓ வீராதிவீர பராக்கிரம விற்பன சொற்பனமுள்ள அனுமானே! என்னாலாகும் காரணார்த்தமானது யாவை? அவை களைச் சொல்லுமையா! அடியேன் சிரமேற்கொண்டு நடக்கப் பிரியமுற்றிருக்கிறேனென்ன; மயில்போலும் சாயலும் அயில்போலும் விழியுங் குயில்போலும் மொழியும் அன்னத்தின் ஒயில்போலும் நடையை யுடைய பெண்பாலாகிய தூரதண்டியே! கேளும்: மாதர்க்கரசியே! அந்தக் கோட்டைவாசலுக்கு அப் பால் என்னைக் கொண்டுபோய்விட்டால் நான் அத் தனைபேரையும் ஆலையிலாடும் கரும்பு எவ்வண்ணஞ் சதையுமோ அவ்வண்ணம்போல் யாவரையும் அடித் துக் கடித்து படுகளஞ் செய்துவிடுவேன்; எமபுரஞ் செலுத்திவிடுவேன்; இந்த உபகாரஞ்செய்தால் போது மானது என்று அனுமார் சொல்ல, அதைக்கேட்ட தூரதண்டிகை நடுங்கி ஒடுங்கி ஆஞ்சநேயரோடு சொல்லுகிறாள்: ஐயனே! வானரத்துய்யனே! யான்

எவ்வாறு போவேன்? விலங்கு முறிபட்டுத் தறிபட்டுப் போனதே? இனி எவ்வாறுசெல்ல என்னவுபாயம், நீர் செய்தது சகாயம், அங்ஙனே போனால் அபாயம் வருமே; என்ன செய்கிறது; இதுவுமன்றி உம்மை அவ்விடம் அழைத்துப்போனால் தராசு முள்ளாகிய நிறைகோல் சாயுமே; உடனே காரியம் கெட்டுப் போகுமே; சரிக்கட்டிப் போடுவாரே; மயிலிராவணன் தேடுவானே; இதற்கென்ன செய்கிறது? என்னால் ஆகாதென்று வருத்தமடைந்து சொன்னாள்.

அனுமார் நோக்கி, மனதைத் திடமாக்கி, கவலையென்பதை நீக்கி, கலக்கமென்பதைப் போக்கி, தான் ஒரு விசேடஞ் சொல்லினர். அதாவது கேளும் பெண்ணே! நீகூறினவாறே அந்தத் தராசாகிய நிறைகோல் சாயுமாயினும், உன்னை எவனொருவன் கண்ணெக்கிப் பார்ப்பானாகில் உடனே கண்டிக்கவும் தண்டிக்கவும் காத்துவருகிறேன் பயப்படாதே. இந்த உபகாரம் பண்ணவேணுமென்று கூற, அம்மாது சொல்லுகிறாள்: ஆனாலும் எப்படி கொண்டுபோவேன்? இவ்வளவு கெம்பீரமான ரூபமோடிருக்கிறீரே என்று சொல்ல, அனுமார்சொல்லுகிறார்: வாரும்பெண்ணே! இதோ என்னுடைய விசித்திரத்தைப் பாருமென்று கூறி சந்தோஷம் மீறி சரீரத்தை உருவி காலமையை திருவி இராட்சதரைக் கொல்லக் கருவி திரணமாத்திரத்தில் சிறிய உருவமைந்து தூரதண்டிகையைப் பார்த்து தண்ணீர் குடத்தை எடுத்து தலைமீது வைத்துக்கொள்ளச் சொல்லி, அந்தத் தண்ணீர்க்குடத்தின் மீதிலே மாங்கொத்தை ஒடித்துவைத்து அந்நீர்க் குடத்திற்போட்டு மாவிலைக் கொத்திலே ஈபோல் மறைந்திருந்தார். தூரதண்டிகை மகிழ்ந்து அனுமாரிருக்கிற மாவிலைக்கொத்தினைப்பிடுங்கி குடத்தின்மீது வைத்து மெள்ள மெள்ள நடந்து செல்ல தங்கக் கோட்டை வாசலிலே யிருக்கிற இராட்சதரைப் பார்த்து எவ்வாறு போவோம்? என்ன அனர்த்தம் ஆகுமோ? என்று ஏங்கி வீங்கி காலடி வாங்கி ஒடுங்கி நடந்து தங்கக்கோட்டையைக் கடந்து துலாயந்திர

மான தராசு என்கிற நிறைகோலுக்கு அப்பால் சென்றாள். உடனே அந்தத் தராசுக்கோலானது தலை கீழ் மேலாகயிருக்க பெருக்க விழுந்தவுடனே இராட்சதாள் திடுக்கென்று பயந்து நயந்து வியந்து அயர்ந்து அண்ணாந்து இறுமாந்து பார்க்குமளவில் சத்துருவைக் கண்டதில்லை, தூரதண்டியைக் கண்டார்கள்; கோபங் கொண்டார்கள். யாரையோ ஒருவனை அழைத்துவந்தாற்போற் றோன்றுகிறது என்று ஐயுற்று, அங்ஙனம் காவலாகயிருந்த 80000-லட்சம் ராட்சதர்களும் அதிகாரியான தலைவன் ரத்தாட்சன் என்பவனோடு முறையிட்டார்கள். ரத்தாட்சன் அதிசீக்கிரமாக வலது பாரிசத்திலிருந்தகத்தியை உருவிக்கொண்டு தூரதண்டிகை முன்னே சென்று நின்று அடி வாடி தூரதண்டிகையென்னுந் திருடி! எங்கே போகிறாய்? ஆரையழைத்து வந்தாயோ? சோதனை காட்டடி! இதோ உன்னை வெட்டுகிறேன் குத்துகிறேன்கழுவேற்றுகிறேன் கள்ளமில்லாமல் உள்ளபடி சொல்லடி, இங்கே நில்லடி யென்று சொல்ல, கிடுகிடென்று அயர்ந்து நிற்கலுற்றாள்.

ஆஞ்சநேயர் அந்தச் சமயத்தில் மாவிலை கொத்தி விருந்தவண்ணமாக ஒளித்து மனது களித்து சிரசை அசைத்து திடீலென்று கோடை இடியிடித்ததுபோல் குமுறி ஆகாயம் பூமி பாதாளம்வரையில் ஏக சொரூபமான விஸ்வரூபமெடுத்து கீழே குதித்து, கோபங் கதித்து அந்த ராட்சதன் உருவிய கத்தியைப் பிடுங்கிக்கொண்டு அரக்கரோடு எதிர்த்து யுத்தஞ் செய்கிற போது அரக்கர்கள் கண்டு அவரவர் வில்வளைத்து நாணேறிட்டு, பூரி-கோவை - ஆதம்-பட்சி யஞ்சினி-நரம்பு-நாரி-புடம்-குணம் முதலியது நாணேறிட்டு, நாகம் - வாளி-கணை-பல்லவம் - வண்டுத்துரம்-சங்கம்-பத்திரம்-அத்திரம்-தோவென்று பெயர்பெற்ற அம்புகளையும் விசிதப்பூதை-பதரி-ஏவு-பாளம்-தோணி-யகழி கொடை - சிலிமுகம் என்று நாமகரணம் பெற்ற பாணங்களையும், கரவேக சரவேக உரவேகமாக வில்லிற் புதைத்து குணத்தொனிபண்ணி, ஆகாயம்

பூமி அண்டகடாகம் எண்திசையும் வெடிக்கும்படியாக கார்மழைபோலப் பொழிந்தார்கள். அனுமார் அதுகளைக்கண்டு மகிழ்ச்சிகொண்டு இடதுகை கேடயத்தினேடு விலக்கி வலதுகை கேடயத்தினலே ஓங்கி படீல் படீலென அடிக்கிறபோது, அந்த அடியானது கோடைகாலத்திலே இடியிடித்தது போல் திடீல் திடீலென்று கற்பங் கலங்கும்படி கால் மாடு இடித்து அடித்து புடைத்து காலால் துடைத்து தலைமாடு கால்மாடு, தலைமாடாகவெட்டி புஜங்களைத் தட்டி பிணமலைபோல் குவித்து தாகம் தாகமென்று சிலர் தவிக்க அனுமாரானவர் சற்றுமிளையாது களையாது யானைக்கூட்டத்திலே போய்விழுந்த வீரசிங்கம்போல் ஒருமணிநேரம் முன்னும் பின்னும் பாராமல் ஜாடுகிறபோது சிலர் ஏங்கினர்கள். சிலர் தூங்கினர்கள். சிலர் ஆத்மாவைவிட்டு நீங்கினர்கள்; சிலர் வேலாயுதத்தைத் தூக்கினர்கள்: சிலர் பரமண்டலத்தில் ஓங்கினர்கள்; ஆயுதங்களைக் கையில் வாங்கினர்கள்! சிலர் மூர்ச்சைப்பட்டுத் தேங்கினர்கள்; சிலர் குத்துயிராக உளறினர்கள்; சிலர் சிற்றுயிரோடு தேறினர்கள். இப்படி நானுவிதமாக அனுமார் நிர்த்தூளி செய்துவிட்டார்.

அந்த அரக்கர் படையிலே பட்டவர்த்தனர், மகுடவர்த்தனர், மன்னர், மண்டலீகர், யானைத்தலைவர், சேனைத்தலைவர், குதிரைத்தலைவர், ஒட்டகத்தலைவர், படைத்தலைவர், யூகத்தலைவர், தண்டத்தலைவர் முதலிய ராட்சதபடைகளெல்லாம் ஈட்டி-பாங்கு-சாங்கு-பாலாயெரியம்பு - பொரியம்பு - தறியம்பு-நெற்றியம்பு-வல்லுகள்-சங்கு - சக்கரம் - காலாள்கள்-கோதண்டம்-பிண்டிபாலம்-கொடுமரம்-தொடுமரம்-விடுமரம்-எடுமரம்-பழுப்படை - தொழுப்படை - எழுப்படை-வேலாயுதம்-சூலாயுதம் - அஸ்திரம் - சஸ்திரம் - வச்சிராயுதம் - குந்தம்-தொந்தம் - தந்தம் - கூர்வாள் - மீன்வாள்-உடைவாள்-கடைவாள்-கூர்வாள்-குறுந்தடி-நெறுந்தடி, இவ்வாறு நானுவித ஆயுதங்களை யெடுத்து முகங்கடுத்து இராட்சதர்களெல்லாம் பற்களை நெறநெறவென்று கடித்து

மீசை துடித்து அனுமாரோடு கைகலக்கிற காலத்தில் ஆஞ்சநேயப்பெருமான் சீக்கிரமாக ஜாக்கிரதையோடு ஆக்ரமித்து பராக்கிரமங் காட்டி வியாக்ரமம்போலச் சீறி கோபம்மீறி அவனை இவனடிக்க, அவன் மார்பில் இவன் குத்த இவன் மார்பில் அவன் குத்த, அவன் தோளில் இவன் குத்த இவன் தோளில் அவன் குத்த, வலம் இடமாக இடம் வலமாக கிறுகிறென்று நின்று சென்று சுழன்று உழன்று விழன்று ஒருவர்க்கொருவர் சரிசமானமாகச் சண்டைசெய்தார்.

இப்படி இவர் சண்டை செய்கிறதை ஆகாயத்திலுள்ள தேவர்கள் யாவரும் பார்த்து ஆச்சரியப்பட்டு ஆதிகாலத்திலே சாட்சாத் பிரம சைதன்னியராயும் தந்தைக்கு உபதேசம் வந்தித்த குருவராயுமிருக்கப்பட்ட கந்தன், கடம்பன், காங்கேயன், வேலுடைக் கடவுள். தேவசேனபதி, மயிலேறு சேவகன், கோழிக்கொடியோன், காந்தன், சேந்தன், குறிஞ்சிவேந்தன், வள்ளி காந்தன் என்று சொல்லத்தக்க சிவசுப்பிரமணியக் கடவுளோடு எதிர்த்த சூரபத்மாவும், அவனுடைய புத்திரமித்திர களத்திராதி சேனைகள் எவ்வாறு அழிந்தனவோ அவ்வாறு சுப்பிரமணியக்கடவுள் போல் இந்த அனுமார் ஒருவராக இருந்து அந்தத் தங்கக்கோட்டை வாசலிற் காவலாயிருந்த மயிலிராவணனுடைய இராட்சதப் படைகளைப் பெரிய விருக்ஷத்தின் அச்சுவேர் நச்சுவேர் சிறுவேர் பெருவேர் பக்கம்வேர் பழுவேர் சல்லியவேர் மூவேர் அடிவேர் நுனிவேர் இப்படிச் சொல்லப்பட்ட வேர் களைந்து மரத்தை வெட்டித் தள்ளுவதுபோல் அரக்கர் படைகளைத் தலைகாட்டாமல் முறித்து தலைகளைத் தறித்து நிமைப்பொழுதிலே படுசூரணம் பண்ணினர். அதன்றி ஒரு கற்பனை சொல்லுகிறேன்.

[அதாவது வானத்தின் மாலைப்பொழுதில் செவ்வானமிடுகிறது. அதை ஆகாயவாணி பூமிதேவியை நோக்கி, அடி மண்ணுக்கரசியே! என்னைப்பார்; சிவப்புப் புடவை கட்டிக்கொண்டேன் என்று சில நாளைக்கு முன்னே சொல்லியிருந்தாள். அவ்வார்த்

தையை வெகு நாளாய் மனதில் வைத்திருந்த பூமா தேவியும் இன்று யுத்தகளத்திலே இரத்தவெள்ளம் ஓடினதை பூமாதேவி கண்டு ஆகாயவாணியை நோக்கிச் சொல்லுகிருள் : அடி விண்ணுக்கரசியே ! நீ சிவப்புப்புடவை கட்டிக்கொண்டதுபோல் நானும் கட்டிக்கொண்டேன் பாரடியென்று சொல்லுமாப் போல அனுமார் போர் செய்தனர்.] இது புராணிகர் கூற்று. அதாவது இக்கதை எழுதினவர் கருத்தாம்.

அனுமார் சொல்லுகிருர் : கேளும் பெண்ணே தூரதண்டிகையே ! இப்போது நடந்த யுத்தகளரியைப் பார்த்தனையா ? எமது பராக்கிரம வீரதீர சூரத்துவத்தை யென்று சொல்ல ; தூரதண்டிகை சந்தோஷித்து அனுமாருக்கு வலம் இடம், இடம் வலமாக வணக்கந்தந்து மனத்தன்பு கூர்ந்து ஆர்ந்து சொல்லுகிருள். ஓ! ஓ! அனுமாரே ? நீர் வல்லவர் ; யாவருக்கும் நல்லவர், உம்மைப்போல பராக்கிரமசாலி உலகத்திலில்லையென்று துதித்தாள் ; மனதில் மதித்தாள் ; நீர்க்குமிழிபோல் குதித்தாள் ; இவரே அதி வீரனென்று கட்டளை விதித்தாள் ; எரிகிற வெண்ணெயில் விழுந்த அதிரசம்போல் குதித்தாள் ; மகிழ்ந்தாள் புகழ்ந்தாள் மயிலிராவணன் கெட்டான் போவென்று இகழ்ந்தாள். அச்சமயம் நோக்கி ஆஞ்சநேயர் சொல்லுகின்றனர் : மாதர்க்கரசியே ! கடகராஜன் வீடு எங்குந் தேடி இங்கே வந்தது என்று கூற, ஐயா அனுமந்த துய்யா ! சிரஞ்சீவி மெய்யா! சொல்லுகிறேன்; இதோ இருக்கிறதே அது கடகன் வீடு, அதற்கப்பால் விருசிமுகன் வீடு, அதற்கப்பால் பத்திரகாளியம்மன் வீடாகிய கோயில். அதை அனுமார் கேட்டு அப்படியாவென்று சொல்லிக் கடகன் வாசலிலே சென்று அங்ஙனம் நின்று கொல்லுவோமென்று தனது அழகிய வாலை உள்ளே மெள்ள பஞ்சுபோல நுழைய விட்டார்.

அங்ஙனம் அவனும் பெண்சாதியும் மன்மதனும் ரதியும்போல பஞ்சணைமீது சரசசல்லாப வுல்லாச விலாச அமளி செய்துக்கொண்டிருக்கிற சமயத்தில்

அனுமாரானவர் வாலால் இருவரையும் மடலிறுகக் கட்டி சுருக்கி வுருட்டி புரட்டி திரட்டி தெருவி லிழுக் கக்கண்டு பயங்கொண்டு சிரமேற் கரங்குவித்து ஆண்டவரே ! நான் முன்னே வந்து அழகிய வாலு க்கு எனது பற்களைப் பலிகொடுத்து புறமுதுகு காட்டி ஓடி வந்துவிட்ட என்னை ஏனிழுக்கிறீர்? உமது வார்த் தைக்கு வரவில்லை; அதோ மகா பாவியான மயிலிராவ ணனைக் கொல்லுமையா சரணம் சரணம்; விட்டு விடுமென்று வணங்கி இணங்கிச் சொல்ல, அனுமார் மனதிரங்கி புருஷனையும் பெண்சாதியையும் விட்டு விட்டார். அதன் பின்பு விருசிமுகன் வீட்டிலும் அவ்வாறு தமது வாலைப் புகட்டிவிட்டு அந்த அரச னையும் மடலிறுகச் சுருட்டிக் கட்டி இழுத்து கரகர வென்று சுழற்றி நிலத்திலே அடித்தார். அவன் யமபுரஞ் சேர்ந்தான்.

அப்பால் மந்திரி பிரதானி தண்டத்தலைவர் யூகத் தலைவர் அணித்தலைவர் முதலிய பேரையும் அவ்வண் ணமே தமது வாலை ஒழுங்காகப் புகும்படிசெய்து அந்தப் பத்து வீட்டையும் இடிவிழுந்த மரத்தைப் போல் அதம்பண்ணி யாவரையுங் கொன்று கசக்கி நசுக்கித் தீயிற்பொசுக்கி தூளனம்போல் செய்து தூர தண்டிகையை நோக்கி, மாதுசிரோன்மணியே! பார்த் தாயா என்றார். அதற்கு அவள் வாரும் வானரசிரோ மணியே! என் மகனானவன் அந்த வீட்டில்தான் விலங் குடனேயிருக்கிறான்; தயவுசெய்து அவன் விலங்கைத் தெறித்துவிடும் என்று நமஸ்கரித்தாள்.

அனுமாரானவர் அதேது நான் இந்தப் பாதாள இலங்காபுரந்தரா துரந்தரா நிரந்தராவென்று கூறு மாப்போலக் கூறி, அவன் இருக்கிற வீட்டின் கதவை நொறுக்கி உள்ளேபோய் விலங்குகளை நறுக்கிவிட்டு உள் நுழைந்தார். நீலமேகன் பார்த்து இவனெவனோ புதிதாய்த் தோன்றி நம்மைக் கொல்லவந்த கூற்று வன் என்று கருதி நடுங்கி ஒடுங்கி மெய்சோர்ந்து மூலை யில் ஒளித்தான். அனுமாரானவர் அவனைப் பார்த்து

அடா நீலமேகா! வெளியே புறப்படடா வென்று சொல்லக் கேட்டுத் திரும்பவும் கதவு மூலையில் ஒளித்தான். அனுமார் கிட்டப்போ யிருப்போமாகில் இவன் மிகவும் பயந்திருக்கிருனென்கிறதாய் தூர தண்டிகையை யழைத்து அடி பெண்ணே! உன் மகன் என்னைக் கண்டு மூலையிலே பதுங்கினன். அவனை நீ வந்து அழையுமென்று சொல்ல, தூரதண்டிகை அவ்வாறே காவற்கூடத்திலே சென்று நீலமேகனைப் பார்த்து, அடா நீலமேகா! ஏன் மூலையிலே பதுங்கிணுய்? வெளியிலே வாடா குமாரகா வென்று அழைக்க, அவன் பயந்தெளிந்து தாயாரிடம் வந்து, அம்மா தாயே! உன் காலிலிருந்த விலங்கு எங்கே? யாவர் முறித்தவர்கள்? சொல்லுமம்மா வென்று நயத்தோடு கேட்டான். தாய் சொல்லுகிருள் :

அப்பா குமாரகா நீலமேகா! நான் இந்த வானர சிரோமணியானவர் காலில் விழுந்தேன். அவர் தயவு செய்து என் விலங்கை வாங்கிவிட்டார் என்று மகனைப் பிடித்து இருவரும் அனுமாருடைய காலிலே விழுந்து கும்பிட்டு, அடா பயப்படாதே; இவர் இரட்சிக்க வந்த ஆண்டவனடா என்று சொல்லி, அனுமானை நோக்கி எங்களை இரட்சியுமையாவெனச் சொல்லினர். ஆஞ்சநேயர் களிகூர்ந்து உங்கள் இருவரையும் இரட்சிக்கவும், மயிலிராவணனைப் பட்சிக்கவும் வந்து தோன்றினேன். நீலமேகனுக்குப் பட்டங் கட்டி அந்த ரூபவதியை மணஞ்செய்துவிட்டுப் போகிறேன். இதோ அபயஸ்தம் பிடிபிடியென்று தூரதண்டிகை கையிலேபோட நீலமேகன் சந்தோஷ மெய்தியிருக்க, அனுமார் நீலமேகனைக் கிட்ட அழைத்து அப்பா! இராம லட்சுமணுளை இங்கிருக்கா நின்ற பத்திரகாளி கோயிலுக்குப் பலியிடப் போகின்ருனும். அந்தக்காளி கோயில் எங்கே யிருக்கிறது? காண்பியுங்கள் என்று ஆஞ்சநேயர் சொல்ல, நீலமேகன் சொல்லுகிருன். கேளும் ஆஞ்சநேயரே! அந்த பத்திரகாளிகோயிலிலே அவர்கள் இருவரும் இருக்கிருர்கள். அந்தக் கோயிற்புறமானது மகா உன்னதமாயிருக்கும். அதோ

பார்த்திரோதோன்றுகிறது. அதிலேராமலட்சுமணுள் இரண்டுபேர் இருக்கிருர்களென்று சொல்லி, பின்னும் ஐயா! அவர்களைப் போய்ப் பார்த்தவுடனே நீர் ராம லட்சுமணுள் அகப்பட்டாரென்று சந்தோஷித்து இனி மயிலிராவணன்தான் போனுலென்ன நமக்கு இராம லட்சுமணுள் அகப்பட்டுவிட்டாரென்று களிப்பெய்தி சும்மா போய்விட்டா லெப்படி? விலங்கைத் தறித்து விட்டு எங்களைப் பரதேசியாக விட்டுப்போனுலெப்படி? அப்புறம் மயிலிராவணன் எங்களிரண்டு பேரையும் வெட்டிப்போடுவானே? அனுமந்தா! ஆனபடியி ஞலே எனக்கு வெகு பயமாயிருக்கிறது. சுவாமி நானெரு யோசனை சொல்லுகிறேன்; கோபஞ் செய்து கொள்ளவேண்டாம் நீர் பட்டங் கட்டுகிறேனென் றீரே; எனக்குப் பட்டமும் வேண்டாம்; இதோ இந்த மயிலிராவணனை முன்னம் சங்காரம் பண்ணி விட்டு அப்பால் இராமலட்சுமணுளை யெடுத்துக் கொண்டு உமக்குச் சரிபோனவனுக்கு இந்தப் பாதாள லங்கையைப் பட்டங் கட்டிவிட்டு அப்பால் நீர் போக லாமென்று சொன்னுன்.

அப்பால் அனுமார் சொல்லுகிருர்: தம்பி நீல மேகா! நீ இப்படி சமுசயப்படவேண்டாம்; நான் உனக்கு அபயஸ்தங் கொடுத்தது தவறுவேனே? தப்பத் தக்கதில்லை. இந்த நாழிகைக்கு நம்பிக்கை சொல்லு கிறேன். இதோ யிருக்கிற ஆகாயவாணி பூமிதேவி சாட்சியாக நான் உனக்குப் பயப்படாமல் வாழப் பட்டங் கட்டி விவாகஞ் செய்து, பின்பு உன்னிடத்தில் விடை பெற்றுக்கொண்டு போகிறே னென்று சொல்ல, நீலமேகனுந் தூரதண்டிகையும் தைரியத்துடனே யிருக்க, மற்றுஞ் சொல்லுகிருர்கள். வாரும் ஆஞ்ச நேயா! எங்களுக்கு மயிலிராவணனுடைய கெடுதி இப்படி சொல்லத்தக்கதாக விருக்கிறது. அனுமந்த சுவாமியென்று சொல்லிவிட்டு இனிமேல் சுகமாய் பத்திரகாளி கோயிலுக்குப் போம். நாங்களுங் கூட வருகிருேமென்று சொல்ல, அனுமார் நீங்க ளிரண்டு பேரும் என்கூட வரவேண்டாம். ஏனென்ருல் யுத்தத்

தில் நான் சண்டை செய்யும்போது பயப்படுவீர்கள். ஆதலால் இந்த மண்டபத்தில்தானே பத்திரமோடு இருங்கள் என்று சொல்ல; நீலமேகனும் தூரதண்டிகையும் அனுமாரை நோக்கிச் சொல்லுகிருர்கள். கேளும் அனுமந்தா! நீ பத்திரகாளி கோயிலுக்குப் போயிருக்கிற சமயத்தில், மயிலிராவணன் ஆள்களையனுப்பி எங்களைப் பிடித்து வெட்டிப்போட்டால் அப்போது எங்களுக்கு ஆதரவில்லையே, நீர் போய் விட்டால் இவ்விடத்தில் நாங்கள் எப்படி யிருப்பது என்று சொன்னர்கள்.

அவ்வார்த்தைகளை அனுமார் கேட்டு இருவரையும் பார்த்துச் சொல்லுகிருர்: வாரும் பிள்ளாய் நீலமேகா! அவ்வாறே இங்ஙனம் யாராகிலும் வந்து உங்களைப் பிடிக்கவந்தால் என்னை நினைத்துக் கனைத்துக் கூப்பிடும். அப்போது நான் வந்து அதம்பண்ணிப் போகிறேனென்ருர். ஆனல் அவ்வாறு நல்லது போமென்று சொன்னர்கள். அனுமார் விடைபெற்றுக் கொண்டு அதிசீக்கிரமாக பத்திரகாளி கோயிலுக்கு வந்தார். அங்ஙனம் அக்காளிகோயிற் கதவு சாத்தப் பட்டிருப்பதைப் பார்த்து, ஐந்துவிரலைக் குவித்திறுக்கி கெட்டியாகப் பிடித்து இழுத்து ஓங்கி ஒரு குத்து குத்தினர். அங்கிருந்த பதினயிரம் சூலவண்டி யிழுக்கத் தக்கதான பொற்கதவானது பொடிப்பொடியாகப் போய்விட்டது. உடனே அங்கே யிருக்கப்பட்ட அதிசயத்தைச் சொல்லுகிறேன் வினவக் கேட்டருளுங்கள் என்று நாரதர் கௌதமருக்குச் சொல்லுகிருர்.

அந்த மாகாளி கோயிலிலே ஆயிரக்கால்மண்டபம் - அபிஷேகமண்டபம் - எண்ணையாடுமண்டபம் - பளிங்குமண்டபம்-முத்து மண்டபம்-வண்ணமண்டபம் திண்ணமண்டபம் - கல்மண்டபம் - மரகதமண்டபம்- கோமேதகமண்டபம்-வச்சிரமண்டபம் - பச்சைமண்டபம்-புட்பமண்டபம் - வயிரமண்டபம்-பவளமண்டபம்- தாளகமண்டபம்-பதுமைமண்டபம்-புதுமைமண்டபம் மதுரமண்டபம்-பிராகாரங்கள்-சாலைகள்-துஜஸ்தம்பம்

கோபுரஸ்தூபி-கொடிக்கம்பம் இப்படி நானுவித அதிசயத்தைப் பார்த்து தேவர் மனதுவாடி மூலஸ்தானத்துக் கதவு மூடியிருப்பதால் கோபநீடி உடனே தமது கையால் ஜாடி உடைத்துவிட்டார். அப்படி உடைத்துப் பார்க்குமளவில் அங்ஙனம் சண்டி-சாமுண்டி-ஸ்யாமளை - காளி-வேதாளி - உமை-மாதங்கி-தாருகர் - பேர்பெற்றதையல் - பைரவி-சீதை-ஆரணி - நாரணி-தஞ்சலணங்கு-ஐயை-முக்கண்ணி-மதுபதி-ஆளி-யுந்தி மாயை-மோகினி-இடாகினி-வலவை-குறமகள் இப்படி முப்பத்துமூன்று பெயர்படைத்த பத்திரகாளியானவள் வாளைக்கொடி போலே நீண்ட பல்லும் சன்னல் பின்னல் சடையும் மழுப்படையும் புலித்தோல் உடையும் அகோர ரூபமாக விருந்தாள். கந்தமுனி சஞ்சப்பெண் முதலியபேர்கள் ஊழியம் பண்ணுகிறதைப் பார்த்து அருகேசென்று அவளருகில் வைத்திருக்கிற பெட்டியைக் கண்டு மகிழ்ச்சிகொண்டு திறந்துபார்க்க வெய்தி இப்படியா செய்தியென்று கருதி அந்தப் பெட்டியை மெள்ள அசையாமலெடுத்து மேல்மூடியைத் திறந்து பார்த்துவிட்டார். இராம லட்சுமணுள் நிர்ச்சேஷ்டையாக மயிலிராவணன் மந்திரித்த கட்டினுலும், மாயா சூத்திரத்தாலும் கைகால் அசையாதிருப்பதைப் பார்த்திருந்தார். இருவர் உடம்பெல்லாந் தடவிப்பார்த்து தட்டி எழுப்பலாகாதெனக் கருதி இராம லட்சுமணுள் மயக்கந் தெளிந்து விழித்துப் பார்க்கவேண்டுமென்று அனுமார் ஸ்தோத்திரம் பண்ணுகின்ருர்.

ஓ அகிலாண்டகோடி பிரமாண்டநாயகா! அனுதரட்சகா! ஆபத்பாந்தவா! க்ஷீராப்திநாதா! சீதாசமேதா! பக்தவத்சலா! பரந்தாமா! பன்னகசயனு! பத்மநாபா! பங்கயப்பாதா! ஆதிவரதா! அச்சுதா! கோவிந்தா! கோபாலா! இராமச்சந்திரா! சோமசுந்தரா! என்று துதித்தார்; மகித்தார். நித்திரையோ ஏழைபங்காளா! இருதயத்தோளா! இராமலட்சுமணுள் எண்வகைக்குணுளா! என்று கூப்பிடும்போது அங்ஙனே சற்று இராமச்சந்திரக்கடவுள் குவளைக்கண் விழித்து பவளவாய் திறந்து சொல்லுகிருர்: வாரும்

அனுமாரே! நாம் எங்கேவந்தோம்; இதேதுபிள்ளாய் அனுமந்தா கோயிலுங் கோபுரமும் மண்டபமுமாய் இருக்கிறது? இது எவ்விடம்? இது யார் தேசம்? இது என்ன ஸ்தலம்? இங்கு ஏன் வந்தோம்? விபரமாகச் சொல்லுமென்று கேட்க, அனுமார் சொல்லுகிறார்: ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியே! ஜகத்குருவே! இந்த மயிலிராவணனென பாவி என் வால்கோட்டையை ஏதோ ஓர் உபாயம்பண்ணி ஏமாற்றி உங்களை எடுத்து வந்துவிட்டான். இதனாலே நான் உம்மைச் சேவித்து அழைத்துப்போக வந்தேனென்று சொல்லியருளினார். இவைகளை யெல்லாங் கேட்ட இராமமூர்த்தி கண்ணைத் திறந்தவர் மறுபடியும் மயிலிராவணன் அபிமந்திரித்த மந்திரோச்சாடனத்தின் மாய்கையினாலே இவர் கண்ணைத் திறக்கப்படாமல் மூடிக்கொண்டு மறுபடியும் நித்திரை செய்யலுற்றார்.

அதை அனுமார் பார்த்து, அதிக விசாரப்பட்டு இனி நாம் சும்மா யிருக்கப்படாதென்றெண்ணி, தீர்க்க ஆலோசனைபண்ணி, இப்போது நாழிகை பதினைந்து ஆச்சுது; இனி தாமதஞ் செய்தால் கெடுதி நேரிடும். இராம லட்சுமணனை இவ்விடத்தில் வைக்கக்கூடாது. முன் செய்தவாறுபோல் இப்போது மயிலிராவணன் மதிமயங்கித் தியங்க மோசம்பண்ணுவான். இவர்களை ஒருவிடத்தில் பத்திரப்படுத்திவிட்டு பின்பு இராட்சதர்களோடு சண்டைபண்ண வேண்டுமென்று எண்ணி நினைத்துத் திடீரென்று இராம லட்சுமணனை மூன்று பிரதட்சணம் பண்ணி நமஸ்கரித்துக் கும்பிட்டு பெட்டியை அவ்ஸ்தத்தில் அசையாமல் எடுத்து அந்த மயிலிராவணன் பட்டணத்தைவிட்டு எண்பது கோட்டைகளையுந்தாண்டி அப்பாலேபோய் அங்கேயிருக்கும் ஓர் மலையைப் பார்த்தார். அம்மலையில் ஓர் மண்டபமிருக்க, அம்மண்டபத்தினுள்ளே இந்தப் பெட்டியை இறக்கி வைத்து அதற்குள்ளே ஒரு குகையைப் பார்த்து அந்தக் குகையிலே இராமலட்சுமணனைக் கொண்டு போய் வைத்து பூமியைப்பார்த்து அனுமார் சொல்லுகிறார்.

கேளுமம்மா பூமாதேவியே! உன்னுடைய புருஷனவர் இதோ யிருக்கிருர்; இந்த மயிலிராவணன் கையிலே அகப்பட்டபடியினுலே நான் எடுத்துவந்தேன்; உனது மாப்பிள்ளை இப்படி யிருக்கலாமா? உன் தங்கை இலங்கையிலே அசோக விருட்சத்தின் கீழே யிருக்கிருள். இனிமேல் இராம லட்சுமணுள் போய் இராவண சம்மாரஞ்செய்து உன் தங்கையை விடுவிக்கப்போகிருர். ஆனபடியினுலே நான் மயிலிராவணனுடனே யுத்தம்பண்ணி அந்தச் சண்டாளனைக் கொல்லவேணும்; பின்புவந்து இராமலட்சுமணுளை எடுத்துக்கொண்டுபோகிறேன். அந்தமட்டும் நீ வைத்திருந்து காப்பாற்றி ஒப்புவிக்க வேண்டு மென்று சொல்ல; பூமிதேவி அனுமாரைப் பார்த்து வாரும் ஆஞ்சநேயப் பெருமாளே! இதோ இவ்விடத்தில் வையும்; பத்திரமாகப்பாதுகாக்கிறேனென்று சொல்லுமாப்போல் பூமியானது திடீரென்று வெடித்தது. அனுமார் புகழ்ந்து அந்த வெடிப்புக் குகையிலே வைத்துவிட்டு பத்திரமென்று சொல்லி மயிலிராவணன் பட்டணத்திற்கு வந்துவிட்டார். உடனே பூமிதேவியும் நாம் இப்படியிருந்தால் கெடுதி நேரிடும். இராமலட்சுமணுளைக் காண்பித்துக் கொடுக்கலாகாது என்று வெடிப்புக்குகையை மூடிக்கொண்டாள்.

இந்தக்கதை இவ்வாறிருக்க, அங்கே கடகன் என்கிற ராட்சதனும் அவன் பெண்சாதியும் அனுமார் வாலிற் கட்டுப்பட்டு சரணம்பண்ணி விடுவித்துக்கொண்டு வீடுசேர்ந்து மறுபடியும் பெண்சாதியுந் தானுமாக மன்மதக் கிரீடை நடத்திவரும்போது கடகனைப் பார்த்துச் சொல்லுகிருள்: வாரும் பிராண நாயகா! அறிவுக்குறவா! நீர் மயிலிராவணனுடைய உப்புஞ் சோறுந் தின்று அவனுக்கு இரண்டகந்தேடலாமா? சத்திராதியான குரங்குக்குப்பயந்து ஓடலாமா? இனி உமது அரசனிடத்தில்நாடலாமா? வீரமில்லாத நீர் என்னிடத்தில் கூடலாமா? அன்னமிட்டவன் பெண்சாதியைக் கன்னமிட்டவாறுபோல் நீர் செய்துவிட்டீர். அல்லாமலும் நீர் அவனோடு போய் சொல்லாமலு மிருப்பது தர்மசாஸ்திரநெறிக்குத் தகுதியல்ல

வென்று அந்தப் பெண்பால் நற்புத்தி விளங்கக் கூறி னுள். கடகன் கேட்டு இதோ பாரடி போய்ச் சொல்லு கிறேனென்று புறப்பட்டுச் சீக்கிரமாகத் தோட்ட வழி யிலே அநுமாருக்குத் தெரியாதவனுகத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு மயிலிராவணனுடைய ஆசார வாசலில் நுழைந்தான். அவ்விடத்தில் பன்னீ ராயிரங்கோடி இராட்சதர்கள் சத்துரு பயமில்லாமல் ஆயுதங்களைத் தலைக்கு உயரமாகவைத்து நித்திரை பண்ணுகிருர்கள். அவர்களைக் கடகன்கண்டு கையிலே தட்டி என்ன தூக்கம் தூங்குகிறீர்கள். அதோ அநு மார் வரப்போகிருரென்று சகலமான பேருக்குஞ் சொல்லி, அசுரனென்பவனை யழைத்து மயிலிராவண னுக்கு இந்தச் சங்கதியைச் சொல்லென்று கடகன் சொல்லியனுப்ப அவசரக்காரனுன அசுரன் மயிலிரா வணனுக்குச் சொன்னுன்.

அப்போது மயிலிராவணனும் அவன் பெண்சாதி யும் சப்ரகூடமஞ்சத்தில் சரச அமளி நடத்தும்போது பெண்சாதி நாயகனை நோக்கி, ஆண்டவனே! உமது மார்பழகுபோல் ஒருவருக்கு மில்லையென்ருள். நாயகன் சொல்லுகிருன்: பெண்ணே! உனது கிளிமுகம்போல் உலகத்தில் ஒருவருக்கு மில்லையென்று மடலிறுகச் சேரத் தழுவி சரச சல்லாப உல்லாச அமளி நடத்தி யிருக்கிறசமயத்தில் மயிலிராவணன் காதிலே நாராசங் காய்ச்சி விட்டதுபோலும், பச்சைமரத்திலே வயிர ஆணி கடாவினுற்போலும் புகல, மயிலிராவணன் கேட்டு கிருஷ்ண சர்ப்பம்போற் சீறி சீக்கிரமாக எழு ந்து கொலுக்கூடத்தில் வந்து உட்கார்ந்து, அப்பா கடகா! வாரும். அநுமான் வந்தானென்ருயே! துலா யந்திரத்திலிருந்த பூபதியான ராட்சதாள் எப்படி அநுமாரை விடுவார்கள்? அவர்களை இங்கேயழைத்து வா; ஒரே வெட்டாக வெட்டுகிறே னென்ருன்.

கடகன் சொல்லுகிருன்: வாரும் எங்கள் அரசனே! வெற்றிமுரசனே! இலங்கைக்கதிபதியே! நீர் வெட்டு கிறபரியந்தம் இருந்தாலல்லவோ; அவர்களை அநுமா

னென்னும் குரங்கு அடித்துக் கொன்றுவிட்டது என்ருன். மயிலிராவணன் வாசிமுகன் முதலிய மந்திரிகளைக் கூப்பிட்டு யோசனை செய்யவேண்டுமென்று சொல்ல, கடகன் கூறுகிருன்: ஐயா! நான் ஒருவன் தவிர வாசிமுகன் முதலியபேர்களும் இறந்துவிட்டார்கள் என்றுசொல்ல, மயிலிராவணன் அப்படியாவென கருவி வாளையுருவி மந்திரிகளிடம் மருவி இனிமேல் நடக்கத்தக்கதான காரியம் என்னவென்று கேட்டு கடகனைப் பார்த்துச் சொல்லுகிருன்.

கேளும் பிள்ளாய் கடகா! என் தங்கையான தூரதண்டிகையைத் தண்ணீர் கொண்டுவர அனுப்பினேன். அந்தப்பாவி அழைத்து வந்தாற்போ லிருக்கிறது. இல்லாவிடில் அனுமார் இங்கே வரத் தீரம் உண்டா? நல்லது, எல்லாவற்றிற்கும் அந்தத் தூரதண்டிகையும் நீலமேகனையும் போட்டு அடைத்து வைத்த காவற்கிடங்கிலே இருக்கிருர்களோ? இல்லையோ? அதைச் சற்றே பார்த்து வாவென்று அனுப்பினுன். கடகன் அதிசீக்கிரமாய் ஓடி அந்தக் காவற்கூடத்தைப் பார்த்தான். அப்படி பார்த்தபோது கதவு படுசூரணமாய்ப் போயிருப்பதையும், விலங்கு தூளாய் இருப்பதையும் பார்த்துச் சீக்கிரமாக ஓடிவந்து மயிலிராவணனுக்கு நமஸ்காரஞ் செய்து சொல்லுகிருன்: கேளுமையா சுவாமி! உமது காவற்கூடத்தில் இருவரும் அவ்விடத்திலில்லை என்று சொன்னுன். மயிலிராவணன் அப்படியாவென்று சீக்கிரமாக ஆக்கிரமித்து பராக்கிரமம் மீறி, வியாக்கிரமம் போலச் சீறி, கடகனைக்கண்டு இருவரையும் இப்போதே வெட்டிப் போட்டு வா என்று கடகனுக்கு விடைகொடுத்தனுப்பித் தானும் எழுந்திருந்து இராம லட்சுமணனைப் பத்திரகாளி கோயிலிலேவைத்தோமே என்று அந்தப் பெட்டியைப் பார்க்க வந்தான். அங்கே பெட்டி யில்லாதபடியால் மயங்கி தியங்கி என்ன செய்கிறதென்று ஆலோசித்துக்கொண்டு இருந்தான்.

இவன் இப்படியிருக்க, கடகன் அதிசீக்கிரமாகப் பட்டாகத்தியை உருவிக்கொண்டு நீலமேகனையும் தூர

தண்டிகையையும் வெட்டவேண்டி அவர்கள் எங்கே யிருக்கிறார்களென்று கோட்டைகளைத்தாண்டி மூலைக்கு மூலை தேடி இராஜமார்க்க வீதியிலே வரும்போது, அவனுக்கு எதிராக அனுமார் வரக்கண்டு பயங் கொண்டு கடகன் கிடுகிடு வென்று நடுங்கி ஒடுங்கி இனி எப்படி தப்பித்து ஓடுகிறதென்று அதிக விசாரத் துடன் பட்டாகத்தியைத் தெருவிலே எறிந்துவிட்டு ஒரு சந்திலே நுழைந்து குட்டிச்சுவர்களின் வெளி களைத் தாண்டி விழுந்து எழுந்து நான்கு மூலையும் பார்த்து, அனுமார் கண்ணில் அகப்படப்போகிறோ மென்று எண்ணி பயந்து அயர்ந்து போரிற் புறமுது கைக் காட்டி ஓடுவதுபோல் ஓடி, பத்திரகாளியம்மன் கோயிலுக்குச்சென்று பார்க்க, கதவு இடிந்து முறிந்து மண்ணாய்ப்படிந்து படுசூரணமாயிருப்பதைப் பார்த்து, இதேது மோசம் வந்தது, அதிசயமா யிருக்கிறது. பெட்டியை அனுமாரென்னுங் குரங்கு எடுத்துக் கொண்டு போய்விட்டது; இனி என்ன செய்வோம். இந்த பத்திரகாளியும் அவன் கூப்பிட்ட இடத்திற்குப் போனாளோ என்று சந்தேகித்து அந்த மாகாளியின் முகத்தைப்பார்த்தான். பார்த்தயிடத்திலே பத்திரகாளி அகம் நாணி முகம் கோணி விசனமடைந்திருப்பதைப் பார்த்து, சரிதான் பத்திரகாளியும் அனுமாரோடு போய்விட்டாளென்று எண்ணி யோசனைபண்ணி இனி அரண்மனைக்குப் போகவேண்டுமே, அனுமா னவன் எவ்விடத்திலாவது ஒளித்திருந்து வழி மறித்துக்கொண்டு அதம் பண்ணுவானோ என்று நாலுமூலையும் பார்த்து வாயுவேக மனோவேகமாய்ப் பறந்து மயிலிராவணன் அரண்மனைக்கு ஓடிவந்தான்.

அப்போது மயிலிராவணன் கடகனைப் பார்த்து அடா வாடா கடகா! நீ போயிருந்த காரியம் எப்படி யிருந்ததோ அப்படியே நான்போன காரியமும் இருந் தது என்று சொல்லி, உடனே மயிலிராவணன் அவ சரக்காரரை அழைத்துச் சொல்லுகிறான்: அப்பா வேவுகாரர்களே! நீங்கள் துரிதமாய்ப்போய் அந்தத் தூரதண்டி நீலமேகன் இருவரும் எங்கே போயிருக் கிறார்கள்? அதிசீக்கிரமாகப் பார்த்துவாருங்கள் என்று

சொல்லியனுப்ப, அவர்கள் அவ்வாறே அரசன்சொற்படி பாதாளலங்கை 400 - தெருவீதியும் தேடிவரும் போது நீலமேகனும் தூரதண்டிகையும் அனுமாரும் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டுப் பயந்து நடுநடுங்கிக்கொண்டு ஓடி மயிலிராவணன் சபையிலே வந்து அயர்ந்து மிகவும் சோர்ந்து, வாரும் பாதாள இலங்கேஸ்வரா! அதோ அனுமாரும் நீலமேகனும் தூரதண்டிகையும் பேசிக்கொண்டு வெகு அன்னியோன்னியமாக யிருக்கிறார்களென்று சொன்னார்கள்.

அப்போது மயிலிராவணன் வெகு கோபத்துடன் ஆயிரம் இராட்சதப் படைகளைக் கூட்டி நீலமேகன் தூரதண்டிகை இரண்டுபேரையும் பின்கட்டாகக்கட்டி இழுத்துவாருங்கள் என்று சொன்னான். அப்படிச் சொல்லிய மயிலிராவணன் சொல்லைத் தவறாது அந்த ஆயிரப்பேரும் ஏககாலத்தில் கடல் பொங்கியவாறு போல் திரண்டு உருண்டு அவரவருடைய ஆயுதங்களை எடுத்து அணிந்து வில்லுகளைக் கையிற்றாங்கி அம்புறாத் தூணியை முதுகிலே தாங்கி ஆயுதபாணிகளாக அந்த ஆயிரம்பேர்களும் தெருவீதியில் தேடிவரும் போது, அனுமார் ஒரு மூலையில் ஒளித்திருந்தார். இராட்சதர்கள் வந்துவிட்டார்கள். நீலமேகனும் தூரதண்டிகையும் இராட்சதர்கள் என்ன செய்யப் போகிறார்கள் பார்ப்போம் என்று இறுமாந்து இருக்க, உடனே அரக்கர்கள் வந்து இரண்டுபேரையும் பிடிக்க நெருங்கி அருகில்சென்று அடி வாடி தூரதண்டியே! அடாவாடா நீலமேகா! எங்கள் மயிலிராவணனுடைய சத்துருவைக் கொண்டுவந்து நமது கோட்டைக்குள் விட்டுவிட்டீர்களா? என்று அதட்டி வுருவி வெருவி முகங்கறுவி கோபம்பெருகி கடுகிப் பிடியுங்கள்; மூடுகி அடியுங்கள்; சேர்த்து கட்டுங்கள்; குறிபார்த்துத் தலையை வெட்டுங்களென்றார்கள்.

இவ்வாறு நானாவித வார்த்தைகளாடினார்கள். இதுகளைக் கேட்ட நீலமேகனும் தூரதண்டிகையும் கிடுகிடுத்து பயமெடுத்து அஞ்சி மனது துஞ்சி ஆஞ்சநேயா! அனுமந்தனையா! ஆபத்பாந்தவா! அனாதரட்

சகா! அச்சுதனோடு போந்தவா! சத்துருக்களிடத்தில் காட்டிக்கொடுத்தீரே! இப்படியுஞ்செய்யலாமா? வானர நாமா! மருவர்த்தாமா! வடிவுறுசோமா! நெடிபெறு ராமா! காக்கக்கடவீர் ஏழைபங்கா! எங்களை ஆளென்று முறையிட, அவ்வார்த்தையை அனுமார்கேட்டு அதி சீக்கிரமாக ஆகாயத்தில் எழும்பி குபீலென்று அரக்கர் படைமேல் விழுந்து யானைக்கூட்டத்திலே சீரிய சிங்கம் புகுந்தவாறுபோல் இராட்சதசேனையை ஒவ்வொருவராகக் கால்களைப் பிடித்துக் கரகரவென்று சுழற்றி ஆகாயத்தை நோக்கி மண்ணிற்ருக்க சேவகர்கள் பார்க்கத் தனது வஞ்சந் தீர்க்க யாவரையுங் கசக்கி எமபுரஞ் சேர்த்தார்.

மாண்ட அரக்கர்களில் ஒருவன் பிழைத்து மயிலிராவணனிடம் ஓடிவந்து, ஓ! ஓ! என்று விரைந்து சொல்லுகிருன்: ஆண்டவனே! மகுடாபிஷேகம் பூண்டவனே! இலங்கைக்கு அதிபதியே! ஆயிரம்பேர் போனேமே; அத்தனைபேரையும் அனுமார் சரிப்படுத்திவிட்டார் என்று சொல்ல, மயிலிராவணன் தீர்க்காலோசனைசெய்து அதிக கோபத்துடன் சகல ராணுவங்களையும் கூட்டி, கடகனை நோக்கி, அடா வாடா கடகா! உக்கிரசேனனை யனுப்பி ஆயிரங்கோடி குதிரைவீரர் இரண்டாயிரங்கோடி யானைவீரர் ஒட்டக வீரர்கள் அவரவர் ஆயுதங்களுடனே ஆக்யாபித்து 21-ரதங்களைப்பூட்டி போர்க்களத்தில் நாட்டுமென்று சொல்லியனுப்ப, கடகன் அப்படியே நல்லதென்று ஓட்டமாக ஓடி அச்சேனுதிபதிகளுக்குச் சொல்லி மயிலிராவணன் பக்கத்தில் வந்து சேர்ந்தான். உடனே யாவரும் யுத்தகோலத்துடனே வந்தார்கள். மயிலிராவணன் தனது தேரைச் சிங்காரித்துக் கொண்டு வரச் சொல்லி, ஆயுதபாணியாகத் தேரின்மேல் ஏறினன். அவனது சேனுதிபதிகளாகிய உக்கிரசேனன் - தசமவீமன்-காலதெட்சன் - வித்தியசயன் - உக்கிரசேனன்-சுக்கிரன் - இருமாலி-சம்புமாலி - அக்கினிகேது-தூமகேது-நாமகேது - தீரகாலன்-கடராட்சதன்-அம்பன்-நிகும்பன்-மந்தரன் முதலான சுத்தவீரர்கள் புடை

சூழச் சத்துருக்கள் தாழ முத்துக்குடைகள் கவிய மாற்றலர் கரங்கள் சிரமேற் குவிய சிங்கக்கொடி பறக்க மயிலிராவணனானவன் சகல சேனைகளும் புடைசூழப்படி பாதாளம்விட்டு இறங்கினான். இப்படியிருப்பதை அனுமார் பார்த்து மகா கோபத்துடனே விஸ்வரூபம் எடுத்துக்கொண்டு இராக்ஷசக் கூட்டத்தில் விழுந்து தாறுமாறாய் நொறுங்க அடிக்க, அப்போது இராக்ஷதர்களெல்லாம் அனுமாரைச் சுற்றிக்கொண்டு ஈட்டி எறியம்பு பாணமுதலிய ஆயுதங்களை எறிந்தார்கள். இருபதினாயிரந் தேரின்பேரிலே இருக்கின்ற மந்திரி பிரதானி சேனாபதிகள் தங்கள் தங்கள் வில்லுகளை வளைத்து ஆயுதங்களைத் தொடுத்து அனுமார்பேரிலே சரவருஷம் பொழிந்தார்கள்; ஆயிரங்கோடி பாணம் வருஷித்தார்கள்; நூறுகோடி மதயானைகளும் இருப்புலக்கையைப் பிடித்துக்கொண்டு கரகரவென்று சுழற்றி விட்டெறிய ஒருவெள்ளம் இராட்சதர்கள் சகல ஆயுதத்தினாலும் அடிக்க, அனுமாரானவர் பார்த்து தனது வாலை விஸ்தீரணமாய் வளைத்து வால்கோட்டையாகத் தன்னைச் சுற்றிலும் கட்டிக்கொண்டு அக்கோட்டைக்குள்ளே சட்டதிட்டமாய் காலை மடித்துக்கொண்டு உட்கார்ந்தார். அப்போது சகல ராக்ஷதர்களும் இரத கஜ துரகபதாதிகளும் அக்காலத்தில் அனுமாருடைய வால்கோட்டையின்மீது முப்பத்திரண்டு ஆயுதங்களையும் பிரயோகஞ்செய்து சின்னபின்னமாய் அடிக்க அனுமாரானவர் யோசனைசெய்து நாம் இப்படி உட்கார்ந்திருந்தால் பத்துநாளாகிலும் இவ்வண்ணமே இராக்ஷதர் ஒன்றுக்கும் அஞ்சாமல் சண்டை செய்துக் கொண்டிருப்பார்கள். ஆகையால் நாம் எழுந்திருந்து சண்டை செய்ய வேண்டுமென்று தனது வாலைப் பிரமாண்டமாய் வளைத்து இராக்ஷதரை வாலினாலும் கையாலும் மெய்யாலும் பல்லாலும் கல்லாலும் அடித்து உதிரத்தைக் குடித்தும் ஆத்துமத்தை முடித்தும், தேர்களை யொடித்தும், யானைகள் சேனைகள் ஒட்டகங்கள் கரடிகள் புலிகள் யாவற்றையும் அதமாக்கிப் பொடிப் பொடியா யுதைத்து தும்சப்படுத்தி பிரளய காலாக்கினி உருத்திரனைப்போல் ஆஞ்சநேயர் அடிக்க

சகல சேனையும் அடிபட்டு மூலையில் ஓடுவதைக்கண்டு. கதாசிங்கன் ஓடுகிறபேரைத் தடுத்து, ஆஞ்சநேயரைக் கொல்லுகிறேன்; யான் அவனை வெல்லுகிறேன்; நீங்கள் பயப்படாமலிருந்து வேடிக்கை பாருங்களென்று சொல்ல, ஆஞ்சநேயர்பேரில் சகல சேனைகளும்வந்து அநேக பாணங்களைப் பொழிந்தார்கள். அப்போது ஆஞ்சநேயர் தனது வாலை கதாசிங்கனுடைய இரண்டு காலின்கீழ் புகவிட்டு சுழற்றிக்கொண்டு கீழே யிழுத்து விட்டு நடுமார்பில் மிதித்தார். மிதித்தமாத்திரத்திலே அந்தக் கதாசிங்கன் நூறு நீர்க்குழி பதுங்கி நூறு கையும் ஒடிந்து கண்கள் வெளியே பிதுங்கி குடல்கள் நசுங்கி எலும்புகள்முறிந்து எமபுரத்தையடைந்தான்.

அப்போது வித்தியசிம்மனெனவன் மனம்பதைத்து கோபமீறி நாகத்தைப்போல் சீறி அனுமாரைப் பார்த்து, அடா ஆஞ்சநேயா! அனுமந்த தூயா நில்லு! கதாசிம்மனை அடித்து மாய்த்துவிட்டோம் என்று கர்வங் கொள்ளாதே; வீணாகத் துள்ளாதே; துள்ளிய மாடு பொதி சுமக்குமா? என் முன்னே சண்டைக்கு வாடா? இப்போதே சங்கரிக்கிறேன் என்று ஆண்மை கூற, அப்போது அனுமார் வித்தியசிம்மன்பேரில் எதிர்த்தார். வித்தியசிம்மன் வில்லை வளைத்து அநேக பாணங்களைப் பிரயோகஞ் செய்தான். கோபத்துடனே துரிதமாய் ஓடி தேரின்பேரிலிருக்கிற வித்யசிம்மனைப் பிடித்து தமது கையினால் ஓங்கி யறைய, வித்திய சிம்மன் மூர்ச்சையாய்த் தேரின்பேரிலிருந்து கீழே விழுந்து விரைவாக எழுந்து ஓட்டம் பிடித்தான். அவன் ஓடுவதைக்கண்ட கடகரோமன் என்கிறவன் ஆஞ்சநேயரோடு எதிர்த்து யுத்தஞ் செய்தான். அவனையுந் தன்னுடைய கையால் அறைந்தார். அந்த அறையினால் கடகரோமன் இரத்தங் கக்கிக்கொண்டு கீழே விழுந்து எமபுரத்தைச் சேர்ந்தான்.

பின்பு நான்காம் வீட்டிலே பிரவேசிக்க, அவ்விடத்திலே காலதட்சனெனவன் அதிசீக்கிரமாய் வில்லிலே பாணங்களைப் பூட்டி பிரயோகஞ் செய்தான்.

அப்போது ஆஞ்சநேயர் அநேக ஆயுதங்களினல் யுத்தஞ் செய்த பின்பு தனது வாலை கீழே புகவிட்டு தேரின்பேரிலே யிருக்கிற காலதட்சனைக் கட்டியிழுத்து ஆகாயத்தில் தூக்கி கரகரவென்று சுழற்றி நிலத்தில் அடிக்க, அவனும் எமபுரத்தை யடைந்தான். அதைக் கண்ட உக்கிரசேனன் வக்கிரசேனன் இவ்விரண்டு பேரும் கண்களில் தீப்பொறி பறக்கக் கோபித்து, வில்லை வளைத்துக் குணத்தொனி செய்தார்கள். அப்போது அனுமார் அதிசீக்கிரமாக எழும்பி குபீலென்று உக்கிரசேனனுடைய தேரின்பேரில் ஒரு காலும் வக்கிரசேனனது தேரின்பேரில் ஒருகாலும் வைத்து வீராவேசத்துடன் மிதித்துக்கொண்டு இருவர் கழுத்தையும் இரண்டு கையினல் பிடித்து அங்கு மிங்கும் அசையாமல் அழுத்த இராட்சதாள் யாவரும் பிதுர் கலங்க அவரவர் கழுத்தையும் இறுக்கிப் பிடித்து இரத்தம்பீறி விஷங்களைக் கக்கிக்கொண்டு விழ அம்பலப்படுத்தி யாவரையும் எமபுரஞ் சேர்த்து, பின்பு ஏழாம் வீட்டில் போகிறபோது தீரசிம்மனென வன் ஆஞ்சநேயரைப் பார்த்து அட்டகாசஞ் செய்தான். அடா வானரா! உனக்கு வாலிருக்கிறதென்றல்லவோ கர்வம் அடைந்திருக்கிருய். இதோ பார் உன்னைப்போல் எனக்கும் நாவானது அதிக பெரிதாயிருக்கின்றது. இந்த நாவினலே உன்னைக் கட்டிப் பிடித்து விழுங்கி விடுகிறேனென்று ஆண்மைகூறி இருவரும் மல்யுத்தம் செய்ய, அப்போது ஆஞ்சநேயர் பின்னடைய தீரசிம்மனெனவன் ஆஞ்சநேயரைப் பிடிக்கவேண்டுமென்று தனது நாவை நீட்டினன். அனுமார் தனது கையால் ஐந்து சுற்ருகச்சுற்றி யிழுத்து கரகரவென்று ஆகாயத்தில் சுழற்ற தீரசிம்மனின் நாவானது அடியோடே அறுந்து விழுந்து எமபதிக்குப் போய்ச் சேர்ந்தான்.

பின்பு ஆஞ்சநேயர் எட்டாம் வீட்டில் போகிற போது சம்புமாலியானவன் அதிககோபத்துடனேவர ஆஞ்சநேயர் பார்த்து தனது வாலை கீழேவிட்டு சம்புமாலிக்குத் தெரியாமல் காலை யுதைக்க, அவன் இரண்டு

விழியும் பிதுங்கி பூமியில் விழுந்து காலன் பதியடைந்தான். அதைவிட்டுப் போகிறபோது அக்கினி கேது யென்றவன் அநேக பாணங்களினுல் துப்சப் படுத்த ஆஞ்சநேயர் தன்னுடைய வாலினுல் அவன் கழுத்தை இறுக்கிப் பிடித்து எமபுரஞ் சேரச் செய்து விட்டு அப்பால் போகிறபோது ஆஞ்சநேயரோடு எதிர்த்து யுத்தஞ்செய்ய நிர்வாகமில்லாமல் மூலைக்கு மூலையாய் விழுந்து அலைச்சல்பட்டு வந்து மயிலிராவணனன் அண்டையில் போய் உரைக்க, மயிலிராவணன் தனக்குத் தானே யோசனைசெய்து, ஓ ராட்சதர்களே ! மாதங்கி சொன்னபடியே ஆச்சுது பார்த்தீரோ; இது என்ன அதிசயம் ! முன் ஆகாயவாணி நீலமேகன் இப்பாதாள லங்கையைப் பட்டங்கட்டிக் கொள்வானென்ருளே ; அவளுடைய திருவாக்குக்கு எதிர் வாக்கு இல்லாமல் முடியுமாப்போல் தோணுகிற தென்று மனதில் நினைத்து, விசாரத்துடனே தன் மனது தாளாமல் கோபம் பெருகி, மனது கருகி இராக்ஷதரைப் பார்த்துச் சொல்லுகிருன்.

இராக்ஷதர்களே ! வாருங்கள் ; உங்களாலான வரையில் பாருங்கள்; மூலைக்கு மூலை ஏன் ஓடுகிறீர்கள்; நான் இருக்கச்சே உங்களுக்கு என்ன பயம் ; நானே அந்த அனுமந்தனைச் சங்காரஞ் செய்வேன் ; என்னுடைய மாய்கையைக் கண்டுபிடிக்கக் கூடுமோ ? அவன் புத்தியில் நாடுமோ ? நாடாது. ஒரு சமயம் கண்டு பிடித்தாலும் என்னுடைய ஜீவன் இருக்குமிடம் அவனுக்குத் தெரியுமோ ? அவனுக்கு என்னைச் சங்கரிக்குப்படியான வல்லமையுண்டோ ? இல்லை. நானே அந்த அனுமாரைக் கொல்லுகிறேன். இதோ பார் என்னுடைய வீரயாகத்தைச் செய்து மகா பூதபிரளயத்தை அழைத்துக் கொண்டுபோய் அவனை அதம் பண்ணுகிறேனென்று பராக்கிரமங் கூறி, ஆஞ்சநேயர் பேரில் ரதத்தையேவ, ஆஞ்சநேயர் சகல ராட்சதர்களும் சுகமென்று நினைத்த காலதட்சன் - உக்கிரசேனன் - வக்கிரசேனன் - கடகன் - திரிகடசிம்மன்- சம்புமாலி-அக்கினி கேது முதலான சேனுதிபதிகளை

அதஞ்செய்து இனி எவன் சண்டைக்கு வருவான் என்று யோசனைசெய்து இடுப்பில் இரண்டு கையையும் ஊன்றிக்கொண்டு இறுமாந்து கொடூர முகத்தோடு கண்ணில் நெருப்புப்பொறிகள் பறக்க உருமிப் பார்த்திருக்கிறபோது, அங்ஙனம் ஒரு ரதம் வரக்கண்டு, இது யாருடைய ரதம்? இவன் எந்த சேனாதிபதியோ? என்று நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்க, அந்த ரதத்தின்பேரில் வெவ்விய புரவிகள் பூட்டியிருக்க, இருபுறத்திலும் ராக்ஷதாள் சூழ்ந்து நிற்க, வச்சிரத்தினாற் செய்த வெள்ளைக்குடையானது பிடிக்க, ரதகஜ மேளம் அடிக்க வீரர்கள் படபடவென்று குதிக்க, குதிரைகள் தடதடவென்று நடக்க, இருபுறத்திலுஞ் சாமரைவீச, சகல ஜனங்களும் கோஷ்டமிட்டுப் பேச, இப்படி நானாவித அலங்காரத்துடன் பாணங்கள் சொரிய மகா ஆயுதபாணியாய் வருவதைக் கண்டு ஆஞ்சநேயர் சொல்லுகிறார்.

அடா வாடா மயிலிராவணா? இராக்ஷதனாகிய நீ எங்கு ஒளித்தாலும் உன்னை விடுவேனா? நில்லு நில்லென்று கருவிச் சொல்லிக்கொண்டு வருகையில், மயிலிராவணன் கோபங்கொண்டு அநேக பாணங்களினால் அடிபட்டு நொந்து உடம்பு ஆதியந்தமும் இரத்த மயமாய் ஒழுகும்படி பாணத்தை ஆஞ்சநேயர் பேரில் பிரயோகஞ்செய்தான். அப்போது ஆஞ்சநேயர் மகா கோபத்துடனே கொஞ்சமாகிலும் சட்டை பண்ணாமல் மனதில் யாதொன்றும் எண்ணாமல் பாணத்தின்மேல் விழுந்து ஓடிவர, மயிலிராவணன் அனுமந்தர் வருவதைப் பார்த்து மகா தவஞ்செய்த வரப்ரசாதமான அஸ்திரங்களை எல்லாம் ஏககாலத்திலே பிரயோகஞ் செய்ய, அது அக்கினி சுவாலையாய் எரிந்துகொண்டுவர, அனுமார் அக்கினியாஸ்திரத்தை வாலாலே சுழற்றியடிக்க, அப்போது அக்கினியாஸ்திரம் பூமியிலே விழுந்து எரிந்து போயிற்று. மயிலிராவணன் அக்கினியாஸ்திரம் வியர்த்தமாய் போனது கண்டு மகா கோபத்துடனே மகாவுக்கிர அஸ்திரத்தை யெடுத்து பிரயோகம் பண்ணினான். அவ்வஸ்திர

மானது விடுபட்டு அனுமாரைச் சுற்றிவந்து பூமியில் விழுந்துபோக மயிலிராவணன் கண்டு சகல அஸ்திரமும் பிரயோகஞ்செய்து பலன் என்ன ? இனி யாதோர் அஸ்திரமுமில்லையென்று மனதில் திகிலடைந்து மகா விசாரத்துடனே யோசனைசெய்து அடா நாம் என்ன காரியம் செய்தோம். மாதங்கி சொன்ன வார்த்தை நிலை நின்றது ; அவ்வார்த்தையைக் கேளாமற் போனேமே ; ஆ தெய்வமே! இனிமேல் எவ்வாறு ஜெயிப்போம்; தசகண்ட ராவணனுடனே பிரதிக்கினை செய்து உறுதிகூறி வந்தோமென்று மனச் சஞ்சலமாய்த் தனது தேரின்பேரில் வில்வளைத்து யுத்தஞ் செய்யாமலிருக்க, அதை ஆஞ்சநேயர் பார்த்து அதிக உக்கிரத்துடனே ஆகாயத்தில் எழும்பி அவனுடைய தேரின்பேரில் குதித்து தும்சப் படுத்தும்போது அவன் தேரைவிட்டு கீழே குதித்து அப்பால் நிற்க, ஆஞ்சநேயரால் ரதமானது பொடிப் பொடியாய்ப் போனவுடன் மயிலிராவணன் நிற்கப் பார்த்து அனுமார் ஐந்துவிரலையும் மடக்கி அவனுடைய நடுமார்பிலே குத்த, மயிலிராவணன் மூர்ச்சையாகி நாக்கிலும் மூக்கிலும் இரத்தம் கக்கிக்கொண்டு அலறி பூமியில் விழுந்து, உடனே எழுந்திருந்து கோபத்துடனே தண்டாயுதத்தைச் சுழற்றி, ஆஞ்சநேயர்பேரில் எறிய, மூர்ச்சையடைந்து சீக்கிரத்தில் பந்தடித்தாற்போல் பதறிக் கிளப்பி அட்டகாசஞ்செய்து மயிலிராவணனைப் பார்த்து, அடா நில்லு: நில்லு: திருடா என்று சொல்லிக்கொண்டு தனது வாலைக் கீழே பாட்டு அவனுடைய இரண்டு காலையும் சுழற்றி இழுத்து ஆகாய மார்க்கத்திலே தூக்கி கரகரவென்று சுழற்றி பூமியில் அடிக்க, மயிலிராவணன் பூமியில் அறைபட்டு நூறு சுக்கலாய்த் தெறித்து உருவு தெரியாமல் அடித்து பிருத்தஞ் செய்து சந்தோஷத்துடனே நாம் செய்த பிரதிக்கினை முடிந்ததென்று ராமச்சந்திரமூர்த்தி யிருக்கும் ஸ்தானமாகத் திரும்பித் தோத்திரஞ்செய்ய, அப்போது மயிலிராவணன் முன்போல் உருவாகி ஐந்து விரலை முஷ்டியாகப் பிடித்து ஆஞ்சநேயர் பின்புறத்தில் வந்து அவரது முதுகில் ஒங்கிக் குத்தினன்.

அவர் திரும்பிப்பார்த்தார். மயிலிராவணன் நிற்பதைக் கண்டு இது எது காரணம்; இவனைச் சங்காரம் பண்ணினேனே! இவன்யார்? மயிலிராவணன்போல் தோன்றுகிறது. இன்னம் இவனைப்போல் இரண்டு மூன்று பேருண்டோ என்று ஐயுற்று யோசனை செய்து கொண்டிருக்கும்போது, அவன் அட்டகாசம் பண்ணி அருகில் நின்றுக்கொண்டு அனுமாரைப் பார்த்து, அடா வானரம் என்று சொல்லி நிற்கிறவனை ஆஞ்சநேயர் சற்றுகிலும் திரும்பிப் பாராமல் ஐந்து விரலால் முஷ்டிகுத்தாகக் குத்தி அதஞ்செய்ய, மறுபடியும் எழுந்திருந்து யுத்தஞ் செய்ய, பின்னும் மயிலிராவணனைச் சாக அடித்து அஷ்ட திக்கிலும் மார்க்கண்டங்களை சக்கை சக்கையாகப் பேர்த்து எறிய அக்கண்டங்கள் மூன்னூறு யோசனைக்கு அப்பால் போய் விழுந்தன.

அப்போது ஆஞ்சநேயர் மயிலிராவணனைக் கொன்றுவிட்டோமென்று சந்தோஷத்துடனே ராமமூர்த்தியை நினைத்து தோத்திரம் செய்யும்போது, மயிலிராவணன் மூன்னூறு யோசனைக்கு அப்பால் விழுந்து கிடந்த மார்க்கண்டங்களெல்லாம் ஒன்றுகச் சேர்ந்து முன்போல் உருவாகி, அடா அனுமந்தா! நீ சண்டைக்கு வருவாயென்று கேட்க, அனுமார் மயிலிராவணனைப் பார்த்து இது என்ன ஆச்சரியப்! இறந்து போனவன் அடிக்கடி பிழைத்து வருகிருன்; இவ்வதிசயம் நான் எங்கும் கண்டதில்லை; இது என்ன ஆச்சரியம்! என்று யோசனைசெய்து பலவிதமாய் இது என்ன காரணமோ! அல்லது தவமோ! அல்லது வல்லமையோ! அந்தப் பாதகனை விபீஷணன் மயிலிராவணனுடைய வல்லமை இப்படிப்பட்டதென்று சொல்லாமற் போனுனே; இனிமேல் இவனை எப்படி கொல்லுகிறது; இவன் இவ்வண்ணமாய் செத்து செத்துப் பிறப்பானுகில் நான் எப்படி ஜெயிப்பேன்; என் பிரதிக்கினை எப்படி முடியும்; நீலமேகனுக்கு என்னுல் பட்டங்கட்ட முடியுமோ; ஆ ஆ தெய்வமே! இப்படி வல்லமையான மயிலிராவணனுடைய மாய்கைக்கு நான் பாத்திரனல்ல; ஓ இராமலட்சுமணுளே!

உங்கள் காரியார்த்தமாய் வந்த எனக்கு இந்த அப ஜெயம் வரலாமோ! தேவர்கள் நீங்களாவது இங்ஙனம் வந்து இவனது வரம் இப்படிப்பட்டதென்று எனக்குச் சொல்லலாகாதா! என்ன செய்வேனென்று விசாரப்பட்டுக்கொண்டு மனந் திடப்பட்டுச் இனிமேல் நடக்கும் மர்மம் யார் சொல்லப்போகிறுர்கள். நீலமேகன் தூரதண்டிகை இவர்களிடத்திற்குப்போய் இம்மர்மந் தெரிந்துகொள்ள வேண்டுமென்று மனதில் உத்தேசித்து மயிலிராவணனைப் பார்த்து அதிக கோபத்துடனே தன் வாலைக் கீழேவிட்டு அவனுடைய கால்முதல் கழுத்துவரையில் பிரிசுற்றினுற்போலச் சுற்றி யிழுத்து ஆகாயத்தில் கரகரவென்று பம்பரம் போலச் சுழற்றி விசையாய் எறிந்துவிட்டு அங்கிருந்தபடியே நீலமேகன் தூரதண்டிகை இவர்கள் அருகிற் போகவேண்டுமென்று மகா சந்தோஷத்துடனிருந்தார். அங்ஙனம் அப்படியிருக்க தூரதண்டி நீலமேகனைப் பார்த்துச் சொல்லுகிருள்.

அடா வாடா குமாரகா! சண்டாள மயிலிராவணனுடனே ஆஞ்சநேயர் யுத்தஞ்செய்து எப்படி பேர்த்து எறிந்தாலும் மறுபடியும் ஒன்ருடொன்று உருப்படுத்திக்கொண்டு மறுபடியுஞ் சண்டைபண்ண வருவானே; அவனைக் கொல்லும்விதம் ஆஞ்சநேயருக்குத் தெரியாது; நீ இங்கேயிரு; நான் அவரைக்கண்டு மயிலிராவணனைக் கொல்லுகிறதற்குத் தந்திரஞ் சொல்லி வருகிறேனென்று நீலமேகனை அவ்விடம்விட்டுப் பிரயாணமாய் வந்து பார்க்க, அப்போது மயிலிராவணனும் அனுமாரும் ஒரு வீட்டிலிருந்து சண்டை பண்ணுகிறதைக்கண்டு ஆஞ்சநேயரிடத்தில் போய் யாதொரு சங்கதியுஞ் சொல்ல முடியாமல் பயந்து அந்த வீட்டிலே நின்றுகொண்டிருந்தாள்.

அப்போது ஆஞ்சநேயர் தூரதண்டிகையைப் பார்த்து சந்தோஷமடைந்து அவள் அருகிற் சென்று என்ன சங்கதியென்று வினவ, தூரதண்டிகை சைகையால் ஆஞ்சநேயரைப் பார்த்து, சுவாமி அனுமாரே! உட்காருமையாவென்று சொல்லி நாங்கள் ஒளித்

திருந்த இடத்திலே நீலமேகனை விட்டுப்போட்டு உமது அண்டைக்கு வரவேண்டுமென்று வந்தே னென்று சொல்ல, அப்போது ஆஞ்சநேயர் தூர தண்டிகையைப் பார்த்து, வாரும் பெண்ணே தூர தண்டி! என்ன சொல்லுகிருய்? அந்த மயிலிராவண னுடனே பலபல யுத்தம் பண்ணி சித்திரவதை பண்ணினுலும் மறுபடியும் எழுந்து சண்டைக்கு வரு கிருன். இவ்வண்ணம் செத்துப் பிழைப்பது இவ் வுலகில் உண்டோ? இது என்ன ஆச்சரியம்! அவ னுடைய விருத்தாந்தம் என்ன? ஆண்மைதா னென்ன? நீயாகிலும் அறிவாயா? அறிந்தாயாளுல் தெரிந்தவரையிற் சொல்லென்று கேட்க, தூரதண் டிகை ஆஞ்சநேயரைப் பார்த்துச் சொல்லுகிருள்: வாரும் வானர சிரோமணியே! நான் தெரிந்த வரையில் சொல்லுகிறேன் கேளும். முற்காலத்தில் நானும் என் கணவனுஞ் சுகமாக வாழ்ந்திருக்குங் காலத்தில் ஒருகாரியார்த்தமாய் என் வீட்டில் விருந்து உண்ண வந்தான். அவனுக்கும் சகல பிரஜைகளுக் கும் சட்சுவையோடு அன்னம் பாலிக்கச் சகலரும் போஜனஞ் செய்து கைகால் சுத்திபண்ணி தாம்பூலந் தரித்துக்கொண்டு சந்தோஷமாயிருக்குங் காலத்தில் மயிலிராவணனுனவன் தனது உயிர் நிலைத்திருக்கப் பட்ட ஸ்தானத்தைக் கபடு இல்லாமற் சொன்னுன்.

அந்த விபரத்தை யாதென்று கேட்பீராளுல் யான் சொல்லுகிறேன் கேளும். மயிலிராவணனே என்ருல் அநேக தவங்கள் செய்து சகல வரங் களும் பெற்றதுமன்றி. மறுபடியும் பிர்மாவை அநேக காலந் தபசு பண்ணினுன். அந்தத் தவமானது சத்திய லோகத்தைத் தணலாய் எரிக்க, அப்போது பிர்மா சரஸ்வதி சமேதராய் மயிலிராவணன் அருகில் வந்து தபசை நிறுத்து; உனக்கு வேண்டும் வரத்தைக் கேளென்ன, மயிலிராவணன் பிர்மாவைப் பார்த்துச் சொல்லுகிருன்: வாரும் பிர்மாவே! நீ வரங்கொடுப் பது மெய்யானுல் சொல்லுகிறேன் கேளும். நீர் எனக் குச் சகல அஸ்திரங்களுங் கொடுத்திருக்கின்றீர். இனி எனக்கு யாதொன்றும் தேவையில்லை. நீர் கொடுத்த

அஸ்திரத்தினலே நான் யுத்தஞ்செய்து ஜெயத்தை யடைவேன். அந்த அஸ்திரம் வியர்த்தமானல் வெட்டிப் பிளந்தாலும் என் உயிர் என்னைவிட்டு நீங்காமலும் வெட்டுப்பட்டு துணுக்கு துணுக்கையானலும் மறுபடியும் ஒன்ருேடொன்று சரீரம் சேர்ந்து உயிராகவேண்டும்; எப்போதுஞ் சண்டைக்கு இளையாமல் வெற்றி பெறவேண்டும்; அவ்வண்ணம் வரங்கொடுத்தால் மகா உத்தமம்; அப்படி கொடுப்பீரானல் உமது கீர்த்தியானது உலகமெங்கும் பிரகாசிக்கும் என்று பிரதிபாலித்துச் சொல்ல, பிரமாவானவர் பார்த்துச் சொல்லுகிருர்: பிள்ளாய் இலங்கை மன்னவா! நீர் கலங்காது சொன்னய், இவ்வார்த்தையைக் கேட்டால் உயிர்போய்விட்டால் பஞ்சபிராணனும் போய்விடுமே; மறுபடியும் எவ்வாறு உன் பிராணன்வரும்; பஞ்சபிராணன் இருந்தாலல்லவோ ஜீவன் வருமென்றனர். அப்போது மயிலிராவணன சொல்லுகிருன்: வாரும் வரங்கொடுக்கும் பிரமாவே! பஞ்சபூதமிருந்தாலொழிய ஜீவன் வராதென்றீர்; யான் சொல்லுறேன் கேளும்: என்னுடைய பஞ்சபூதம் ஐந்து வண்டாய் உருவு கொண்டு எனது பாதாள இலங்கையிலே மூவாயிரம் யோசனைக்கப்பால் விந்தியாசல பர்வதமொன்று இருக்கிறது; அப்பர்வதத்தில் ஐந்து குகை யிருக்கின்றது; அந்த ஐந்து குகையிலும் என்னுடைய பஞ்சபூதங்கள் ஐந்து வண்டாய் உருவுகொண்டு இருக்கவேண்டும் என்று கேட்க, அதற்கு பிரமாவானவர் இவ்வண்ணமாய் வரங்கொடுத்தால் உலகமெல்லாம் அதம்பண்ணுவான்; யாவரையுந் தன் மனதிலே பாததூளியென்று எண்ணுவானென்று மனதில் உத்தேசித்து மயிலிராவணனைப் பார்த்துச் சொல்லுகிருர்.

வாரும் பிள்ளாய் மயிலிராவண! உன் இஷ்டப்படி வரங்கொடுத்தேன்; யாராகிலும் உன்னேடு எதிர் நின்று யுத்தஞ்செய்து உன்னை மிதித்துக்கொண்டு அந்த விந்தியாசல பருவதத்தில் இருக்கிற வண்டையும் நசுக்கிப் பொசுக்கிக் கொன்றுவிட்டால் அப்போது உன் ஜீவன் போய்விடும் என்று கூற, மயிலிராவணன்



பிர்மாவைப் பார்த்துச் சொல்லுகிறுன். வாரும் பிர்ம சிருஷ்டியே! அவ்வண்ணம் எதிர்த்து என்னை மிதித்துக்கொண்டு அந்த விந்தியாசல பர்வதத்தி லிருக்கிற வண்டுகள் ஐந்தையுங் கொன்ருல் அப்போது என் ஜீவன் போகும்; அதில் ஒருவண்டு தப்பிப்போனுல் சாகத்தக்கதில்லையென்று வரங்கொடும் என்றுசொல்ல, பிர்மாவானவர் அவன் கோரிக்கையின்வாறே வரங் கொடுத்து சத்தியலோகத்திற்குப் போனுரென்று என்னுடனும் என் கணவனுகிய காலதத்தனிடத்தும் சந்தோஷத்துடன் சொல்லியிருந்தான். ஆகையால் ஆஞ்சநேயரே! அவனுக்கு இத்தனை கெர்வமும் ஆங்காரங்களும் உண்டாயின. அவனுடைய விருத்தாந்தம் இப்படிப்பட்டது. அவனை எவ்விதமாகிலும் சங்காரம் பண்ணும் பிள்ளாயென்று சொல்ல, ஆஞ்சநேயர் ஆ! ஆ! இவ்வளவு தந்திரமிருக்கிறதா என்றுமனதில் ஆலோசனை செய்துகொண்டு உடனே அதிவேகமாய் அவ்விடத்திலிருந்து ரணக்களம் வந்து குதித்தார்.

அப்போது மயிலிராவணன் ஆஞ்சநேயரைப் பார்த்து, அடா வானரா! நீ எங்கே போனுய்? நான் உன்னை விடுவேனே? எமபுரத்துக்கு அனுப்புவேன்; நீ கெட்டியாய் நம்பு; இதுபரியந்தம் எங்கே ஒளித்து இருந்தாய்? என் உயிரைப்போக்க உன்னுல் ஆகுமோ? இதோ பார், உன்னிடம் நான் ஒரு மாய்கை பண்ணுகிறேன்; உன் கண்ணுக்குப் புலப்படாமலிருக்கிறேன்; என்னுடைய மாய்கையைப் பாரும்; வல்லவனென்று மனதில் சந்தேகந் தீரும் என்று ஆண்மைகூறி அக்கணமே கண்கட்டு மந்திரஞ்செய்து ஆஞ்சநேயர் கண்களைக்கட்டி அவரது கண்ணுக்குத் தெரியாமல் நின்று அநேக விசேஷங்களைச் சொல்ல, ஆஞ்சநேயர் மயிலிராவணனைப் பார்த்து, அடா வாடா திருடா! இராக்ஷதப்பதரே! நீ இவ்வித மாய்கை அடைந்திருக்கிருய்; இந்திரசித்தனென்பவன் எவ்வாறு போனுன்? அவ்வாறு நான் உன்னை அதம்பண்ணுகிறேன்; உன் மாய்கையைவிட்டு என்முன்னே நில்லடா? என் கேள்விக்கு உத்தரவு சொல்லடாவென்ருர். ஆஞ்சநேயர் பின்னும் மயிலிராவணனைப் பார்த்துச் சொல்லுகிருர்.

வாடா இராட்சத அதமா! இவ்வுலகு உனக்குச் சதமா! உன் விருத்தாந்தம் யாவும் அறிந்தேன். உன் மாய்கையுந் தெரிந்தேன். உன்னையும் என் வாலுக்கு பலி கொடுக்கிறேன் மாய்கை செய்யாதே; என்னை நீ வைதாயே; என்முன் நில்லடா; என்னை சண்டையில் வெல்லடா; ஏன் கெட்டுப்போகிறாய்; அந்தப் பாவி யான தசகண்டராவணன் சீதாதேவியைத் திருடிக் கொண்டு வந்தான், அந்தத் திருடனை ராமமூர்த்தி கோதண்டத்தினாலே அதம்பண்ணிப் போடுவார். நாளையதினம் சூரிய உதயத்திற்கு நீயும் திருடனோடு திருடனாய் கட்டுண்டு இராம லட்சுமணனைக் கொண்டு வந்து திருட்டுத்தனமாய் வைத்த உன்னை இலேசாக விடுகிறதில்லை; நீ என்ன செய்வாய்; "அஷ்டமத்துச் சனியன் புட்டத்துத் துணியையுரியும்" என்பதுபோல் ஆயின. அதற்காக என்செய்வாய்; ஆகாயவாணி வாக்குத் தப்புமோ; உன் செய்கை யாவருக்கும் ஒப்புமோ; சூரிய உதயத்துக்குள் உன் பாதாள இலங்கையை நீல மேகனுக்குப் பட்டங் கட்டுகிறேன்; உன் ஜீவனை இக்ஷணமே எமபுரத்துக்கு அனுப்புகிறேன் என்று பிரதிக்கினை கூறி, மயிலிராவணனைப் பிடிக்க பிரதட்சணமாய் சுற்றி லகுபார்த்திருக்கிறபோது மயிலிராவணன் திடுக்கிட்டு, இதேது ஆச்சரியம் உன் விருத்தாந்தம் உன் மாய்கை இவற்றை யான் அறிவேன் என்றானே; இவ்வண்ணம் இவன் அறிந்துசொன்னது தூரதண்டியால் அறிந்திருக்கவேண்டும்; இல்லாவிட்டால் இவன் அறியத் திறமையுள்ளவனோ என்று யோசனைசெய்து மயிலிராவணன்பயந்து, இனிமேல் நாம் இவன்கையில் அகப்படக்கூடாது அகப்பட்டால் இவன் நம் உயிரை மடித்திடுவான் என்று எவ்விதத்திலும் தப்பித்துக் கொண்டேயிருந்தான்.

அச்சமயத்தில் ஆஞ்சநேயர் மயிலிராவணனைக் கட்டிப்பிடித்து பூமியில் அறைந்து கொல்லுவோம் என்று யோசனைபண்ணி ஸ்ரீராமமூர்த்தியை நினைத்து அதிக கோபத்துடனே இனிமேல் தாமதஞ் செய்யக் கூடாது, தாமதஞ் செய்தால் இப்பாதகன் ஓடிப்

போவானே, இப்போது இருபத்துநான்கு நாழிகை யாச்சுது என்று அறிந்து உடனே அங்கிருந்தபடியே ஆகாயத்தின்மேல் எழும்பி மயிலிராவணனுடைய தேரின்மீது குதித்தார். அவன் திடுக்கிட்டு பயந்து நடுநடுங்கி இனிமேல் இங்கே நிற்கக்கூடாது என்று அந்தாத்தியானமாய் ஒருவர் கண்ணுக்குந்தெரியாமல் மாய்கையால் மறைந்து ஓடிப்போனான். அப்போது அனுமார் தேரிலிருந்து கீழேகுதித்துப் பார்த்து, மயிலிராவணனைக் காணுமல் அவன் எங்கு ஓடிப் போனானே; என்ன மாய்கை செய்தானே? தெரிய வில்லையென்று நான்குமூலையுஞ் சுற்றிப்பார்த்து எங்குங் காணுமல் விசாரப்பட்டுக்கொண்டு இருக்கும்போது மயிலிராவணன் அதிசீக்கிரமாய் அனுமார் வந்துவிடு வாரோ; வந்தால் பிடித்துக்கொள்வாரோ என்று மனதில் திகிலடைந்து திரும்பிப் பார்த்துக்கொண்டு ஓடிப்போய் தங்கக்கோட்டைக்கும் முத்துக்கோட்டைக் கும் நடுவில் ஒரு உத்தியானவனத்தின் தோப்பில் ஆல விருட்சம் பிரமாண்டமாய் வளர்ந்து கப்புங் கிளையு மாகத் தழைத்திருக்கின்றது. அந்த மரத்தின்கீழ் ஒரு வழி போகிறது. அந்தப் பாதாளத்தில் ஒரு வெளி யிருக்கின்றது. அந்த வெளியேபோய் பதுங்கிக்கொண் டிருந்தான்.

அப்போது இராட்சதப் பிராமணுள் யாவரும் மயிலிராவணன் ஓடிப்போவதைப் பார்த்து, ஆலமரத் தின் கீழே வீரணயாகம் பண்ணப்போனவன்போல் காண்கின்றது. ஆகையால் நாமும் போகவேணும் என்று அதிசீக்கிரமாய் சுயரூபமெடுத்து ஒருவர் கண் ணுக்கும் புலப்படாமல் யாகத்துக்கு வேண்டுவன கொண்டு யாகசாலையை முஸ்தீபு செய்து ஒன்பது கோணமாய் ஓமகுண்டம் வெட்டி மயிலிராவணன் உட்கார்ந்திருந்து ஆர்த்திபண்ணுகிறதற்குமுக்கோண மாய் மேடைபோட்டு சுடலைக்குப்போய் நெருப்பு எடுத்துவந்து தலைமண்டை யோட்டில் எருமைக் காலில் இரத்தஞ்சொரிந்து ஓமகுண்டத்தைச் சுற்றி லும் அந்தத் தலையோட்டையிட்டு எருமைக்கிடாவின்

எலும்புகளினாலே ஓமகுண்டத்துக்கு நான்கு பக்கத்திலும் தர்ப்பாசனம் போட்டாற்போல் அஸ்திகளைப் பரப்பி பனைமரம் கொண்டுவந்து துஜஸ்தம்பமாக நாட்டி, அந்த துஜஸ்தம்பத்தில் ஒரு சர்ப்பத்தைக் கட்டினார்கள். பின்னும் ஓமகுண்டத்தின் நடுவில் உயர் வாய் தலைகீழாகக் கட்டி அக்கினிச்சுவாலையாக எழும்ப அத்திரிகோணமேடையில் தலைமண்டையோடு கவிழ்த்து அவ்வோட்டின்பேரில் தனது வலதுகாலையூன்றி இடதுகாலை கழுத்தில்மாட்டி அர்த்தசந்தன மணிந்து கொண்டு உதிரநிறமான புட்பமாலைகளை கழுத்திலும் சிரசிலும் தரித்துக்கொண்டு இரத்தவஸ்திரம் உடுத்தி இடக்கரத்தில் சபமாலையேந்தி வலக்கரத்தினால் எக்கியாஸ்திமுதலான நவதானிய சமித்துகளை ஆவாகனம் பண்ணி அந்ததுஜஸ்தம்பத்திலே கட்டியிருக்கப்பட்ட சர்ப்பத்தை அறுத்து நெய்யில் தோய்த்து பூரண ஆகுதி கொடுத்தான். கொடுத்தவுடனே அந்த அக்கினி குண்டத்திலிருந்து பிரமாண்டமாய் ஒருபூதம் புறப்பட்டு மயிலிராவணனைப் பார்த்துச் சொல்லுகின்றது.

வாரும் ஐயா பாதாளலங்கைக்கு அரசனாகிய மயிலிராவணா! என்னை யாது காரியமாய் இந்தயாகஞ்செய்து அழைப்பித்தீர்? அந்தக் காரியத்தைச் சொல்லும்; நான் ஜெயித்து வருகிறேனென்றுகூற, அப்பூதத்தைப் பார்த்து, ஓ பூதமே! என் சத்துருவாகிய ஆஞ்சநேயரைச் சம்மாரஞ் செய்து வருவாயென, அந்தப் பூதம் பிரளயகால ருத்திரனைப்போல் கர்ச்சித்து மயிலிராவணனைப் பார்த்து, மகா வல்லமையுள்ள பாதாள இலங்கைக்கரசனே! நீ கூறியவாறே ஆஞ்சநேயரை அதம்பண்ணி வருகிறேன். அவன் எப்படிப்பட்டவனோ; அடங்கா மன்னனோ; யாரோ தெரியாது; சகலத்திற்கும் நீரே துணை. இந்தவேள்வியை விடாமல் செய்துகொண்டுவா; நான் சீக்கிரமாகப் போய் ஜெயித்து வருகிறேன்; நீ யாதொன்றுக்கும் அஞ்ச வேண்டாம் என்று கூறி, பின்பு அந்த யாகசாலையை விட்டு இரணபூமியில் ஆஞ்சநேயரிருக்குஞ் சமீபத்தில்

வருவதை அனுமார் பார்த்து இது என்னடாவென்று அதிக கோபத்துடனே எழுந்திருந்து அந்தப் பிரளய கால பூதத்தைப் பார்த்துச் சொல்லுகிறார்.

வாடா ராக்ஷச மாயா! நீ என்ன மாய்கையாய் வந்தாலும் நான் பயப்படுவேனோ? என்று அதிக கோபத்துடன் ஐந்து விரலையும் முஷ்டியாகப் பிடித்து பூதத்தைக் குத்த வரும்போது அந்தப் பிரளய காலாக்கினி பூதமானது ஆவென்று வாயைத்திறந்து கோவென்று அட்டகாசஞ் செய்து வாயிலிருந்து அக்கினிச்சுவாலை யானது குபீல் குபீலென்று புறப்பட நடந்து ஆஞ்சநேயரென்பவர் நீதானோ? உன்னை இப்போதே பஸ்மீகரமாக எரித்துப்போடுகிறேனென்று ஆஞ்சநேயருக்கு எதிரில் நின்று ஆவென்று வாயைத் திறந்தது. உடனே அவர்பேரில் அக்கினிச் சுவாலை சூழ்ந்து பற்றிக்கொண்டு எரிய, அவர் அக்கினிக்குப் பயந்து நடுங்கி ஒடுங்கி மூர்ச்சையடைந்து கோபந் தெளிந்து ஆ! இது என்ன காரணம் என்று ஆச்சரியப்பட்டு கோபத்துடனே அப்பூதத்தின் மார்பிலே ஒரு குத்து விட்டார். அந்தக் குத்தினால் பிரளயகால பூதமானது மார்புபிளந்து மூர்ச்கையாய் பூமியில்விழுந்து எழுந்து கோபமீறி ஆஞ்சநேயரைப்பார்த்து சமீபத்தில்வந்து நாலுவிசை மூன்றுவிசை விடாமல் அக்கினிச்சுவாலை சொலிக்கும்படி யூத, அப்போது அவருக்கு திரேகமெல்லாம அனலாய் எரிக்க, எரிந்தவிடமெல்லாம் துடைக்க, எரிச்சல் மாறாமல் வேதனையாக இருந்தது. அப்போது அனுமார் வருத்தமடைந்து சீதாதேவியையும் இராமலட்சுமணனையும் நினைத்து பல வாறாய்த் தொழுது கண்ணீர்விட்டு அழுததுமன்றி அக்கினிபகவானை நினைத்து உன் நிமித்தியமல்லவா இராவண சம்மாரம் பண்ணுகிறேன்; சகல தேவதைகளும் நீர் உபகாரார்த்தமாய் வந்தவரல்லவா; அப்படியிருக்க, நீர் என்னைத் தகிக்கலாமா நீ இப்படிச் செய்வது உனக்குத் தருமமா என்று தோத்திரஞ் செய்தார். அப்போது அக்கினிபகவான் சில்லென்று தணிந்திருந்தார். அப்போது ஆஞ்சநேயர் நேரில் வந்து உட்கார்ந்திருக்க அவர் ஸ்தூல சரீரத்துடனே

அவ்விடம்விட்டு அப்பாலே நீங்கிப்போய் அடங்கி கிளம்பி தூரதண்டிகை அருகில் வந்து குதித்து, அவளைப் பார்த்து ஆஞ்சநேயர் சொல்லுகிறார். வாரும் பெண்ணே தூரதண்டிகையே! நான் உன்னோடு பேசிக்கொண்டிருந்து இவ்விடம்விட்டுப் போனேனே; அத்தருணத்தில் மயிலிராவணன் எங்கேயோ மாய்கை யாய்ப் போய்விட்டான். அதன்பின் எங்கிருந்து வந்ததோ இப்பிரளய காலபூதம்; இது அனலாய் எரிக் கின்றதே; என்னால் கூடுமானவரையில் யுத்தஞ் செய் தேன்; யாதொரு காரியமும் முடியவில்லையே; இப்பூதம் எக்காரணத்தால் வந்ததோ; அல்லது இராவண னுடைய மாய்கையால் வந்ததோ; யாதுந் தெரி யேனே என்று தூரதண்டியைக் கேட்க; அப்பெண் ணனவள் யான் ஒன்றும் அறியேன் என்று சொல்ல, ஆஞ்சநேயர் சொல்லுகிறார். ஸ்ரீ தர்மதேவதைகளே! யான் சொல்லுகிறதைக் கேளுங்கள். வைகுந்தவாசரா கிய மகாவிஷ்ணு ராமமூர்த்தியாய் அவதாரஞ்செய்து சத்தியந் தவருதிருக்கிறதும், சீதாபிராட்டியும் மகா பதிவிரதையாயும், நான் அந்த ராம லட்சுமணனுடைய பாதாரவிந்தங்களைச் சேவித்துக்கொண்டிருப்பது மெய் யானால் இப்போது அனலாய் எரிக்கிற பூதம் இன் னது என்று எனக்குச் சொல்லவேண்டும் என்று சொன்னார். அப்போது தர்மதேவதைகள் நடுநடுங்கி, ஆகாயத்திலிருந்து ஆஞ்சநேயரைப் பார்த்து சொல்லு கிறார்கள்: வாரும் அனுமந்த சிகாமணியே! இப் போது இந்தப் பூதம் மயிலிராவணன் அனுப்பிய பூதம்; ஆனபடியால் இப்பூதத்தை ஜெயிக்கமுடியாது; உனக்கு ஏற்ற மர்மம் சொல்லுகிறேன் கேள். அதோ தங்கக் கோட்டைக்கும் வெள்ளிக்கோட்டைக்கும் நடு வில் தோப்பு இருக்கிறது; அத்தோப்பில் ஒருவழி போகின்றது. அதில் ஐந்து குகைகள் இருக்கின்றது; அவ்விடத்திற்குப் போனால் ஒரு யாகசாலை அமைத்து யிருக்கின்றது; அந்த யாகசாலையில் இந்த மயிலிரா வணனனவன் வீரணயாகம் என்கிற ஒரு யாகத்தை அதர்வணவேத தோத்திரமாய்ச் செய்கிறான். அந்த யாகம்பண்ணச்சே ஓமகுண்டத்திலிருந்து இந்தப்பூதம்

புறப்பட்டு வந்தது. அவன் இன்னமும் யாகஞ் செய்துக்கொண்டேயிருக்கிறுன். அவன் யாகத்தை முடிக்குமுன் நீ அதி சீக்கிரத்திற்போய் விக்கினஞ் செய்தால் இப்பூதத்துக்குப் பலம் ஒடுங்கிப் போகும். அப்பால் பூதம் சொல்லாமல் ஓடி யமபுரத்தை நாடும். அவ்விடத்தில் தானே சங்காரம் பண்ணலாம் என்று தருமதேவதைகள் கூறிஞர்கள். அதைக் கேட்டவுடன் ஆஞ்சநேயர் ஆகாயத்தில் எழும்பி அந்த இடத்தைத் தேடிப் போகும்போது அப்பூதமானது மகா கோபத்துடனே ஆஞ்சநேயரைப் பார்த்து, அடா குரங்கே! நீ எங்கே போகிருய்? நில் நில் என்று சொல்லிக்கொண்டு பின்தொடர்ந்து துரத்திக்கொண்டு போக ஆஞ்சநேயர் பூதத்தைப் பார்த்து, நீ கெட்டாய் கெட்டாய் என்று அதிக வேகமாய் ஆலமரத்தின் அடியில் வந்து இறங்கிஞர். அவ்விருக்ஷத்தின்கீழ் மயிலிராவணன் மனித ரூபமாகவும் இராக்ஷத பிராமணுள் காவலாகவும் நான்கு மூலையும் பார்த்துக்கொண்டு யாகஞ் செய்து இருந்தவர்கள் ஆஞ்சநேயரைக் கண்டவுடனே எட்டி புகுந்து திட்டிவாசற்கதவைத் தாட்கொண்டு பூட்டிக் கொண்டார்கள். மாய்கையால் ஆலமரத்தின் பட்டையானது கீழே விழுந்து வழி தெரியவொட்டாமல் மூடிக்கொண்டது. ஆஞ்சநேயர் அம்மரத்தின் சப்தத்தைக் கேட்டு, சீக்கிரத்தில் ஒருவன் இவ்வழியை மூடிக் கொண்டு உள்ளே ஒளித்துக்கொண்டான். இது தர்ம தேவதைகள் கூறிய ஆலமரம். ஆகையால் இந்த மரத்தை அடியோடே பிடுங்கிப்போடுவோம் என்று இரண்டு கையிஞலும் அம்மரத்தைப் பிடித்து அசைத்துப் பிடுங்க, அப்போது அந்த மகா பிரளயகால பூதமானது மரத்தைப் பிடுங்கிக்கொண்டு இருக்கிற ஆஞ்சநேயருடைய முதுகிலே குத்த, அவர் திரும்பிப் பார்த்து அப்பிரளயகால பூதத்தை வாலிஞலே சுற்றி இழுத்துக் கட்டிக்கொண்டு மரத்தை வேரோடே பிடுங்கி அப்பால் எறிய, அங்ஙனம் குகை தோன்றிப் பாதாளம் போக, அந்தப் பாதாள வழியாக ஆஞ்சநேயர் பூதத்தை வாலிஞல் கட்டினபடி கீழேயிறங்கி யாகசாலையைப் பார்த்து,

அவ்விடத்தில் மயிலிராவணன் ஓமம் பண்ணிக் கொண்டு இருக்கிறதைக்கண்டு, ஐந்துவிரலையு மடக்கிக் குத்தினர். அதனல் மயிலிராவணன் மூர்ச்சையாய்க் கீழே விழுந்தான். அதன்பின்பு ஆஞ்சநேயர் அங்கிருந்த ஓமபாத்திரங்களை யெல்லாம் உடைத்து யாக குண்டத்தை யிடித்து விக்கினஞ்செய்ய, மயிலிராவணன் மூர்ச்சைதெளிந்து எழுந்து அனுமானிடத்து கிடுகிடுவென்று நடுங்கி நாம் தப்பித்துப் போகவேண்டுமென்று மாய்கையாய் ஓடிப்போனன். அப்போது ஆஞ்சநேயர் யாகசாலை யாவையும் அதஞ்செய்து தன் வாலில் கட்டுண்ட பூதத்தைக் கரகரவென்று சுழற்றி பூமியில் அடித்தார். அப்போது அந்தப் பூதமானது அந்தரத்தியானமாய்க் குதித்து ஆகாயத்திலே போய் அனுமாரைப் பார்த்துச் சொல்லுகிறது. வாரும் ஐயா அனுமந்தரே! ஸ்ரீராமகாரிய துரந்தரா! கேளும். அந்த மகாபாவியான மயிலிராவணனலே உம்மிடத்தில் சண்டைதொடுத்தேன்; போய்வருகிறேன் சுவாமி! அதோ மயிலிராவணன் மாய்கையாய் ஓடிப் போய்விட்டான். அவனைத் தேடிப்பிடித்து சம்மாரஞ் செய்யும்; அந்த யாகத்தை விக்கினஞ் செய்தீரே. உம்மைப்போல் வல்லமையானவர் இவ்வுலகத்திலுண்டோ? சுவாமி! ராமமூர்த்திதூதா! நீ இந்த மயிலிராவணனைஜெயித்து கீர்த்தியடையக்கடவாய் என்று வரங்கொடுத்துப்போய் விட்டது. அப்போது ஆஞ்சநேயர் அந்த விஷயத்தைக் கேட்டு மயிலிராவணன் எங்குபோனனே என்று பராக்கிரமங்கூறி ஆகாயவாணி பூமிதேவி இவ்விருவர் சாட்சியாகத் திரும்பிப் பார்த்தார். மயிலிராவணன் காணமலிருக்க, அதிககோபங்கொண்டு, அடாதிருடா! நீ எங்கே போனய்; நான் உன்னை விடுவேனே என்று அருணேதயத்துக்குமுன்னே அரக்கனகிய மயிலிராவணனைக் கொல்லாமற்போனல் இப்பாதாள இலங்கையிலே நான் அக்கினி பிரவேசமாகக்கடவேன் என்று சபதங்கூறி அங்கிருந்தபடி ஆஞ்சநேயர் வெளியே புறப்பட்டு பாதாள இலங்கைப்பட்டணம் நானூறு தெருவாச்சுதே; எந்த மூலையில் ஒளித்திருக்கிருனே என்று எங்குந் தேடிக்கொண்டிருந்தார்.

அத்தருணத்தில் மயிலிராவணன் ஆஞ்சநேயர் கண்ணுக்குப் புலப்படாமல் அவர் சொன்ன விசேஷங்களை யெல்லாம் கேட்டு பயப்பட்டு நடுநடுங்கி, நாம் இனிமேல் எங்கேபோய்பிழைப்போம்; அவன் நம்மை விடுகிறவனாகத் தோன்றவில்லையே என்று யோசனை செய்து முத்துக் கோட்டைக்கு வடபுறத்தில் ஒரு வெளியான இடத்தைப் பார்த்து, அவ்விடத்திலே போய் தன்னுடைய மாய்கையினாலே தனது சரீரத்தை வெள்ளிமலையாக்கி அவ்வெள்ளிமலையிலே சில விருட்ச சாதிகளும் மண்டபங்களும் மாடமாளிகை கூடகோபுரங்களுமாகக் கொடிமுடியோடே வெள்ளியங்கிரிக்குச் சமானமாய் விழுந்து கிடந்தான்.

அப்போது அனுமாரானவர் மயங்கித் தியங்கி இலங்கைப்பட்டணத்து நானூறு தெருவிலுந் தேடி மயிலிராவணனைக் காணாமல் தூரதண்டி அருகில் வந்து வாராய் பெண்ணே தூரதண்டி! அப்பூதத்தையும் மயிலிராவணனுடைய எக்கியத்தையும் விக்கினஞ் செய்து அவனைத் தேடிப்பார்க்கையில் எங்கேயோ மறைந்து போய்விட்டான். அவன் எங்கு இருக்கிறானோ; அவன் இருக்குமிடம் உனக்குத் தெரிந்திருக்குமா ? என்று தூரதண்டிகையைக் கேட்க, அவள் அனுமாரைப் பார்த்துச் சொல்லுகிறாள்.

வாரும் சுவாமி ஆஞ்சநேய சிகாமணியே! அந்த மயிலிராவணனுடைய மாய்கையை எம்மால் அறியக் கூடுமோ; யாராலும் அறியக்கூடாதே; அப்படியிருக்க அவன் மாய்கையை என்னாலறிய வல்லமையுண்டோ? அவன் எவ்வாறாயினானோ; என்னரூபம் எடுத்திருக்கிறானோ; ஆனால் சொல்லுகிறேன் கேளும் : ஐயா! அவன் எங்கேயாகிலும் மாயசொரூபமாகி பிரமிக்கும்படியாக உற்பத்தியாகி புதிதாய்த் தோன்றச்செய்வான். அதைப் பார்த்தவரும் அனந்தரூபமாயிருப்பானென்று சொல்ல, அனுமார் கேட்டு தூரதண்டியைப் பார்த்துச் சொல்லுகிறார்: கேளும் தூரதண்டி! புதியதும் பழையதும் உனக்குத் தெரியுமல்லவா; நான் முன்னே

போகிறேன் ; நீ என் பின்னால் வா ; எனக்குத் தெரியும் தெரியாமைக்கும் நீ தூண்டுகோலாகயிரு; என்று ஆக்யாபிக்க, தூரதண்டி நல்லது என்று சம்மதித்து அவருடன் புறப்பட்டு இலங்கைப் பட்டணம் நானூறு தெரு வீதியுந்தேடி, கோட்டைகள் சுற்றும் ஓடி ஓரிடத்திலும் காணமல் மனது நாடி மூத்துக்கோட்டை சமீபமாக ஓடிவரச்சே அங்ஙனம் வெள்ளியங்கிரியைக் கண்டு ஆஞ்சநேயர் இது முன் இருந்ததோ இல்லையோ என்று சந்தேகப்பட்டு அப்பால் நடக்கின்ற போது, தூரதண்டியானவள் வெள்ளியங்கிரியைப் பார்த்து, இது ஏதோ புதிதாயிருக்கின்றது; மயிலிராவணனுடைய மாய்கையோ என்று ஐயுற்று ஆஞ்சநேயர் அண்டையில் ஓடி அவருக்கு சூட்சமாய் வெள்ளி மலையைக் காட்டி இது புதிதா யிருக்கிறது என்று சொல்லவே, அவள் வாக்கைக்கொண்டு ஆஞ்சநேயர் ஐந்து விரலையும் மடக்கி மகா கோபத்துடனே அந்த வெள்ளியங்கிரியை நோக்கித் தாங்கிக்குத்த, அக் குத்தானது மலையிற்பட்டு சுக்கல் சுக்கலாய் தெறித்து படு சூரணமாய்ப்போக, அந்த மயிலிராவணனானவன் வெள்ளியங்கிரியிலிருந்து கிணறுவெட்ட பூதம் புறப்பட்டதுபோல வெளியில் புறப்பட்டு அனுமாரைப் பார்த்து புன்னகைகொண்டு சொல்லுகிறன் : அடா வாடா அனுமந்தா ! அமரர்கள் நேயா ! என்னுடைய மாய்கையை உன்னால் கண்டு பிடிக்கக் கூடுமோ? நான் உன் கையில் அகப்படுவேனே? என்னுடைய மாய்கையைப்பார் என்று அவர் கண்ணுக்குப் புலப்படாமல் அந்தரத்தியானமாய் ஓடிப்போனன். ஆஞ்சநேயர் மயிலிராவணன் மாய்கையைப் பார்த்து, அடா! இவன் திருடன் ; இவனைக் கண்டவுடனே பிடியாமற்போனேனே ; இன்னம் என்ன மாய்கை செய்வானே ; எவ்விதம் கண்டுபிடிப்பேன் என்று அங்கலாய்த்து மறுபடியும் லங்கைப்பட்டணம் வந்து நானூறு தெருக்களிலுந்தேடி எங்குங் காணமல் நடுத்தெருவில் நடந்து தேடிக்கொண்டு போகிறபோது, மயிலிராவணனானவன் தன்னுடைய உத்தியான வனத்திற்குப்போய் உட்கார்ந்துகொண்டு மகா விசாரத்துடனே இனிமேல்

என்ன செய்யப்போகிறோம் என்று மகா துக்காக்கிரந் தனாய் வெளியே புறப்பட்டு நாம் அனுமாருடன் சண் டை செய்யவென்றால் நம்மால் முடியாது; அல்லது மாய்கையால் இருப்போமென்றால் நம்முடைய மாய் கைக்கு உடன்படுகிறவனல்ல; நாம் இங்கிருந்தால் எவ் விதத்திலும் நம்மைக் கண்டுபிடித்து நம் உயிரை மடித்துப்போடுவான். ஆகையால் நாம் இப்போதே தசகண்டராவண னிடத்திற்குப்போய் இவ்விடத்தில் நடந்த சமாச்சாரமெல்லாம் ஆதியோடந்தமாகத் தெரியப்படுத்தி அவனை அழைத்துக்கொண்டு வந்து சண்டைக்கு ஏகினால் நலமாயிருக்கும். இல்லாவிட்டால் நாம் இப்போது ஒளித்திருப்போமானால் எவ்விதத் திலும் கண்டு பிடித்து எமபதி சேரும்படி முடிப்பதற் குச் சந்தேகமில்லை; பொழுது விடியுந் தருணமாயிற்று; அனுமார் அக்கினிப் பிரவேசம் பண்ணுவான். பின் எப்போதும்போல் லங்கைப்பட்டணத்திலே தசகண்ட ராவணன் சுகமாயிருப்பான்; நாம் சுகமாய் பாதாளலங் கையைப் பரிபாலனஞ் செய்துகொண்டிருப்போம் என்று யோசனைசெய்து திடீரென்று புறப்பட்டு தச கண்ட ராவணனை அழைத்து வருவோம் என்று அதி சீக்கிரமாய் மாயா சொரூபமெடுத்து ஒருவர் கண்ணுக் கும் புலப்படாமல் ஓர் தாமரைக்குளத்தின் நூல் வழி யைப்பார்த்து தாள்போட்டாப்போல் அதிசீக்கிரமாய் அடைத்துக் கிடக்க, அப்போது மயிலிராவணன் தாமரை நூல் தண்டுவழியைத் தட்டி முட்டி இடித் துப் புடைத்து நோக்கிக் குத்தினான். எது செய்த போதிலும் வழிவிடாமல் அடைபட்டிருக்கப் பார்த்து நான் வரச்சே அந்தச் சக்கர கமலத்திலே யிருக்கிற ஆயிரங்கோடி ராட்சதர்களையும் பத்திரமாயிரும் என்று சொல்லி வந்தோமே; அவர்கள்தான் இப்படி காவலுடன் பத்திரமாய் அடைத்துக் கொண்டிருக்கிறார்களோ யாதோ தெரியவில்லை என்று மனதில் உத்தேசித்து இராட்சதர்கள் பேரைச் சொல்லி, அடா கடகரோமா! அடா சம்பு மாலி! என்று அவன் வார்த்தை சொல்லிக் கூப்பிட, அப்போது வாயுதேவன் மயிலிராவணன் கூப்பிடுகிறு

னென்று அறிந்து, நீ யாரடா என்று கேட்க, அப்போது மயிலிராவணன் கேட்டு, யாரடா அங்ஙனம் பேசுகிறது; குரல் வேருக இருக்கிறது; அங்கே ஆயிரங்கோடி இராட்சதர்கள் இருந்தார்களே; அவர்கள் இருக்கிருர்களா? அவர்கள்பேசுங்குரல்வேருகின்றது; உன் பேர் என்ன? உன் ஊர் என்ன? என்று கேட்க, அப்போது வாயுபகவான் ஆரடா! இங்ஙனம் வந்து நீதாகு கூப்பிடுவது என்று கேட்க, மயிலிராவணன் கேட்டு நான் பாதாளலங்கைக்கு அரசன்; இவ்விடம் யார் இருக்கின்றது; வழிவிடடா என்றுசொல்ல, வாயுபகவான் மயிலிராவணனைப் பார்த்து, அடா இலங்கை மன்னு! நீதானு கூப்பிடுவது; நான்தான் வாயுபகவான்; அனுமார் கட்டளைப்படிக்கு நான் இங்கு வழிகாத்திருக்கிறேன்; ஒருவரையும் விடப்போகாதென்று சொல்ல, மயிலிராவணன் வாயுபகவானைப் பார்த்துச் சொல்லுகிருன்.

ஓ வாயுபகவானே! உன் குமாரனும் நானும் அநேகம் சண்டை பண்ணினேம்; அப்போது அனுமாரும் கோபம்வந்து பலவிதமாய்த் தாறுமாருயடித்து அதம்பண்ணி வந்தார்; அப்போது என்னுடைய மாய்கைகளிலே அவன் என்ன செய்தபோதிலும் அதற்கு அஞ்சாமல் என்பேரில் சண்டைக்கு மிஞ்சாமல் ஆச்சரியமாய் தப்பித்துக்கொண்டேன். ஆகையால் ஆஞ்சநேயர் மகா வல்லமைசாலியென்று வெகுவாய் மெச்சிக்கொண்டேன்; என்னை அவரும் மெச்சிக்கொண்டார்; நாங்கள் ஒருவர்க்கொருவர் சந்தோஷப்பட்டு உன்குமாரனுக்குப் பாதாளலங்கையைப் பட்டங்கட்டிவைத்தேன்; நான் வெளியே போகவேண்டும்; எனக்கு நீ வழிவிடும் பிள்ளாய் என்று சொல்ல, வாயுதேவன் கேட்டு தனக்குள்ளே யோசனைசெய்து மனந்துணிந்து சகலமும் அறிந்துகொண்டு மயிலிராவணனைப் பார்த்து புன்சிரிப்புகொண்டு, அடடா ராக்ஷதப் பயலே! நான் உன்னுடைய மாய்கைக்கு அகப்படுவேனே? ஆஞ்சநேயர் உத்தரவு இல்லாமல் உன்னைப் போகவிடுவேனே? பயித்தியக்காரா போ! என்று சொல்ல, அப்போது வாயுபகவான் யோசனை செய்து

இந்த மயிலிராவணன் மாயாவிகோதி; வேறே வழி பண்ணிக்கொண்டு போனாலும் போவான்; நமக்கு இந்த வில்லங்கத்தை முன்னமே ஆஞ்சநேயரானவர் நம்மோடு சொல்லிப்போனாரே; யாராகிலும் பலவந்தம் பண்ணினால் என்னை நினை என்று சொன்னாரே; ஆகையால் அனுமாரை அழைப்போம் என்று மனதில் நினைத்துக் கொண்டு மயிலிராவணனைப் பார்த்துச் சொல்லுகிறான்: அடா வாடா ராக்ஷதப்பயலே! நான் வழிவிட உத்தரவில்லை; நீ அவருக்குப் பட்டங்கட்டி வைத்தேனென்றும், உன்னை அவர் வெளியே போகச் சொன்னாரென்றும் சொன்னையே; அது மெய்யானால் நீ அந்த அனுமாரை அழைத்துவந்து எனக்குச் சொல்வாயானால் அதன்பிறகு உனக்கு நான் வழிவிடுகிறேன்; அழைக்காவிட்டால் இப்போதே அந்த அனுமாரை அழைக்கிறேனென்று பிரதிக்கினைகூறி, ஆஞ்சநேயரை நினைத்து, ஓ ராமகாரிய துரந்தரா! அனுமந்தா! வாரும் என்று ஆஞ்சநேயரைக் கூப்பிடுகிற போது, அவர் இலங்கைப்பட்டணம் நாலூறு தெருக்களும் தேடிக் காணாமல் விசாரத்துடனே முத்துக் கோட்டையின்மேல் ஏறி நான்கு மூலையும் ஆராய்ந்து பார்த்து கண்ணுக்குப் புலப்படாமல் அங்ஙனம் உட்கார்ந்துகொண்டு தலைமேலே கையைவைத்து விசாரப்பட்டுக்கொண்டு இருக்கிறவேளையிலே வாயுபகவான் அழைக்க, திடுக்கென்று எழுந்து வாயுவேக மனோவேகமாய் ஓடிவரும்போது, மயிலிராவணன் ஆஞ்சநேயரைப் பார்த்து நடுநடுங்கி நாம் என்ன மாய்கை எடுத்து மறைந்துபோவோம் என்று இருந்தாப்போல் இருந்து ஒரு மதயானையாய் நான்கு கொம்புகளுடனே ஸ்தூலசரீரமெடுத்து ஓடலுற்றான். அப்போது அனுமார் வாயுபகவானே! நீர் யாது காரியமாக என்னை அழைத்தீர் என்று கேட்க, வாயுபகவான் ஆஞ்சநேயருக்குச் சொல்லுகிறார்.

வாரும் அனுமாரே! இவ்விடம் மயிலிராவணன் வந்து உமக்கு பட்டங்கட்டி வைத்தான் என்றும், தன்னை விடச் சொன்னானென்றும் இவ்விதமாய்க் கூறினான். நான் வழி விடுகிறதில்லையென்றேன். அப்

போது மயிலிராவணன் என்னைப் பார்த்து, நீ வழி விடாவிட்டால் நான் வேறே கள்ளவழி செய்து கொண்டு போவேன் என்ருன். அவ்வசனங் கேட்டு உம்மை அழைத்தேன் என, அனுமார், ஓ வாயுபகவா னே! இப்படித்தானல்லவோ என்னுடைய வால்கோட் டையைப் பார்த்து ஏமாற்றிவிட்டுப்போனுன். அவனு டைய மாய்கை எனக்குத் தெரியும். பிரமாதிகள் வந்து வழி விடச்சொன்னுலும் விடாதே; ஜாக்கிரதையாயிரு; என்ருக்யாபித்து, மயிலிராவணன் எங்கு ஒளித்தானே என்று தேடிவரும்போது ஒரு மதயானை நான்கு கொம்புடனே ஓடப் பார்த்து, தூரதண்டியானவள் உபாயமாய் ஒரு விரலாலே யானையை அனுமாருக்குக் காட்ட, அவர் அந்த மதயானையை அதிவேகமாகத் துரத்திக்கொண்டு வந்து ஐந்து விரலையும் முஷ்டி யாகப் பிடித்து யானையினுடைய மத்தகத்தின்பேரில் குத்த, அந்த யானையானது மத்தகம் பிளந்து வீறிட் டுக்கொண்டு சாக, அந்த யானைக்குள் இருந்த மயிலி ராவணன் வெளியே புறப்பட்டு, ஆஞ்சநேயா! நான் உன்கையில் அகப்படுவேனே? என்னுடைய பராக்கிர மத்தைப் பாரும் என்று மாய்கையினுலே ஒரு ரதத்தை சகல ஆயுதங்களோடு மகா வுன்னதமாய் க்ஷணநேரத் துக்குள் உண்டு பண்ணி அனுமாரைப் பார்த்து, இலங்கைமன்னன் சொல்லுகிருன்: அடா வானரா! இதுபரியந்தம் மாய்கையாயிருந்தேன்; இனிமேல் நான் மாய்கையை விட்டு ரதாரூடனுய் வந்தேன்; நான் உன்னை விடத்தக்கதில்லை; இப்போது என்னு டைய பாணப் பிரயோகத்தைப் பாரும் என்று மயிலி ராவணனுனவன் பிர்மசொரூபியாகிய சிவபிரானைத் துதிக்க, அவரே கதியென்று எண்ணி தீர்க்காலோசனை பண்ணி தன் வில்லை குணத்தொனி செய்து நாணே றிட்டு முதுகில் கட்டியிருந்த அம்புப்பெட்டியில் தன் கரத்தை விட்டு சில சரங்களை யெடுத்து மனதில்தானே தூபதீப நைவேத்தியஞ் செய்து, மந்திரோபதேசத் தோடு வில்லில் தொடுத்துவிடுத்தான். அந்தப்பாணம் வானத்தில் எழும்பி தேவர்கள் நடுங்க மின்னல் இடி மழைகளோடுங் கூடி மேகங்களையும் காற்றையும் பர்வ

தங்களையும் இன்னும் அதிக வியப்பு அடையத்தக்க விநோதங்களையும் காண்பித்தது. அதை ஆஞ்சநேயர் பார்த்து, ஒரு கணையெடுத்து தூபதீப நைவேத்ய முத லியவற்றைச் செய்து வில்லிற்பூட்டி மந்திரோபதேசத் தோடு தொடுத்தார். அக்கணை 1-10-100-ஆயிரம்-பதினாயிரம் - நூராயிரம்-கோடி-சதகோடி-சங்கம்-மகா சங்கம் என்னும் சகல ஜனங்கள் வேடிக்கை பார்க்க நாடிற்று. பின்னும் அனுமார் கஜாஸ்திரத்தை தொடுத்தார்.

அதுகண்டு மயிலிராவணன் அந்த கஜாஸ்திரத் துக்கு வைரியாகிய கேசரியாஸ்திரத்தை விட்டு அதனை அறுக்க, ஆஞ்சநேயர் சர்பாஸ்திரத்தை எடு த்து விடுத்தார். உடனே இலங்கைமன்னன் அதற்கு வைரியாகிய கருடாஸ்திரத்தை விட்டு அறுக்க, அனு மார் அக்கினியாஸ்திரத்தை யெடுத்துவிட்டார். அவ் வஸ்திரத்துக்கு வைரியா யிருக்கப்பட்ட வருணாஸ்தி ரத்தை விட்டு அறுத்தான். இன்னும் இருளாஸ் திரத்தை விடுத்தார். உடனே சூரியாஸ்திரத்தை விட்டு அறுத்தான். மறுபடியும் சுராஸ்திரப் பிரயோ கஞ் செய்தார். அதையுங் கந்தர்வாஸ்திரத்தை விட்டு அறுத்தான். இதன்றி இன்னும் அநேக அஸ்திரங் களை விடுத்தார். அவைகளைப் பாவியாகிய மயிலிரா வணன் முறைமுறையே கண்டித்து வந்தான். இதனைக்கண்ட தேவர்களும் மகிழ்ந்தார்கள். ஆஞ்ச நேயரைப் பலவாருகப் புகழ்ந்தார்கள். இப்படி ஒருவர்க் கொருவர் அஸ்திரங்களை தோர்வை யில்லாமல் பொழிந்தார்கள்; அநேகர் உயிர்விட்டு ஒழிந்தார்கள்; சிலரை நறுக்கிப் பிழிந்தார்கள்; போர்க்களத்தில் இறந் தார்கள்; இரத்தம் பரவி ஓடின; கணங்கள் ஆனந்தங் கொண்டு பாடின; இப்படி சண்டப் பிரசண்டமாய் யுத் தம் நடத்தினார்கள். இவ்விதமாய் நடத்தியும் மயிலிரா வணன் சண்டைக்கு இளையாமல் சகலரும் விரும்பும் படி வில்லை வளைத்து நாணேறிட்டு விற்குணத் தொனிசெய்து வலிய பாணங்களைத் தொடுத்து சிங்க நாதஞ் செய்தான். சோனைமழைபோலச் சரமாரி பெய் தான். ஆஞ்சநேயர் அவன் தொடுத்துவிட்ட பாணங்

களை யெல்லாம் அறுத்துவிட்டு இராமமூர்த்தியை யடுத்து அவரே நமது கடவுள் என்று எண்ணி யோசனைபண்ணி, அடா மயிலிராவணா! நான் இனி சோர்வேனென்று எண்ணாதே, உன் மனதில் ஆலோசனை பண்ணாதே, நானோ யுத்தத்தில் கைதேர்ந்தவன், ராமமூர்த்தியோடு சேர்ந்தவன், பெரியோர் அனுக்கிரகம் பெற்றவன். ஆகையால் நீ ஜாக்கிரதையாயிரு, இதோ பார் என்று சொல்லி அஸ்திரத்தை யெடுத்து வில்லிற்றொடுத்துச் சோனைமாரி பெய்வதுபோலச் சரமாரி பெய்தார். அதை மயிலிராவணனானவன் கண்டு அஸ்திரங்களை யெல்லாம் நடுப்பாதியில் கண்டதுண்டமாகச் செய்து 1-10-100-ஆயிரம் அளவுக்கு அதிகப்படும் பாணத்தை எடுத்து எடுத்து தேரைச் சக்கை சக்கையாகப் பேர்த்து எறிந்து கொடியை யறுத்து குடையைப் பூமியிலே தள்ளி குதிரைகளைக் கொன்று சாரதியை வெட்டி வில்லை நறுக்கி நாணி அறுத்து கவசத்தைப் பொடியாக்கி மார்பைப் பிளந்து உடல்முழுதும் இரத்தமயமாக்கி ரத கஜ துரக பதாதிகளைக் கவிந்து சரங்களைத் தூண்டி கண்டதுண்ட மாக்கினான். ஆஞ்சநேயர் ஸ்மரணைதப்பி வில்லின்மேலும் மற்ற ஆயுதங்கள்மேலும் செல்லுங் கருத்தைவிட்டு சோர்ந்தாப்போலிருந்து களைதெளிந்து, அப்பா! இவன் குருதுரோகி, இவனைச் சித்திரவதை செய்து கொல்லவேணும், மரணாவஸ்தைக்குச்சரியான அவஸ்தையை இவனுக்கு உண்டாக்கவேணும், ஒருவேளை ஓடிப்போனாலும் போவான், இவனை விடக்கூடாது என்றுகருதி மண் வாரி இறைத்தாப்போல் வில்லைவளைத்து பாணங்களைத்தொடுத்து அவன் தேரை அசையவொட்டாமல் சரக்கூடம்போட்டார். மயிலிராவணன் அதிக கோபங்கொண்டு போர்முகத்துக்குரிய கார்முகத்தை வளைத்து நாணேறிட்டு தேவர்களுக்குஞ் சகலவிதகுணத்தொனி செய்து பிறைமுக பாணங்களுடன் சில பாணங்களைத் தொடுத்து தன்தேரைமூடியிருக்கிற பாணங்களை ஆஞ்சநேயர்மீது தூண்டினான். அனுமார் அந்தப் பாணங்களை ஒன்றையாகிலும் விடாமல் அறுத்து மூன்று திவ்யாஸ்திரங்களை எடுத்து எறிந்தார். அந்தப் பாணங்கள்

மயிலிராவணனுடைய திரேகத்தை இரத்தமயமாகச் செய்தது. உடனே மயிலிராவணன் கோபமீறி பற்களை நெறநெறவென்று கடித்து மீசை படபடவென்று துடிக்க, அட்டகாசஞ் செய்து அளவற்ற கணைகளைத் தொடுத்தான். அக்கணைகளால் ஆஞ்சநேயர் வருத்தம் அடைவார் என்று யாவரும் சொல்லிக்கொண்டிருக்கையில் ஆஞ்சநேயர் அந்தப் பாணங்களை யெல்லாம் நடுப்பாதியில் கண்டித்து, அவனோடு எந்நேரவரைக்கும் போராடுகிறதென்று அட்டகாசஞ்செய்து வில்லினிடமாக சிலபாணங்களையேவி மயிலிராவணனுடைய தேரைச் சக்கை சக்கையாய்ப் பேர்த்துக் குடையை ஒடித்துத்தள்ளி, சில பாணங்களைவிடுத்து குதிரையை சல்லடைக் கண்களாகத் துளைத்து, சாரதி தலையை யறுத்து, பின்னுஞ் சில கணைகளை மயிலிராவணன் பேரில் பிரயோகஞ்செய்து அவன் அணிந்துவந்த மகர குண்டல ஆர கேயூர கடக கங்கணம் முதலாகிய ஆபரணங்களையும் கவசத்தையும் பொடிப்பொடியாக்கி அவனையும் ரத்தமயமாக்கினர். அதனால் மயிலிராவணன் பிரமைகொண்டு ஒன்றும் தோன்றாமல் மனம் கலங்கி சற்றும் அசைவின்றி சித்திரப்பதுமைபோல் நின்றான். அத்தருணத்தில் ஆஞ்சநேயர் தமதுதேரை அருகில் நடத்தி மயிலிராவணன் தேரில் தாவி, தன் வில் நாணியினல் அவனை மடல் விரியக் கட்டி தனது தேர் குத்துக்காலில் இருத்தி கட்டிச் சிங்கநாதஞ் செய்தார். பாதாளலங்கை மன்னன் மூர்ச்சைதெளிந்து கண்விழித்துப் பார்த்து கர்ஜித்து கட்டில்நின்று திமிறிக்கொண்டு வெளிப்பட்டு காலாக்கினி உருத்திரனைப் போலக் கோபமீறி மறுதேரிலேறி அனுமார் எதிரில் வந்து தேரைத் தூண்டி அநேக தவங்களைச்செய்து வரப்பிரசாதங்களைப்பெற்ற அஸ்திரங்களை விடுத்தான். அதைக்கண்ட ஆஞ்சநேயர் சில அஸ்திரங்களை விடுத்து அந்த அஸ்திரங்களை அப்போதுக்கப்போது கண்டித்தார்.

இப்படி இருவரும் காலாக்கினி ருத்திரனைப்போல் சண்டப் பிரசண்டராய் ஒருவர்க்கொருவர் தோர்வை

யடையாமல் போர் புரிந்தார்கள். அப்போது மயிலிராவணனானவன் அக்கினியாஸ்திரம் வருணாஸ்திரம் முதலான ஆயிரத்தெட்டு அஸ்திரங்களும் பிரயோகஞ்செய்ய, ஆஞ்சநேயர் அதிக கோபத்துடனே உக்கிராகாரனாய் கண்களில் நெருப்புப்பொறி பறக்க, இரு புஜங்களுந் துடிக்க, பற்களை நெறநெறவென்று கடித்து அவனது உதிரத்தை மடமடவென்று குடிக்க, விஸ்வரூபமாய் பதினாயிரம் யோசனை விஸ்தாரமாகத் தோன்றும்படி ஸ்தூல சரீரமெடுத்து மயிலிராவணனைப் பார்த்து அவன் தேரின்பேரில் ஓர் அறை அறைந்தார். அப்போது அவ்வறையினால் அந்த ரதமானது அச்சுவேறு ஆணிவேறு கொடுங்கைவேறு இவ்வாறாக யாவும் சின்னாபின்னப்பட்டு பொடிப்பொடியாகப் போயிற்று.

மயிலிராவணன் ஆஞ்சநேயர் வருகிற குரூர ரூபத்தையும் அவரது தேகத்தையுங் கண்டு மனதில் திகில் கொண்டு நடுங்கி ஒடுங்கி தேரைவிட்டுக் கீழே குதித்து கையில் கத்தி கேடயம் பாலா முதலியன பிடித்து படபடவென்று துடிக்க, தடதடவென்று ஓட்டமாக ஓடி வந்து ஆஞ்சநேயருடைய நடுமார்பில் கத்தியினால் ஓங்கி வெட்ட, அவர் எமலோகத்தைக்கிட்ட இவ்விதமாய் தட்ட ஆஞ்சநேயர் யாதொன்றுக்கும் சட்டை பண்ணாமல் தன் வாலைக் கீழேவிட்டு மயிலிராவணனுடைய இரண்டு காலையும் எட்டிப் பார்த்து, அடா இராக்ஷதப்பயலே! இனிமேல் எங்கேயாவது ஓடிப் போகலாமோ என்று ஆலோசிக்கிறாயோ என்று சொல்லி கர்ச்சித்து பதினாயிரம் யோசனை தூரம் வளர்ந்து அவனுடைய மார்பில் இடது காலும் விந்தியாசல பர்வதத்தில் வலது காலும் ஊன்றிக் கொண்டு அந்த விந்தியாசல பர்வதத்தில் ஐந்து குகைக்குள் நடுவாயிருக்கிற துவாரத்தைக் கண்டு அந்த துவாரம் ஐந்தையும் இடதுகையில் மூடிக் கொண்டு வலது கையைத் துவாரத்தின்வழியே புகவிட்டு தடவிப்பிடிக்கையில் வண்டுகள் ஐந்தும் ஆஞ்சநேயர் அஸ்தம்வருவதைக்கண்டு வெளியே புறப்பட்டு

போவோம் என்று வாசலில் வந்து பார்க்கும்போது, அவ்வாசலானது ஆஞ்சநேயருடைய உள்ளங்கையால் மூடியிருப்பதைக் கண்டு, அந்த வண்டுகளானது பயந்து வெளியே புறப்படாமல் மூலைக்குமூலை ஓடி உள்ளே ஒளித்திருந்தது. அவருடைய கையில் அகப்படாமலிருக்க, அவர் உபாயமாய் விரலினாலே பிடித்து நகத்தினாலே சேர்த்துக்கொண்டு, இரண்டாந் துவாரத்தில் இருக்கிற வண்டையும் பிடித்துக்கொண்டு, மூன்றாந் துவாரத்தில் கையைவிட்டு அதில் இருக்கிற வண்டையும் பிடித்து, நான்காந் துவாரத்தில் கரத்தைச் செலுத்தி அதிலிருந்ததையும் பிடித்து, ஐந்தாம் துவாரத்தில் இருப்பதையும் பிடித்துக்கொண்டு, இந்த ஐந்தையும் உள்ளங்கையில் அடக்கி தேய்த்து மாய்த்துப்போட, அந்த வண்டுகளின் பிராணன் போய்விட அதிவேகமாய் ஓடி இராவணனைத்தேடி அலைந்து வந்து அவன் பாதத்திற் பிரவேசிக்க, மயிலிராவணன் தன் பிராணன் தனது உடலில் புகுந்ததைப் பார்த்து, அவன் சிரசை அசைத்து, ஆ இது என்ன ஆச்சரியம்! நமக்கு இன்றோடே மரணகாலம் நேரிட்டிருக்கின்றது. ஆகையால் இந்த ஆஞ்சநேயர் கையில் வண்டுகள் ஐந்தும் அகப்பட்டு நசுங்கினது என்று அறிந்துகொண்டு, ஆகாயவாணி சொன்ன விசேஷத்தையும் ஆஞ்சநேயர் வீராவேசத்தையும் பார்த்துக்கொண்டிருக்கச்சே, மயிலிராவணனுக்கு ஞானசரமானது சம்பூரணமாய் நிறைந்து ஆஞ்சநேயரைப் பார்த்து தோத்திரம் பண்ணுகிறான்: வாரும் அனுமந்த சேயா! வஜ்ரகரநாமா! ஸ்ரீராமகாரிய துரந்தரா! வாயுகுமாரகா! அஞ்சனாதேவி புத்திரா! ஸ்ரீகாரியபரிபூரணா! கருணாகரா! காரும் சுவாமி என்று பலவிதமாகத் தோத்திரஞ்செய்து சுவாமி நான் செய்த குற்றங்கள் யாவும் பொறுத்து ரட்சிக்கவேண்டும். இராமதூதா! இராமதுரோகம் பண்ணும் பாவியாகிய நான் உன் பாதாரவிந்தங் காணப் பெற்றேன்; வைகுண்டபதவி பெற்றேன்; நீர் வந்த காரியம் ஈடேறிற்று; சீக்கிரமாய் நீலமேகனுக்குப் பட்டங் கட்டிவைத்து இராமலட்சுமணனை எடுத்துக்கொண்டு

போய் இராவண சம்மாரஞ் செய்து வையும் என்று தோத்திரம் பண்ணிக்கொண் டிருக்கச்சே பாதாள இலங்கைக்கு அரசனுகிய மயிலிராவணன் ஜீவனுனது வைகுந்தபதவி அடைந்தது. அவனுக்கு தெய்வலோகத்திலிருந்து புட்பகவிமானம் வந்தது. அந்த புட்பக விமானத்தில் ஏறிக்கொண்டு தேவ ஸ்திரீகளாகிய அரம்பை, மேனகை, ஊர்வசி திலோர்த்தமை முதலான ஸ்திரீகள் நடனமாடவும், வெண்சாமரை போடவும், இவ்விதமான ஆடம்பரத்துடனே புட்பகவிமானத்தில் இருந்தபடியே ஆஞ்சநேயரைத் தரிசனஞ் செய்துக்கொண்டு நான் போய் வருகிறேன் என்று வீரசொர்க்கத்தை அடைந்தான். அப்போது அந்தப் பாதாள இலங்கையில் சில ராக்ஷதர்கள் இருக்கப் பார்த்து, ஆரடா ராக்ஷதர்களே! நீங்கள் சீக்கிரமாய் நீலமேகன் தூரதண்டி இவர்களை அழைத்து வாரும் என்று சொல்லவே, அக்கணமே அழைத்து வந்தார்கள். தூரதண்டி நீலமேகன் இவ்விருவரும் ஆஞ்சநேயர் பாதத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்து கைகட்டி வாய்புதைத்துக்கொண்டு நிற்க, ஆஞ்சநேயர் நீலமேகனைப் பார்த்து, அடா வாடா நீலமேகா! இந்த மயிலிராவணனுக்கு விந்தியாசல பர்வதத்தில் வலதுகாலை யூன்றிக் கொண்டு அந்த விந்தகிரியில் கிரியை முதலியன எவ்வண்ணம் முடிக்கவேண்டுமோ அவ்வண்ணம் முடித்துவா என்று கூறி, சூரிய உதயத்திற்கு முன்னே இராமலட்சுமணுளைக் கொண்டுபோய் இராவண சம்மாரஞ் செய்யவேண்டும். பின்பு ரூபவதி என்கிற பெண்ணை கலியாணஞ் செய்வித்து பட்டாபிஷேகஞ் செய்ய நினைக்கிறேன். ஆகையால் நீ அதி சீக்கிரத்தில் மயிலிராவணனுக்குச் செய்யவேண்டிய சடங்குகளெல்லாம் முடிப்பித்து வரவேண்டுமென ஆக்யாபித்து ஆஞ்சநேயர் அரண்மனை போய்ச் சேர்ந்தார்.

அப்போது நீலமேகன் அவர் சொல்லிய வண்ணம் ராட்சத பிராமணனை அழைத்து அதற்கு வேண்

டிய சாமக்கிரியைகள் யாவுஞ் சேகரஞ்செய்து வைத்துக்கொண்டு மயிலிராவணனுக்கு அக்கினி நமஸ்காரஞ் செய்வித்து ஸ்நானம்பண்ணி நீலமேகனும் தூரதண்டிகையும் மற்றுமுள்ள இராக்ஷதபிராமணாள் யாவரும் அரண்மனையில் வந்து ஆஞ்சநேயருக்கு தோத்திரஞ் செய்து நின்றார்கள். ஆஞ்சநேயர் மாதங்கியைப் பார்த்து, வாரும் பெண்ணே மாதங்கி! ஆகாய வாணி சொல்லிய வாக்குப்படி உன் குமாரத்தியை நீலமேகனுக்குக் கொடுத்து கலியாணஞ் செய்துவையும் என்று சொல்ல, மாதங்கி அனுமாரைப் பார்த்து, ஓ சுவாமி! நான் உமது இஷ்டப்படி செய்கிறேன் என்று உறுதிகூறி, ரூபவதியை அழைத்துக்கொண்டு கந்த புஷ்ப முதலியது அணிந்து பச்சைப்பந்தல் வாழை கமுகுகளால் அலங்கரித்து தப்பதிகள் இருவருக்கும் வெகு விசித்திரமான ஆபரணங்களினால் அலங்காரஞ் செய்து நீலமேகன் ரூபவதி இவ்விருவருக்கும் கலியாணச் சடங்குகள் யாவும் சம்பிரமத்துடன் முடிப்பித்து மாங்கல்யந் தரிப்பித்து இரத்தின சிங்காதனமிட்டு சகல ஆடம்பரத்துடன் வீற்றிருக்கச்செய்து சகல இராக்ஷத பிராமணாளைக்கொண்டு சுத்த தீர்த்தங்கள் கொண்டுவந்து அனுமார் முன்னே வைத்தார்கள், அதை அனுமார் அப்போது அந்தத் தங்கக்குடத்தில் இருக்கிற சுத்த ஜலத்தை நீலமேகனுக்கு அபிஷேகம் செய்தபின்பு நீலமேகனானவன் சகல ஆபரணபூஷணனாய் எழுந்து ஆஞ்சநேயர் பாதாரவிந்தத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்து சிரசின்மேல் கரங்குவித்து ஸ்தோத்திரம் பண்ணினான். தூரதண்டியும் பாங்கிமுதலிய சகலரும் ஆஞ்சநேயர் முன்னேவிழுந்து கும்பிட்டு எழுந்து கைகட்டி வாய்புதைத்து நின்றார்கள். ஆஞ்சநேயர் நீலமேகனுக்கு ஆசீர்வாதஞ் செய்தார்.

பிறகு ஆஞ்சநேயர் நீலமேகனைப் பார்த்து வாரும் பிள்ளாய் நீலமேகனே! நீ இந்தப் பாதாள இலங்கையைப் பரிபாலனஞ் செய்துகொண்டு சுகமாக ஸ்ரீராம மூர்த்தியின்பேரும் பிரதி ஆரம்பம் எந்தமட்டில் சாஸ்விதமாயிருக்குமோ அக்காலம்வரையில் சுகஜீவியாய்

வாழக்கடவாய்; தர்மநீதி தவருமல் செலுத்தக்கடவாய் சகல உயிர்களையும் தன்னுடைய உயிரைப்போல் மன்னுயிரைக் காப்பாற்றி வாழக்கடவாய் என்று சில புத்திமதிகள் கூறி, பின்பு தூரதண்டிகையைப் பார்த்து, ஓ பெண்ணே! நீ கேட்டுக்கொண்டபடிக்கு நீலமேகனுக்குப் பட்டங்கட்டி வைத்தேன். நான் போகச் சிலவுகொடும் என்று கேட்க, அப்போது தூரதண்டியானவள் சீக்கிரமாய்ப்போய் பொக்கிஷத்தைத் திறந்து அநேக ஆபரணங்களும் வஸ்திரமும் சந்தன புஷ்ப முதலிய பரிமளத் திரவியங்களும் கொண்டுவந்து ஆஞ்சநேயர் முன்பாகவைத்து சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ் செய்துக் கொண்டாள். ஆஞ்சநேயர் தூரதண்டியைப் பார்த்துச் சொல்லுகிருர்.

வாரும் பெண்ணே தூரதண்டியே! நீ கொண்டு வந்த வெகுமதிகளைப் பார்த்துச் சந்தோஷமாயினது என்று தனது அஸ்தத்திஞல் தொட்டு உனக்கு அஸ்தப்பட்டவுடனே எனக்கு மனக்களிப்பு உண்டாயிற்று. நீ கொண்டுவந்த பொக்கிஷங் கொண்டுபோய்ச் சேர்ப்பி; அவ்வவஸ்துக்கள் கொடுக்கக் காரணமில்லை; யாதென்ருல் சாட்சாத் கடவுளாகிய ஸ்ரீராமமூர்த்தியானவர் இராவண சம்மார முடிப்பித்துப் பட்டாபிஷேகமானபின்பு நான் அந்த பூஷணுதி திரவியங்களைத் தொடுவேன் என்ருக்யாபித்து விடைகொடுத்து விட்டு, பின்பு ஆஞ்சநேயர் மச்சவல்லபனை யழைத்து வாரும் பிள்ளாய் மச்சவல்லப சிகாமணியே! இந்தப் பாதாள இலங்கையை உன் வசம் ஒப்புவித்தேன். நீ நீலமேகன் சொற்படி நடந்துகொண்டு சுகமாய் இரு; நான் போய் வருகிறேன் என்று ஆஞ்சநேயர் விடைபெற்றுக்கொண்டு சீக்கிரமாய்ப் புறப்பட்டு ராம லட்சுமணுளை வைத்திருக்கப்பட்ட இடத்திற்கு வந்து பூமிதேவியைப் பார்த்து, ஓ வாராய் பூமிதேவியே! ஸ்ரீராம லட்சுமணுளை தடையின்றிக் கொடுப்பாய் என்று வினவ, பூமிதேவியானவள் பெட்டியோடு தூக்கிக் கொடுக்க, இராமலட்சுமணுளைப் பத்திரப் படுத்தி யிருக்கின்ற பெட்டியோடு பெற்றுக்கொண்டு

அதிசீக்கிரமாய்ப் பாதாள லங்கையைவிட்டு அந்தத் தாமரைத் தடாகத்துள்வந்து அவ்வழி துவாரத்தைப் பார்க்க அவ்வழி மூடப்பட்டிருந்தது. அங்ஙனம் காவலாயிருக்கிற வாயுபகவானைக் கண்டு, ஓ வாயு பகவானே! எனக்குச் சற்றே வழிவிடு என்று சொல்லி அவர் பெட்டியை எடுத்துக்கொண்டு அந்தத் தாமரை நூல் தண்டு வழியாக அதிசீக்கிரத்தில் நடந்து அந்தச் செந்தாமரைக் கமலத்தில் வந்து சேர்ந்தார். வாயுபகவான் அவரைப் பார்த்து வாரும் பிள்ளாய் ஆஞ்சநேயா! மயிலிராவணனைச் சங்காரம் பண்ணி இராமலட்சுமணனை எடுத்துக் கொண்டு வந்தாயா என்ன, அவர் வாயுபகவானைப் பார்த்து, ஓ வாயுபகவானே! நான் மயிலிராவணனைச் சம்மாரம் பண்ணி ஸ்ரீராமலட்சுமணனை இந்தப் பெட்டியோடே எடுத்து வந்தேன் என, அப்போது வாயுபகவானவர் அதிக சந்தோஷத்தை அடைந்தார். அப்போது பாதாளலங்கையிலிருந்த மச்சவல்லபன் அந் நகரைவிட்டு பாட்டனும் தகப்பனும் இருக்கிற விடத்தில் வந்து சேர்ந்து, அவர்கள் இருவருக்கும் சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து கைகட்டி வாய் புதைத்து நின்றான்.

அப்போது வாயுபகவான் ஆஞ்சநேயரைப் பார்த்துச் சொல்லுகிறான்: ஓ வாரும் ஆஞ்சநேயதூதா! அரிராம சகாயா! ஸ்ரீராமலட்சுமணனைக் கொண்டு வந்தேனென்றாயே! அவர்களைப் பார்க்க எனக்கு விருப்பமாயிருக்கிறது என்றுகேட்க, மச்சவல்லபனும் அவர்கள் எப்படிப்பட்ட புண்ணிய புருஷரோ நானும் பார்க்க விருப்பமுள்ளவனா யிருக்கிறேன் என்று இருவரும் கூற, ஆஞ்சநேயர் அந்தப் பெட்டியை எடுத்துக் கொண்டு வந்து இதோ திறக்கிறேன் பாருங்கள் என்று பெட்டியைத் திறக்க, அப்பெட்டியில் இராமலட்சுமணர் இருவரும் நித்திரை செய்திருக்க, அத்தருணத்தில் வாயுபகவான் ஆஞ்சநேயர் மச்சவல்லபன் இம்மூவரும் முக்கால் வலம்வந்து ஸ்ரீ ராமலட்சுமணனுக்கு சாஷ்டாங்கமாய் நமஸ்காரஞ்

செய்து பெட்டியைத் தாட்கொண்டு பூட்டி ஆஞ்ச நேயர் மச்சவல்லபனைப் பார்த்துச் சொல்லுகிறார். ஓ மச்சவல்லபா! நீ இங்கு வந்த காரியம் என்ன என்று வினவ, மச்சவல்லபன் சொல்லுகிறான். ஓ ஆஞ்சநேயரே! நாளையதினம் முதல் காலையில் ராவணனுடனே யுத்தஞ் செய்யவேண்டும். ஆகை யால் நானே அந்த ராவணனுடைய இராட்சதப் பூண்டுகளெல்லாம் அடித்து வீராவேசப்படுத்தி பின்பு இப்பாதாள இலங்கைக்கு வருவேனென்ன, ஆஞ்ச நேயர் மச்சவல்லபனைப் பார்த்துச் சொல்லுகிறார். ஓ வாரும் மச்சவல்லபா! நீ அவ்விடம் வந்தால் அந்த சுக்ரீவன் முதலான யாவரும் இவன் யாரென்று என் னைக் கேட்பார்கள். அப்போது அவர்களுக்கு என் னுடைய பிள்ளையென்று சொல்ல நேரிடும். அப்படி யிருப்பதால் அவர்கள் சந்தேகப்படவும் பரியாசஞ் செய்யவும் விருதாவாகிலும் பிள்ளையென்று ஒப்பாரி பிடித்துக்கொண்டு வந்தான் என்று உனக்கு அபகீர்த் தித் ஆதலால் நீ அவ்விடத்திற்கு வரவேண்டிய தில்லை. இந்த லங்கைப் பட்டணத்தில் சுகமாயிரும் என்று விடைகொடுத்து வாயுபகவானை அனுப்பிவிட்டு இராமலட்சுமணனை பெட்டியோடே எடுத்துக்கொண்டு வாயுவேகமாய் வரும்போது, சுக்ரீவன் அங்கதன் நீலன் நளன் சாம்புவந்தன் முதலிய யாவரும் ஒன் ருகக் கூடிக்கொண்டு ஆஞ்சநேயர் வரவில்லையே; சூரியோதய மாகின்றதே என்று வருத்தப்பட்டு நான்கு மூலையும் பார்த்துக்கொண்டிருக்குந் தருணத் தில் ஆஞ்சநேயர் வருவது கண்டு, அனைவோரும் எதிர்சென்று அழைத்துக்கொண்டு கூடாரம் வந்து சேர்ந்தார்கள். ஆஞ்சநேயரானவர் பெட்டியோடே இராமலட்சுமணனை அசையாமல் எப்போதும்போல் முன்னிருந்த இடத்தில் வைத்து பிரதட்சணமாய் வந்து குமபிட்டார்கள். அங்கதன் நீலன் சுக்ரீவன் விபீஷணன் முதலானவர்க ளெல்லாம் இடம்புரி வலம்புரியாய் வந்து தோத்திரஞ்செய்து நிற்க, சூரிய பகவான் உதயகிரி பர்வதத்திலிருந்து தன் கிரணங் களைப் பரப்பிப் புறப்பட்டான். ஸ்ரீராமலட்சுமணனை

வைத்திருந்த பெட்டியானது மாயமாய்க் கண் ணுக்குத் தெரியாமல் மறைந்துபோயிற்று. இராம லட்சுமணுள் இருவரும் நித்திரை தெளிந்து எழுந்திருந்தார்கள். ஆகாயமார்க்கத்திலே சகல தேவர்களும் புட்பமாரி பொழிந்தார்கள்; மங்கள வாழ்த்துப் பாடினுர்கள்; நான்கு மாதரும் நடனமாடினுர்கள்; தேவகணங்கள் கூத்தாடினுர்கள்; சகல ஜனமும் பார்க்க ஆச்சரியத் துடனே வந்து கூத்தாடினுர்கள்.

இன்றையதினம் இது என்ன ஆச்சரியமாயிருக் கிறது எனச் சந்தேகப்பட்டு யாருடனே போர் கொடுப் போம் என்று இராமலட்சுமணுள் கேட்க, ஜாம்புவந்த னைவன் இந்தப்பூர்வோத்திரமெல்லாம் ஸ்ரீராமமூர்த் திக்குச் சவிஸ்தாரமாகச் சொல்லத்தொடங்க, ஆஞ்ச நேயர் சாம்புவந்தரைப் பார்த்து, கண் சைகையாய்ச் சொல்லாதே யென்ருர். அவர் சைகையை அறிந்து கொண்டு இராம லட்சுமணுளைப் பார்த்து சொல்லு கிருர்: வாரும் ஜகத்ரட்சகா! ஸ்ரீராமச்சந்திரா! யான் சொல்லுவதைச் சற்றே வினவக் கேளும். வாரும் இந்த இராவணனைச் சம்மாரம் பண்ணப்போகச்சே தேவர்கள் புட்பமாரி பொழிந்தார்கள். இராம லட்சு மணுள் சந்தோஷம் அடைந்தார்கள்.

இங்ஙனம் இப்படியிருக்க, இலங்கைப் பட்டணத் தில் இராவணன் ஸ்திரீகளோடு சரசசல்லாபவுல்லாச மாய்ச் சிரித்துக்கொண்டு இருந்தவன் சூரிய உதயத் தில் தேவர்கள் கருடகாந்தருவர் முழங்கப்பட்ட மேள வாத்தியத் தொனிகள் அவ்விடம் கேட்கும்படியான காரணம் என்ன? அந்த இராமலட்சுமணுளை மயிலிரா வணன் கொண்டுபோனதற்குத் தேவர்களுக்கு இத் தனை சந்தோஷம் வரக் காரணம் என்ன என்று அவ் விடத்திலிருக்கும் எட்டுபேர் வேவுகாரரை அழைப் பித்து, அக்கணமே பாதாள இலங்கைக்குச் சென்று மயிலிராவணனிடத்திற் போகாமல் வானரசேனை யண் டைக்குப்போய் இராம லட்சுமணுள் உயிருடனே க்ஷேமமா யிருக்கிருர்களா? அவர்களுடைய செய்தியை

விசாரித்துக்கொண்டு வாருங்களென்ன, அந்த உத்தரவின்படியே வேவுகாரர்கள் பாதாளலங்கைக்குச் செல்லாமல் வானரசேனை இருப்பிடம் வந்து விசாரிக்குமளவில் இராம லட்சுமணுள் சுகமா யிருக்கிருர்கள் என்றுசொல்ல, இராவணன் இது ஏது ஆச்சரியமாய் இருக்கின்றது; மயிலிராவணனைக் கொன்றுவிட்டார்களோ; அல்லது அவன் அவர்கள் இருவரையும் எடுத்துக்கொண்டு போகாமல் தனியாய்ப் போனுனோ என்று மனதில் பல யோசனை செய்து, எட்டுபேர் வேவுகாரரை அழைப்பித்து சொல்லுகிருன்: ஓ தூதர்களே! நீங்கள் சீக்கிரமாகப் பாதாள இலங்கைக்குப் போய் மயிலிராவணன் இருக்கிருனு இல்லையா என்று பார்த்து வாருங்கள் என்று சொல்ல, எட்டுபேர் வேவுகாரர்கள் அதிசீக்கிரமாய்ப் பாதாள இலங்கைக்குப் போகவேணுமென்று தாமரைக் குளத்தில்வந்து ராட்சதரெல்லோரும் அங்கு இல்லா திருப்பதைப் பார்த்து, அவ்விடத்தில் நூதனமாய் நீலமேகனும் அவன் சேனைகள் யாவரும் காவலாக யிருக்கிறதைப் பார்த்து, அந்த எண்மரும் சொல்லுகிருர்கள் : வாருங்கள் இராட்சதப் பேய்களே! இலங்கையில் இருக்கப்பட்ட நாய்களே! மயிலிராவணன் எங்கே? அந்தக்கோட்டையில் ஆயிரங்கோடி இராட்சதாள் காவலா யிருந்தார்களே; அவர்கள் எவ்வாருயினுர்கள்? நாங்கள் தசகண்ட ராவணனுலே அனுப்பப்பட்டவர்கள்; மயிலிராவணனைக் காணவந்தோம்; எங்களுக்கு வழிவிடுங்கள் என்று எண்மருங் கேட்டார்கள். அப்போது காவலர்கள் சொல்லுகிருர்கள்: ஆரடா நீங்கள் தசகண்ட ராவணன் பேச்சை எடுக்கவேண்டிய காரணமென்ன என்று கர்ஜித்துப் பற்களை நெறநெறவென்று கடித்து மீசைகள் படபடவென்று துடிக்க, கோபங்கொண்டு பிடரியைப் பிடித்துத் தள்ளுங்கள்; தள்ளினபின்பு சேதிவந்து சொல்லுங்கள் என, அப்போது வேவுகாரர்கள் காவலாயிருக்கப்பட்ட இராட்சதாள் காலில் விழுந்து எழுந்து நடுங்கி ஒடுங்கிச் சொல்லவேண்டுமென்று வேவுகாரர்கள் கேட்க, காவலர்கள் அவர்களைப் பார்த்துச் சொல்லுகிருர்கள்.

வாருங்கள் வேவுகாரர்களே! அனுமார் மயிலிராவணனை அதஞ்செய்து நீலமேகனுக்குப் பட்டங்கட்டி ஸ்ரீராம லட்சுமணனை எடுத்துக்கொண்டு போனார். ஆகையால் அவருடைய உத்திரவில்லாமல் இங்ஙனம் சற்றேனும் நிற்கக்கூடாதென்று சீக்கிரத்தில் நெட்டித் தலைமேல் குட்டி பிடரியைப் பிடித்துக் கழுத்தை நெட்டித் தள்ளிவிட்டார்கள். அவர்கள் படைத்த பூசையை ஆசையோடு பெற்றுக்கொண்டு நமக்கு நாச மாகிற நாசகாலம் வந்தது என்று மனதில் விசாரங் கொண்டு அவ்விடம்புறப்பட்டு இலங்காபுரியை யாளப் பட்ட ராவணனிடத்தில் வந்து மகா துயரத்துடனே சொல்லுகிறார்: வாரும் இலங்காதிபா! மயிலிராவணன் புத்திர மித்திர களத்திராதியுடனே அனுமாரால் எம புரத்தை அடைந்தான். இராட்சதப் பூண்டுகள் சகலமும் அழிந்துவிட்டது. நீலமேகன் பாதாள இலங்கையைப் பட்டங் கட்டிக்கொண்டு, அரசு செலுத்தி வருகிறான் என்று சொல்ல, அந்த விசேஷத்தை தசகண்டராவணன் கேட்டு சிங்காதனத்தின்மேலிருந்து கீழேவிழுந்து கடகடவென்று புரண்டு மூர்ச்சையாகிக் கிடக்கிற இராவணனை மகோதரன் முதலிய மந்திரிகள் எடுத்து ஆயாசந்தீர பாயாசந்தந்து சோடசோபசாரஞ்செய்து மூர்ச்சை தெளிவித்து அவனுக்குத் தேருதல் சொன்னார்கள்.

இராவணன் மந்திரிகளைப் பார்த்து சொல்லுகிறான்: வாரும் மந்திரிமாரே! ஆராய்ந்து சொல்லும் தந்திரிகளே! என் துயரத்தை என்னாற் சொல்ல முடியுமோ? யான்செய்த எத்தனமெல்லாம் அதமாயின. மகா சமர்த்தனான என்தம்பியும் பிள்ளைகளும் இறந்து போய் என்னையல்லாது யாதொன்றிலும் யுத்தி செல்லாது; எனது காரியமும் பொல்லாது; கணநேரம் நில்லாது என்று மனதில் எண்ணி யோசனைபண்ணித் திடங்கொண்டு தன்னுடைய தேரைக் கொண்டுவரச் சொல்லி யானை சேனை பரிவார முதலியவற்றைச் சேர்த்துக்கொண்டு யுத்தகளத்தில்வந்து ஸ்ரீராமமூர்த்தியின் பேரில் எதிர்த்து வில்லை வளைத்து நாணேறிட்டு அநேக பாணங்களை விடுத்தான்.

அதுகண்டு ரகுநாயகரானவர் அதிக கோபத்துடனே தமது கோதண்டத்தை வளைத்து நாணேறிட்டு ராமபாணங்களை எடுத்து சரவருஷம் பொழிந்தனர். அந்தப் பாணங்களால் இராவணேஸ்வரனுடைய யானைகள் குதிரைகள் தேர்கள் மந்திரிகள் படைத்தலைவர் முதலிய யாவரும் இரணக்களத்தில் விழுந்தார்கள். இராவணன் தனியாய் நின்று யுத்தஞ் செய்தான். இதுகண்ட இராமமூர்த்தியானவர் இது என்ன இவனுடைய போராட்டமே நமக்கு மாருட்டமா யிருக்கிறது என்று கோபங்கொண்டு தனது வில்லினிடமாய் அதி தீட்சண்யமான இராமபாணங்களை எடுத்துத் தொடுத்துவிட்டார். அந்த பாணமானது இராவணனுடைய மார்பிலே பட்டு முதுகில் உருகிப்போயின. இராவணன் தலைகள் பலவாருய்ப் பூமியில் விழுந்தன. பின்பு ஸ்ரீராமமூர்த்தி விபீஷணருக்கு உபசாரஞ்செய்து இராவணேஸ்வரனை யெடுத்துத் தகனஞ் செய்யச்சொல்லி உத்திரவு கொடுத்தார். உடனே விபீஷணர் இராவணனை எடுத்துத் தகனஞ் செய்து பதினாறுநாள் கருமாதிகாரியத்தை நடத்தினர். அதுகண்டு ரகுநாயகர் விபீஷணருக்கு இலங்கைப் பட்டணத்தைப் பட்டாபிஷேகஞ் செய்து வைத்து சீதாதேவியை அழைத்துக்கொண்டு வரச் சொல்லி விபீஷணர் - சுக்ரீவன் - அங்கதன் - நளன் - குமுதன்-குமுதாக்கன்-சாம்புவந்தன் முதலிய சேனைத் தலைவரும் எழுபத்திரண்டு வெள்ளஞ்சேனையும் ரதாரூடராய் வரச்சொல்லி ஆஞ்சநேயருடன் புறப்பட்டு ஸ்ரீராமலட்சுமணுள் சீதாபிராட்டி சமேதராய் விமானத்தில் ஏறிக்கொண்டு சேனைகள் நடக்கும்படி ஆக்யாபித்துத் தமது விமானத்தையும் நடத்தி பரத்துவாசர் ஆசிரமத்தில் இறங்கினர்கள். அப்போது ஆஞ்சநேயர் முன்னதாய்ப் போய் பரதருக்குச் சுகச்சேதி சொல்லவேண்டுமென்று ரகுநாயகரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு அயோத்தியாபுரி பட்டணத்திற்கு வந்து பரதனைக்கண்டு சுவாமி வருகிற சமாச்சாரத்தை ஆதியோடந்தமாகச் சொன்னர். பரதர் சந்தோஷப்பட்டு பட்டணமெல்லாம் அலங்காரஞ் செய்வித்து

தானும் சத்துருக்ன முதலானவரோடு தங்கள் தம்பிமார்களையும் அழைத்துக்கொண்டு அநேக யானைசேனை குதிரைகளுடன் பட்டணத்திலுண்டாகிய ஜனங்களோடு எதிர்கொண்டு போனார்.

அப்போது ரகுநாயகர் பாத்திவாசர் ஆசிர்மத்திலே போஜனஞ் செய்து பரத்துவாசரிடத்தில் விடை பெற்றுக்கொண்டு சகல சேனைகளுடனே புறப்பட்டு அயோத்தியை நோக்கி வரும்போது எதிர்கொண்டு வருகிற பரதனைக் கண்டு ரகுநாயகர் ரதத்தை நிறுத்தினார். உடனே பரதர் ஸ்ரீராமமூர்த்திக்கு சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ் செய்தார். ரகுநாயகர் பரதரைக் கட்டிக்கொண்டு ஆலிங்கனஞ்செய்து அதிக சந்தோஷத்துடனே சதுரங்க சேனைகளோடும் பிரயாணப்பட்டு தம்முடைய தாயாராகிய கௌசலாதேவியம்மனை நமஸ்கரித்து கைகேசி சுமித்திராதேவியம்மாள் இருவருக்கும் வந்தனஞ் செய்து, சகலபேரையும் தேரில் ஏற்றிக்கொண்டு சந்தோஷமான சமாசாரங்களையுஞ் சொல்லி, சகல ஜனங்களுடனும் நந்திக்கிராமத்தில் வந்து இறங்கி கங்காஸ்நானம் செய்து வஸ்திராபரணம் கந்த புஷ்ப பரிமள வர்க்கங்கள் முதலியதும் அணிந்துகொண்டு திவ்விய அன்னம் புசித்து தாம்பூலவர்க்கந் தரித்து அதிக சல்லாப உல்லாசமாய் அயோத்யாபுரி பட்டணத்துக்குப்போய் ஸ்ரீராமமூர்த்திக்குப் பட்டாபிஷேகஞ் செய்வித்து, சகல பிரஜைகளும் ஆனந்தம் அடைந்திருக்குந் தருணத்தில், சுக்ரீவன் விபீஷணர் முதலானவர்கள் எழுபத்திரண்டு வெள்ளம் வானர சேனைகளும் உபசாரம் செய்துகொண்டிருக்க, ஸ்ரீராமமூர்த்தியானவர் வதிஷ்டரைப் பார்த்து ஓர் விசேஷம் சொல்லுகிறார்.

ஐயா வாரும் சுவாமி வதிஷ்ட மகாமுனியே! இதோ யிருக்கிற ஆஞ்சநேயர் எங்களுக்கு அநேக சகாயம் செய்திருக்கின்றனர். அவர் செய்திருக்கிற உபகாரத்துக்குத் தேவராலும் யாவராலும் பிரதியுபகாரம் செய்யமுடியாது என்று ஸ்ரீராமமூர்த்தியானவர்

சொல்ல, வதிஷ்டர் சொல்லுகிறுர்: வாரும் ஐயா இராமசந்திரா! ஆஞ்சநேயர் அநேக உபகாரங்கள் செய்தாரென்று சொன்னீரே; அவர் செய்த உபகாரத்தை யாரும் அறியார்கள்; இன்னது என்று குறியார்கள்; அவர் செய்த காரியார்த்தம் என்ன? நம்மை அறியாமல் என்ன அற்புதஞ் செய்தார்? நமக்குச் சகல காரியமும் ஞானதிருஷ்டியினுல் தெரியும். அவர் செய்த உபகாரத்தைச் சொல்லவேண்டும் என்று கேட்க, ரகுநாயகர் விபீஷணரை நோக்கி சொல்லச் சொன்ஞர். விபீஷணர் சாம்புவந்தரைப் பார்த்து ஐயா சாம்புவந்தரே! ஆஞ்சநேயர் மயிலிராவணனைச் சம்மாரஞ் செய்த சவிஸ்தாரத்தைச் சொல்லவேண்டும் என்ன, ஜாம்புவந்தர் எழுந்திருந்து பயபக்தி விசுவாசத்துடன் கைகட்டி வாய்புதைத்து ரகுநாயகரைத் தோத்திரஞ் செய்து சபைக்கு முன்னின்று சொல்லுகிறுர்.

அனுமாரானவர் தாமரைத்தண்டின் நூல்வழியாகப் போனதும், அவ்விடத்தில் ஆயிரங்கோடி ராட்சதர்களைச் சங்காரஞ் செய்ததும், அக்கினிக் கோட்டையில் மச்சவல்லபனேடு போர் புரிந்து மச்சவல்லபனைத் தன்னுடைய பிள்ளையென்று பிறப்பின் தன்மையாலும் வளர்ப்பாலும் அனுமார் அறிந்து பின்பு தெப்பக்குளக்கரையில் சேர்ந்து துரதண்டிகையைக்கண்டு அவ்விடத்தில் சில சங்கதிகளை அறிந்தும் துலாயந்திரக்கோட்டை வாசலில் நடந்த வரலாறும், உள்ளே நுழைந்து அந்தக்காளி கோயிலைக் கண்டு சுவாமியை எடுத்துக்கொண்டு வந்ததும், மயிலிராவணனுடனே அநேக மாயைகள் செய்து அவனைக்கொன்ற விபரமும், துரதண்டிகுமாரன் நீலமேகனுக்கு விவாகம் செய்வித்ததும் அப்பட்டணத்தின் சமாசாரமும் சுவாமியை எடுத்துக்கொண்டு வந்ததையும், ஆதியோடந்தமாகச் சொன்ஞர். இராமமூர்த்தியானவர் ஆனந்த சந்தோஷத்தையடைந்து எழுந்திருந்து ஆஞ்சநேயரைத் தழுவிக்கொண்டு புன்சிரிப்பாகச் சிரித்துச் சொல்லுகிறுர்: மகா வல்லமையுள்ள

புண்ணியவான், யாவருக்குங் கண்ணியவான், உமக்கு நான் என்ன உபகாரம் செய்யப்போகிறேன் என்று அனுமாருக்கு ஆசிகள் கூறி வேண்டுவனவற்றைத் தந்து அதிக சந்தோஷத்தை அடைந்திருந்தார்.

இந்தக்கதை யாரொருவர் படித்தாலும், பக்தி விநயத்தோடு முடித்தாலும், ஒருவர் படிக்கக் கேட்டாலும், படித்தவர்கள் மற்றொருவருக்குச் சொன்னாலும், அதைச் செவிகொடுத்துக் கேட்டவர்களை நவக்கிரகங்கள் குரூரஞ் செய்யமாட்டாது. கலிபுருஷன் அணுகான். இதைத் தோத்திரப் பண்ணினவர்களும், துதி செய்து கொண்டவர்களும் நற்பதவி அடைவார்கள். அவரவர்கள்செய்த பாவங்கள் ஒழிந்து பரமபதத்தைப் பெற்று நீடூழி வாழ்வார்கள். சுபம்.

மயிலிராவணன் கதை

முற்றிற்று.

பதிப்பாளர்:—

அமரம்பேடு. இராஜரத்தின முதலியார்,
மலர்மகள் விலாச அச்சுக்கூடம்
23, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை-1.

மலர்மகள் பதிப்பு

சாதக அலங்காரம்

விளக்க விருத்தியுரை

[842-பக்கங்களுடன் அழகிய கலிகோ பயிண்டு செய்தது]

பிரபல சோதிட வித்வான்களாக விரும்புவோர்க்கு
அரிய பொக்கிஷம் !

உலக மனுக்களாகிய மக்களுக்குவரும் இன்ப துன்பங்களை அறியும்வண்ணம் ஜோதிடம் என்னும் பிரகாசத்தை அநேக மேதாவிகளாலும் ரிஷிகளாலும் பற்பல புலவர்களாலும் தர்க்கித்து நிலைபெற்ற ஜோதிட சாஸ்திரங்கள் பல உண்டெடன அறிந்திருப்போமாயினும் அவற்றிற்கு முக்கிய காரணமாக விளக்கும் நூல் **சாதக அலங்காரமே.** இந்நூல் சோதிட சார்வபௌமராகிய **கீரனூர். நடராஜர்** என்பவரால் இயற்றப்பட்டனவாகும். இந்நூல் மூலபாடமாக இயற்றப்பட்டதாதலால் தற்போதுள்ளவர்கள் இதையறிவது வெகு கடினமெனக் கண்டு வேலூர். வேலப்பாடி **V. K. வேலுநாயகர்** அவர்களாலும், காவேரிப்பாக்கம் **K. M. தெய்வசிகாமணி சோதிட**ராலும் விளக்க விருத்தியுரை எழுதி அச்சிட்டிருக்கிறது.

இந்நூலில் வேதம், ஆகமம் உபநிஷத், புராணம், இதிகாசம், தர்மசாஸ்திரம், திவ்யப்ரபந்தம், பெரியபுராணம் உள்பட அநேக ஸமஸ்கிருத உதாரணங்களுடன் நன்கு விளக்கப்பட்டு படிப்போர் மனம் களிக்குமாறு வெளியிடப்பட்டிருக்கிறது. இந்த சிறந்த தமிழ்நூலுக்கு இவ்வளவு ஸமஸ்கிருத பிரமாணங்களைக்கொண்டு இருவகை நூலுக்கும் ஒற்றுமையைக் காட்டி நன்கு விளக்கியிருக்கிறதால் இதனை ஒவ்வொருவரும் வாங்கிப் படித்து, அதிலுள்ள பலாபலன்களை நன்கறிந்து முறைப்படி பலன்சொல்வார்களேயானால் ஜோதிட சாஸ்திரம் உண்மையாக விளங்கும். இந்நூலை பயிற்சிசெய்யவிரும்பும் எவரும் படித்தறிந்த பின்னர் மற்றைய கிரந்தங்களை படித்து அறியவேண்டியது என்று கூறுவது மிகையாகாது.

சுத்தப் பதிப்பு] பதிப்புரிமை பெற்ற **[விலை ரூபா 10**

மலர்மகள் பதிப்பை கவனித்து வாங்கவும்.

கிடைக்குமிடம்:—

சரஸ்வதி புத்தகசாலை,

நெ. 175, செட்டியார் தெரு, கொழும்பு.

மலர்மகள் பதிப்பு

புத்தக விளம்பரம்

இதேமாதிரி பெரிய எழுத்தில் சுத்தமாக அச்சிட்டு படங்களுடன் சேர்ந்த மலர்மகள் பதிப்புகள்:—

	ரூ.	அ.		ரூ.	அ.
பஞ்சபாண்டவர் வனவாசம்	1	12	கிருஷ்ணசுவாமி தூது	0	12
வைகுந்த அம்மானை	1	12	புலந்திரன் களவுமாலை	0	12
தருமர் அஸ்வமேதயாகம்	1	12	தேசிங்குராஜன் கதை	0	10
சார்தர்வேத 4-பகீர் கதை	1	12	சித்திராபுத்திரன் கதை	0	12
புலந்திரன் தூது	1	12	துரோபதை குறம்	0	10
நந்தனார் கீர்த்தனை	1	8	மின்னொளியாள் குறம்	0	12
மதனகாமராஜன் கதை	1	8	மதுரைவீரன கதை	0	10
அபிமன்னன் சுந்தரிமாலை	1	8	கோவிலன் கதை	0	12
காத்தவராயசுவாமி கதை	1	8	ஆரவல்லி சூரவல்லி கதை	0	12
புவனேந்திரன் அம்மானை	1	8	ஏணியேற்றம்	0	10
கள்ளழகர் அம்மானை	1	8	கர்ணமகாராஜன் சண்டை	0	10
குசேலபகாவலி	1	0	சான்சாயபு சண்டை	0	12
அல்லியரசாணிமாலை	1	0	பொன்னுருவி மசக்கை	0	10
நளச்சக்கிரவர்த்தி கதை	1	0	மநுநீதிகாதல்	0	12
மயில்ராவணன் கதை	0	12	கதிரேசன் ஆனந்தக்களிப்பு	0	10
கருடபுராணம்	0	12	வாலிமோட்சம்	0	10
சதகண்டராவணன் கதை	0	12	ஸ்ரீரங்கமகத்துவம்	0	12
புரூரவச்சக்கிரவர்த்திகதை	0	12	ஏகாதசி மகத்துவம்	0	12
பஞ்சதந்திரக் கதை	0	12	தமிழறியும்பெருமாள் கதை	0	10
பவளக்கொடிமாலை	0	12	தெனாலிராமன் கதை	0	12
பாரதவிலாசம்	0	12	சிறுத்தொண்டன கதை	0	
பராங்குசதாசர் கீர்த்தனை	0	12	நல்லதங்காள் கதை	0	8

கிடைக்குமிடம்:—

சரஸ்வதி புத்தகசாலை,

நெ. 175, செட்டியார் தெரு, கொழும்பு